www.tamilarangam.net

களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 28-01-1994

அன்பளிப்பு 40P

**பார்வையிட்டனர்**

தமிழீழ விடுதலைப் புலிகளினால் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 54 சிங்களக் கைதிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்வையிட்டனர். பூநகரிக் கூட்டுப் படைத் தாக்குதலில் 16பேரும், மண்கிண்டிமலைத் தாக்குதலில் 3 பேரும் தமிழீழக் கடற்பரப்பில் சந்தேகத்தில் கைதான 4 மீனவர்களும் முன்பிருந்தே காவலில் இருக்கும் 31 பொலிசாரும் இதில் அடங்குவர்.

**சிகிச்சைக்காக விடுதலை**

பூநகரி கூட்டுப்படைத் தளத் தாக்குதலின்போது கைது செய்யப்பட்ட இராணுவத்தினரில் ஒருவருக்கு மேலதிக சிகிச்சை தேவைப்பட்டது. இதனால் மனிதநேய அடிப்படையில் இவரை, தலைவர் பிரபாகரன் விடுதலை செய்ய உத்தரவிட்டார். இவரை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைத்தார்.

# யுத்தத்திற்கான இறுதி ஏற்பாடுகளில் சிறீலங்கா!

## ☆ ஆயுதங்கள் நகர்த்தப்படுகின்றன
## ☆ ஆளணியினர் குவிக்கப்படுகின்றனர்
## ☆ குறுகிய கால — நீண்ட கால யுத்தமுனைப்புகள்

சிறீலங்கா அரசாங்கம் தனது படைகளை யுத்தத்திற்கான இறுதி ஏற்பாடுகளில் அதிவேகமாக ஈடுபடுத்தி வருவதாக, கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்த நவீன ஆயுதங்களைப் பெட்டிபெட்டியாக இரத்மலானை விமான நிலையத்திலிருந்து வடக்கு நோக்கி அனுப்பும் வேலைகளில் இராணுவ வாகனங்களும் விமானங்களும் ஈடுபட்டுள்ளன. அதேவேளை குடாநாட்டை நோக்கி பெருமளவிலான இராணுவத்தினரை பல்வேறு இராணுவ முகாம்களில் இருந்தும் குவித்துக் கொண்டிருப்பதாக, அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### இருவகையான யுத்தம்

சிறீலங்காவின் புதிய தளபதியாகக் கடமையேற்றுள்ள ஜெரி டி சில்வா நீண்டகாலதிட்டம், குறுகியகாலத்திட்டம் என்னும் அடிப்படையில் இருவகையான யுத்தங்களை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். குடாநாட்டின் மேல் அடிக்கடி தாக்குதல்களை நடாத்துவதென்பது, அவரின் குறுகிய காலயுத்தம் என்பதின் கருத்தாக உள்ளது. இவ்விதம் செய்வதன் மூலம் தமிழின அழிப்பை படிப்படியாக மேற்கொள்ளும் அதேவேளை, இவற்றில் பல தோல்விகளை சிறீலங்கா சந்திக்கலாம் என்பதை நன்கறிந்துள்ள சிறீலங்கா தலைமைப்பீடம், அத்தகைய நேரங்களில், குறுகிய காலயுத்தம்தான் கவலைப்படத் தேவையில்லை என அறிவிப்பதன் மூலம், சிறீலங்கா இராணுவத்தினருக்கும் சிங்களவர்களுக்கும் ஏற்படும் மனோநிலைத் தோல்வியைத் தவிர்க்கலாம் எனக் கருதுகிறது. ஆயினும், இக்குறுங்கால யுத்தம் எனும் புனைபெயரைப் பெறும் தாக்குதல்களிலும், சிறீலங்கா பாதுகாப்புப் படைகள் தமது முழுப் பலத்துடன்தான் இயங்கவுள்ளன என்பது வெளிப்படையான உண்மை. அதேவேளை நீண்டகால யுத்தம் என்ற போர்வையில், ஆயுதக் கொள்வனவுகளை அதிகரித்தல், பல்வேறான தடைகளை தமிழீழ மக்கள் மீது ஏற்படுத்தல். தமிழீழ மக்கள்மீது பொருளாதார, போக்குவரத்து முற்றுகைகளை இறுக்கி "மக்களுக்கெதிரான யுத்தத்தை" நடாத்துதல். விமானக் குண்டுவீச்சுக்கள், எறிகணை வீச்சுக்கள் மூலம் மக்களையும் குடியிருப்புகளையும் அவர்களின் நாளாந்த வாழ்க்கையையும் நாசமாக்குதல், குடாநாட்டுக்கு வெளியேயுள்ள தமிழீழப் பகுதிகளில் பிரதேசப் பிரிவினை உணர்வுகளை ஊக்கப்படுத்துதல், குறிப்பாக தென் தமிழீழத்தில் இராணுவ அடக்குமுறை, ஒடுக்குமுறைகளை வகைதொகையின்றி நடாத்துவதன் மூலமும், திடீரெனக் காணாமல்போவதை ஊக்குவிப்பதன் மூலமும், மக்களிடையே விரக்தி மனோபாவத்தை வளர்க்க முயற்சித்தல் போன்ற பல இன அழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இவைகளின் பின்னணியில் அரசியல் தீர்விற்கு முயற்சிப்பது போன்ற ஒரு பிரமையை, சிறீலங்காவின் சிங்கள பௌத்த பேரினவாத அரசியற் தலைமைப் பீடம் நடாத்திக் கொண்டிருக்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# "வடக்கையும் கிழக்கையும் பிரிப்போம் புலிகளை பேச அழைக்கின்றோம்"

## □ சிறீலங்கா பிரதமரின் புதிய ஏமாற்றுவித்தை

"இனப்பிரச்சினை தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் ஆலோசனைக்கமைய தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இரண்டு மாகாணங்களாகப் பிரிப்பதென்று சிறீலங்கா அரசு தீர்மானித்துள்ளது" என அக்குரஸ்ஸ தொகுதியில் சிறீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேசியுள்ளார். இதன்மூலம் சிறீலங்கா அரசாங்கம் தமிழர் தாயகத்தை துண்டாடுவதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டை உறுதிசெய்தார்.

அதேகூட்டத்தில், "இலங்கையின் அரசியல் அமைப்பில் திருத்தம் செய்வது தொடர்பாக ஆராய்ந்துவரும் எனது தலைமையிலான பாராளுமன்றத் தெரிவிக்குழுவுக்கு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பது சம்பந்தமான யோசனைகளை சமர்ப்பிக்குமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களுக்கு அழைப்பு விடுக்கிறேன். அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பலமுறை அழைப்பு விடுத்தோம். அவர்கள் அந்த அழைப்புக்களை ஏற்றுக் கொள்ளவில்லை, இறுதித்தடவையாக இப்போது அழைப்பு விடுக்கிறோம்" எனவும் பேசிய சிறீலங்காப் பிரதமர் அழைப்பு ஒன்றும் விடுத்தார். அத்துடன் "எமது ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கா, ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் அரசாங்கத்திற்கு அரசியல் தீர்வு காண்பதில் அக்கறையில்லை என்று விடுதலைப் புலிகள் தவறான கருத்தைப் பரப்பி வருகின்றனர். உண்மையில் அரசு, அரசியல் தீர்வுகாணும் முயற்சியிலேயே ஈடுபட்டுள்ளது" எனவும் சிறீலங்காப் பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ...



காந்தருபன் அறிவுச்சோலை குழந்தை ஒன்றுடன் தமிழீழத் தேசியத் தலைவர்.

# தமிழரின் மத — கலாச்சார உரிமை பாதிப்பு

## ✶ தேங்காயெண்ணெய்க்கும் தடை!

தமிழ் மக்களுடைய உணவு, எரிபொருள் ஆகியவற்றிற்கெல்லாம் படிப்படியாகத் தடையிட்டு வரும் சிறீலங்கா அரசாங்கம் தற்பொழுது மக்களின் உணவு, எரிபொருள் பாவனைக்கு உதவும் தேங்காய் எண்ணெய்க்கும் தடையிட்டுள்ளது.

தேங்காய் எண்ணெய் தமிழ் மக்களுடைய கலாச்சார வாழ்வுடனும் தொடர்புடைய ஒன்று. மாவீரர்கள், இறந்தவர்கள் போன்றவர்களுக்கு தேங்காய் எண்ணெய் சுட்டி விளக்கேற்றப்படுவதும், மங்கள காரியங்களில் குத்து விளக்கிற்கு தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்படுவதும், கோவில்களில் வழிபாட்டிற்கு தேங்காய் எண்ணெய் உபயோகிக்கப்படுவதும் வழமை. தேங்காய் எண்ணெயை தடை செய்வதினால் தமிழர்களின் மத-கலாச்சார உரிமைகளும் மறுக்கப்பட்டு வருகின்றன. மேலும் தேங்காய் எண்ணெயை தலையில் பூசி தலை வாருவதன் மூலம் இதனை உடல்நலம் பேணும் கருவியாகவும் தமிழ் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

சிறீலங்கா அரசாங்கம், புலிகள் தமது காயங்களுக்கு கற்பூரத்தை மருந்தாகப் பயன்படுத்துகிறார்கள் என்று கூறி கற்பூரத்திற்கு தடைவிதித்தது. இதனால் தமிழர்களின் தீபாராதனை முதல் நேர்த்தி வழிபாடுவரை பயன்படும் கற்பூரம் இல்லாததினால் ஆலயங்களில் பெரும் கஸ்டங்கள் ஏற்பட்டன. மத உரிமை மறுக்கப்பட்டதைக்கூட தமிழர்கள் தாங்கவேண்டிய அவலநிலை ஏற்பட்டது.

பின்னர் வெடிமருந்து பற்றாக்குறைக்கு தீக்குச்சித் தலையில் உள்ள மருந்தை விடுதலைப் புலிகள் பயன்படுத்துகிறார்கள் என 'முழங்காலிற்கும் மொட்டந் தலைக்கும் முடிச்சுப்போட்டு', பொது மக்களின் அத்தியாவசிய பாவனைப் பொருளான தீக்குச்சியைத் தடைசெய்தனர்.

இன்று தேங்காய் எண்ணெயையும் தடைசெய்யும் சிறீலங்கா அரசாங்கம், சுட்டி விளக்கு எரிக்கப்படுவதையும் அணைக்க முற்படுகிறது. இந்தத் தடை மூலம் கல்வி-கலாச்சார-மத உரிமைகள் பாதிப்படைகின்றன. மண்ணெண்ணெய் விளக்கொளியில் படிக்க முடியாத மாணவர்கள் தேங்காய் எண்ணெய் சுட்டி விளக்கொளியில் படித்து வந்தனர்.

மேலும் யாழ்ப்பாணத்தின் கைத்தொழில் பொருட்களில் ஒன்றான சவர்க்கார உற்பத்தி, தொழில் வாய்ப்பற்றவர்களுக்கு உழைப்புக்கான முயற்சியாகவும் இருந்து வருகிறது. இத்தகைய தேங்காய் எண்ணெயை மூலப்பொருளாகக் கொள்ளும் கைத்தொழில்களும் இதனால் பாதிப்படைய, தொழிலின்மை மேலும் அதிகரிக்கும். ■

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இரு புதிய பிரச்சாரங்கள்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை, 'பயங்கரவாதப் பிரச்சினை' எனவும் இந்து தமிழர்களுக்கும் பௌத்த சிங்களவர்களுக்குமிடையிலான உள்நாட்டுப் போர் எனவும் கூறி, இரு புதிய பிரச்சாரங்களை சிறீலங்கா அரசாங்கம் உலகெங்கும் முடுக்கிவிட்டுள்ளது.

"கொழும்பில் இரண்டு இலட்சம் தமிழர்கள் சிங்களவர்களுடன் சுமுகமாக வாழ்கின்றனர். எனவே இலங்கையில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் இனப்பிரச்சினையேயில்லை, பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு. அதனை இராணுவத் தீர்வால் அடக்கி ஒடுக்கிவிடலாம் என்பது டிங்கிரி பண்டா விஜயதுங்காவின் கீதாபதேசம்.

தமிழர்களின் ஆதிபத்திய உரிமை, தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமை இவைகளை எல்லாம் கருத்தில் கொள்ளாது, தமிழர்களை வந்தேறு குடிகள் எனவும் அவர்கள் இலங்கை எங்கும் பரந்து காணப்படுகிறார்கள் எனவும் சிறீலங்கா அரசாங்கம் புதிய வரலாறு இயற்றுகிறது.

கொழும்பு வாழ் தமிழர்களைச் சுட்டிக்காட்டி இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் கொழும்பில் தம்முடன் வாழ்கின்றனர் எனக் கூறும் அரசாங்கம், தினமும் இத் தமிழர்கள் ஆயுத முனையில் மரண பயத்துடன் வாழ்கின்றனர் என்ற உண்மையை மறைக்கிறது. பௌத்த சிங்கள வெறியர்களின் தாக்குதல்களும் கொழும்பில் குறைந்தபாடில்லை. சமீபத்தில் நான்கு தமிழ் முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்டுள்ளமை இன அழிப்பு உணர்வு தொடர்வதன் நிகழ்காலச் சான்றுகள்.

மேலும் சிறீலங்கா அரசாங்கம் கொழும்பை மையப்படுத்தி தொழில், கல்வி வசதிகளை வைத்திருந்தமையினாலேயே தொழில் குடியேற்ற வாசிகளாக தமிழர்கள் கொழும்பில் செறிவடைந்தனர். இன்று வடக்கு -கிழக்கில் மக்களின் வங்கி வசதி, வெளிநாட்டு பிரயாண முகவர் வசதி, மருத்துவ வசதி போன்ற பல வசதிகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே மக்கள் கொழும்பை நாடிச் செல்கின்றனர். எனவே தமிழர்களின் குடிசன செறிவை ஐதாக்கும் நோக்கில் இயங்கும் சிறீலங்கா அரசாங்கத்தின் செயற்பாடே கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழ்வது போன்ற பிரமையை தோற்றுவித்துள்ளது.

வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர்கள் கொழும்பின் பாதுகாப்பின்மையை புலப்படுத்தத் தவறியதினால், இன்று சுவிஸ் அரசாங்கம் சிறீலங்கா அரசாங்கத்துடன் அகதிகளை திருப்பி அனுப்புவது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இதைத் தொடர்ந்து வேறு நாடுகள் சிலவும் இத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கக்கூடும் என எதிர்வு கூறப்படுகிறது. எனவே புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமது நாட்டின் நிலைமையையும், கொழும்பின் பாதுகாப்பு இன்மையையும் வெளிநாடுகளில் உள்ள சர்வதேச மக்கள் தொடர்பு சாதனங்களுக்கு வெளிப்படுத்துவதன் மூலமே உண்மையை உலகுக்கு உணர்த்தலாம்.

தமிழ் மக்கள், இலங்கைத்தீவின் வடக்கையும் கிழக்கையும் தாயகமாகக் கொண்ட மக்கள் ஆவர். சமீபத்தில் K. N. O. தர்மதாசாவும், S. W. R. De A. சமரசிங்கியும் எழுதிய சிறீலங்காவின் ஆதிகுடிகள் பற்றிய ஆய்வில் (THE VARISHING ABORIGINES -SRI LANKA VEDDASIN TRANSITITION) வாழைச்சேனையை அடுத்த மட்டக்களப்பு பிரதேசத்தில் இலங்கைத்தீவின் ஆதிக்குடிகளான வேடர் இன தொடர்ச்சியுடைய மக்கள் அதிகம் காணப்படுவதாகவும் இவர்கள் தமிழ் மொழி பேசுகிறார்கள் எனவும் கூறுவது வடக்கு மட்டுமல்ல கிழக்கும் தமிழர் தாயகம் என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறது. இந்த கருத்துவத்தை உடைப்பதே இன்றைய சிறீலங்காவின் ஒரே நோக்காக உள்ளது. இதற்காகவே தமிழர்கள் பூர்வீகத்தன்மையுள்ள பழங்குடிகள், அவர்களுக்கு வடக்கு -கிழக்கில் ஆதிபத்திய உரிமை உண்டு என்பதை கருத்தில் கொள்ளாது, கொழும்புத் தமிழனும் தமிழீழத் த்மிழனும் ஒன்றாக வாழும் இடத்திலேயே சிறீலங்கா பேதம் காட்டுகிறது. ஆனால் 1983 இல் பௌத்த சிங்கள வெறித்தனம் உச்சக்கட்டமாக இருந்த போது கொழும்பில் அகதிகளாக்கப்பட்ட தமிழர்கள் அவர்களது தாயக பூமியான வடக்கு கிழக்கு நோக்கி பாதுகாப்புக்காக அனுப்பி வைக்கப்பட்டனர் என்பது வரலாற்று உண்மை.

அவ்வாறே கொழும்பில் தமிழர் பரந்து வாழ்கின்றதை சுட்டிக்காட்டி, தமிழர் பிரச்சினையை பல்லின (MULTI ETHNIC) பிரச்சினை எனக் காட்டவும் சிறீலங்கா முயற்சிக்கிறது. அத்துடன் தமிழ்த் தேசிய இனத்துக்கும் சிங்கள தேசிய இனத்துக்கும் இடையிலான பிரச்சினைக்கு மதசார்பான கலகம் என்ற முத்திரை குத்தவும் சிறீலங்கா முயற்சிக்கிறது. இந்து ஆலயங்கள் -இந்துக்கள் மட்டுமல்ல, கிறிஸ்தவ ஆலயங்கள் -கிறிஸ்தவர்களும் தாக்கப்படுவது வழமை. கிறிஸ்தவ திருவழிபாட்டுக்கான பாஸ்கா மெழுகுதிரி கொண்டு சென்ற மன்னார் ஆயரையும் சிறீலங்கா இராணுவம் தடுத்துவைத்துத் தாக்கியது. எனவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மதத்தன்மை முக்கியமல்ல, தேசியத் தன்மையே முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. வடஅயர்லாந்துப் பிரச்சினை போன்றதே தமிழீழப் பிரச்சினையும். எனவே ஒற்றையாட்சிக்குட்பட்ட அதிகாரப் பரவலாக்கத்தால் தீர்வு காணலாம் என உலகுக்குக் காட்டவும், தமிழரிடையே இந்து -கிறிஸ்தவ மத உணர்வுகளை விரிசலடையச் செய்யவும் சிறீலங்கா தொடுக்கும் பிரச்சாரமே, பௌத்த சிங்களவரை இந்து தமிழர் எதிர்த்து நடாத்தும் 'உள்நாட்டுக் கலகம்' என்னும் சொற்றொடர் ஆகும். ஆயினும் உலகு எமது பிரச்சினையில் அறிவார்ந்த நிலையில் மிக விழிப்பாக உள்ளது என்பதற்கு தமிழரின் தேசியத்துவத்தையும் தமிழரின் சுயநிர்ணய உரிமையையும் ஆதரித்து வெளிவரும் அறிவார்ந்த ஆய்வுக் கட்டுரைகளே சான்றாக உள்ளன. ■

## வெளிநாடுகளில் விடுதலை எதிர்ப்புச் செயற்பாடுகள்
## அதற்குத் துணைபோகும் தமிழ்க்குழுக்களின் உதிரிகள் சில

தமிழீழ மக்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில், தமிழீழ விடுதலைக்கு எதிரான செயற்பாடுகளை முடுக்கிவிட எதிரிகள் திட்டமிட்டுள்ளதாக நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன. தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக, தமிழ் மக்கள் அணிதிரண்டு வருவதைக் குழப்புவதும், சதிநாசகாரச் செய்திகளின் மூலம் அந்தந்த நாட்டு அரசாங்கங்கள் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல்கொடுப்பதைத் தடுப்பதும் அவர்களின் நோக்கமாக உள்ளது.

விடுதலைப் போர் வெற்றிப் பாதையில் செல்லுகின்ற நிலையிலும், வெளி நாடுகளில் வாழும் தமிழ் மக்கள், தங்கள் தற்காலிக இருப்பு நிலையை உணரச் செய்யத்தக்க சம்பவங்கள் அதிகரித்துவரும் நிலையிலும், தமிழீழ விடுதலையே நிரந்தரமான விடிவைத் தமக்குக் கொண்டுவரும் என தமிழ் மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

அந்த உணர்வின் அடிப்படையில், தமிழீழப் போராட்டத்திற்கான ஏகோபித்த ஆதரவையும் வெளிப்படுத்தத் தலைப்பட்டுள்ளனர். இதனைப் பொறுக்கமாட்டாத எதிரிகளின் நடவடிக்கைகள் வெளிநாடுகளில் அதிகரித்து வருவது அவதானிக்கப்பட்டுள்ளது. முக்கியமாக சிறீலங்கா அரசாங்கம் வெளிநாடுகளில் இது தொடர்பான பிரச்சார நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. மேலும், சிறீலங்கா அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டுக்கொண்டிருக்கும் தமிழ்க்குழுக்களின் உதிரிகள் சில, வெளிநாட்டு நடவடிக்கைகளுக்காக கூலிகளாக அமர்த்தப்பட்டுள்ளமையும் அறிய வந்துள்ளது. இவ்வுதிரிகள் பிரசுரங்களை வெளியிடுதல், சுவரொட்டிகளை ஒட்டுதல் போன்ற செயல்களில் அரச சார்புப் போக்கினை கைக்கொண்டு வருகின்றன.

அதேவேளை, சந்தர்ப்பங்களை அனுசரித்து அவ்வப்போது நாசகார நடவடிக்கைகளிலும் ஈடுபட இவை தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது. இந்நாசகார செயற்பாடுகள் குறித்து அவ்வவ்நாட்டு காவல்துறைக்கும் அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது. தமிழீழ விடுதலை செயற்பாடுகளை வெளிநாடுகளில் பலவீனப்படுத்துவதும், அதன் மூலம் தமிழீழ மக்களின் விடுதலையை நசுக்குவதையுமே நோக்கமாகக் கொண்ட இச்சதிச் செயலில், தமிழ்க்குழுக்களின் உதிரிகள் சில முனைந்து செயற்படுவது குறித்து, தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. ●

■ வளவன்

# விமானத் தாக்குதலைக் குழப்பும் பலத்தை புலிகள் பெற்றுவிட்டனர்!

■ பூநகரி சமரில் பங்குபற்றிய இராணுவ அதிகாரி தெரிவிப்பு

பூநகரி - நாகதேவன்துறைக் கூட்டுத் தளத்தில் புலிகள் கைப்பற்றிய விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மூலம், எதிர்காலத்தில் வான் தாக்குதல்களை குழப்பியடிக்கும் பலத்தை விடுதலைப் புலிகள் பெற்றுவிட்டனர் என வடபகுதிக் கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். "தமது முக்கிய தாக்குதல் ஊடகமான வான் தாக்குதல்களை குழப்பியடிக்கக் கூடிய வல்லமையை புலிகள் பெற்றுள்ளமை வருங்கால இராணுவ நடவடிக்கைகளுக்கு பெரும் சவாலாக அமையும்" என அவர் மேலும் தெரிவித்தார்.

பூநகரி மோதலில் பங்குபற்றிய அவர், கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் மேலும் குறிப்பிடுகையில்;

"வடக்கில் வருங்காலத்தில் எடுக்கப்பட இருக்கும் இராணுவத் தாக்குதல்களுக்கு பூநகரி - நாகதேவன்துறை முகாம்கள் புலிகளால் அழிக்கப்பட்டமை பெரும் இக்கட்டானதோர் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளதாகவும், ஒரு பெரும் நவீன படைப் பிரிவுக்குத் தேவையான இராணுவ தளபாடங்களை புலிகள் கைப்பற்றி வைத்துள்ளனர்" எனவும் கூறினார்.

"வடபகுதி மேல் குறிப்பாக குடாநாட்டின் மீது எடுக்கப்பட இருக்கும் இராணுவ நடவடிக்கைகளுக்கு பூநகரி -நாகதேவன் துறை முகாம்கள் புலிகளால் தகர்க்கப்பட்டு அழிக்கப்பட்டமை மிகவும் பாரதூரமானதோர் இக்கட்டான சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது.

ஒரு நவீன பெரும் படைப்பிரிவுக்கு ஏற்ற தளபாடங்கள், கனரகத் துப்பாக்கிகள், இதர ஆயுதங்கள் ஆகியவற்றை போதியளவு புலிகள் தற்போது தம்வசம் வைத்துள்ளார்கள் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

எமது வருங்கால இராணுவ நடவடிக்கைகளுக்கு இது பெரும் சவாலாக அமைந்துள்ளது. இதற்குரிய காரணம் என்னவென்றால், எமது முக்கிய தாக்குதல் ஊடகமான வான் தாக்குதல்களை புலிகளால் இப்பொழுது குழப்பியடிக்க முடியும் என்பதே. இதுவரை காலமும் எம். 17 உலங்கு வானூர்திகளைப் பாவித்து மூன்று படையணிகளை இவற்றின் மூலமாக எடுத்துச் சென்றோம். அதுவும் புலிகளின் விமான எதிர்ப்புகளுக்கு எட்டாத உயரத்தில்தான் இது சாத்தியமானது" என்றும் அவர் அப்பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். ■

# ரெலோ தேசவிரோதிகளால் சிறுவர்கள் கடத்தல்

■ ஆயுதப் பயிற்சிபெற வற்புறுத்து

கொழும்பிலும், தென்தமிழீழப் பகுதியிலும் ரெலோ தேசவிரோதிகளால் பிடிக்கப்பட்ட தமிழ்ச் சிறுவர்களுக்கு பலவந்தமாக ஆயுதப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

வவுனியா ஜோசப் இராணுவ முகாமிற்கு அடுத்த காட்டுப் பகுதியில் வைத்தே இப்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பத்து வயதிற்கும் பதினைந்து வயதிற்கும் இடைப்பட்ட வயதினையுடைய சிறுவர்களே இப்பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். வறுமையின் காரணமாக தம்மைத் தம் பெற்றோரால் பணம் கொடுத்து மீட்டெடுக்க முடியாத நிலையில் தாம் இவ்வாறு துன்பங்களுக்கு ஆளாகி வருவதாக ஆயுதப் பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் சிறுவர்கள் அழுதவாறு பொதுமக்களிடம் கூறினர்.

கொலை, கொள்ளை மற்றும் தேசவிரோத வேலைகளில் ஈடுபடுத்தவே இவர்களுக்கு ரெலோ தேசவிரோதிகள் பலவந்தமாக ஆயுதப் பயிற்சிகள் வழங்குவதாகத் தெரியவருகின்றது. ■

## யாழ். பயணம்

கொழும்பு பேராயர் கலாநிதி நிக்லஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு விமானம் மூலம் யாழ் செல்கிறார். இவருடன் மட்டக்களப்பு - திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும், வண. பிதா அல்பிரட் அலெக்சாண்டரும் உடன் செல்கிறார்கள். மூன்று நாட்கள் தங்கியிருக்கும் இவர்கள் அங்குள்ள குண்டுவீச்சுக்களால் சிதைந்த ஆலயங்களையும் பார்வையிட உள்ளனர். ■

## பாரிஸ் ஈழநாடு எரிப்பை கவலையுடன் கண்டிக்கின்றோம்

பாரிஸ் ஈழநாடு பத்திரிகை காரியாலயம் குண்டுவீசித் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டதாகச் செய்தி கேட்டு, நாம் ஆழ்ந்த கவலையும் வேதனையும் அடைவதுடன், இத்தகைய சமூக விரோத சக்திகளுக்கு எமது வன்மையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றோம். புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களிடையே அமைதியீனத்தை ஏற்படுத்தவும் தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச ரீதியில் தமிழர்களால் அளிக்கப்படும் அங்கீகாரத்திற்கும், ஆதரவுக்கும் பங்கம் விளைவிக்கவும் முற்படும் சக்திகளே இத்தகைய விசமத்தனமான செயல்களில் ஈடுபட்டு இருப்பார்கள் என நம்பும் நாம், சர்வதேச தமிழர்களை விழிப்புணர்வுடன் செயலாற்றும்படி வேண்டுகோள் விடுக்கின்றோம். (ஆ -ர்) ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாக்குதல் குறித்த அச்சத்தினால் இராணுவ முகாம்கள் வாபஸ்

## ■ மன்னார் சிறப்புத் தளபதி ஜான் விபரிப்பு

விடுதலைப் புலிகள் தாக்குதலை நடத்துவர் என்ற அச்சத்தினாலும், பூநகரியில் கொல்லப்பட்ட -காயமடைந்த படையினருக்கு பதிலாக படையினரை ஈடுபடுத்தவுமே சிலாவத்துறை, கொண்டச்சி முகாம்களை கைவிட்டு சிறீலங்காப் படைகள் வெளியேறியுள்ளனர் என மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி ஜான் அவர்கள், புலிகளின் குரல் வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

மண்கிண்டிமலை முகாம் தகர்க்கப்பட்டமை சிறீலங்கா இராணுவத்திற்கு கொடுத்த தாக்கத்தினால், 20 மைலுக்கும் கூடுதலான இடத்திலிருந்து இராணுவத்தை விலக்கியது. தற்போது பூநகரிக் கூட்டுத்தளம் அழிக்கப்பட்டமை அரசுக்கு கொடுத்த தாக்கமே சிலாபத்துறை, கொண்டச்சி முகாம்களில் இருந்து இராணுவத்தை எடுக்க வேண்டிய நிலையைத் தோற்றுவித்துள்ளது.

சிலாபத்துறை, கொண்டச்சி இராணுவ முகாம்களை விடுதலைப் புலிகள் சுலபமாக தாக்கி அழித்துவிடுவர் என்பது இராணுவத் தலைமைக்கு தெரிந்திருந்தது. அத்துடன் பூநகரியில் கொல்லப்பட்ட, காயமடைந்த ஆயிரக்கணக்கான படையினருக்கு ஈடாக ஆட்கள் தேவைப்படுகின்றனர். அதற்காக ஆட்களை நிரப்புவதும் இதனின் ஒரு நோக்கமாகும். சிலாபத்துறை, கொண்டச்சி முகாம்கள் 6 மைல் விஸ்தீரணம் கொண்டவை. இவற்றிலிருந்து இராணுவம் வெளியேறியமையினால் முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 36 கிராமங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. மன்னார் பெருநிலப் பரப்பில் இராணுவ அச்சுறுத்தல் இல்லாமல் போயுள்ளது.

கேந்திர முக்கியத்துவமான சிலாபத்துறை எல்லா வளங்களையும் கொண்டிருந்ததால், அரசு இங்கு குடியேற்றங்களை நிறுவி அதற்கு பாதுகாப்பாக சிலாபத்துறை முகாமை அமைத்தது. இங்கு இராணுவத்தால் 60-00 க்கு மேற்பட்ட தென்னைகள் அழிக்கப்பட்டுள்ளன. இப்பகுதி சுடுகாடு போல் உள்ளது எனவும் ஜான் மேலும் தெரிவித்தார். ■

குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடாத்திய

# சிறீலங்கா 'டோரா' பீரங்கிப்படகு மீது காவல்துறையினர் எதிர்த் தாக்குதல்

வடமராட்சிக் கடற்பரப்பில் தாக்குதல் நடாத்தியவாறு கரையை நோக்கி விரைந்து வந்த சிறீலங்காக் கடற்படையின் பீரங்கிப் படகை, தமிழீழக் காவல்துறையினர் விரட்டியடித்தனர்.

அண்மையில் மாலை நேரம் ஒன்றில், சிறீலங்காக் கடற்படைக்கு சொந்தமான 'டோரா' பீரங்கிப் படகு ஒன்று நாகர்கோவில் பிரதேச மக்கள் குடியிருப்புக்களை நோக்கி, துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறு கரையை அண்மித்துக் கொண்டிருந்தது. அவ்வேளை, கரையோரக் காவல் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழீழக் காவல்துறை நாகர்கோவில் பணிமனை உறுப்பினர்கள் இப்பீரங்கிப் படகின் மீது தாக்குதலை மேற்கொண்டனர். காவல்துறையினரின் எதிர்த் தாக்குதலை அடுத்து, கடற்படைப் படகு பின்வாங்கிச் சென்றது. இத்தாக்குதலில் தமிழீழக் காவல்துறையினர் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் கடற்படையினருக்கு ஏற்பட்ட சேத விபரம் தெரியவில்லை. ■

# வரைபடங்களைத் தயாரிக்க வெளிநாட்டு வரைஞர்கள்

சிறீலங்கா இராணுவத்தின் நகர்வுத் திட்டங்கள் விடுதலைப் புலிகளுக்கு முன்னரேயே தெரியவந்து விடுவதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன. சிறீலங்கா இராணுவத்தின் வலயங்கள், நகர்வுத் திட்டங்கள் பற்றிய வரைபடங்கள் பலவும் முன்கூட்டியே தெரியவந்து விடுவதாகவும், இதனைத் தடுக்கும் வகையில் மாற்று நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும் எனவும் எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன.

காணி அமைச்சினால் மிகவும் இரகசியமான முறையில் தயாரிக்கப்படும் இப்படங்கள் விடுதலைப் புலிகளுக்குக் கிடைப்பதைத் தடுக்கும் வகையில், இனிமேல் இவை வெளிநாட்டு வரைஞர்களைக் கொண்டு தயாரிக்கப்படுவதற்கு ஆலோசிக்கப்படுவதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன. பாதுகாப்பு அமைச்சின் இக்கோரிக்கையை நிறைவேற்றுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. ■

# வெள்ளத்தில் சிக்கியிருந்த மக்கள் புலிகளால் மீட்பு

மன்னாரில் வெள்ளத்தில் சிக்கியிருந்த சுமார் இருநூறு குடும்பங்களை விடுதலைப் புலிகளின் விசேட மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர்.

மன்னார் பள்ளமடுப் பகுதியில் உள்ள வலப்பாடு, தவசிக்குளம் கிராமங்களைச் சேர்ந்த மக்களையே படகுகள் மூலம் மீட்புக் குழுவினர் மீட்டுள்ளனர்.

தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக இக்கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியதில், ஐம்பதுக்கும் அதிகமான வீடுகள் இடிந்து வீழ்ந்துள்ளன. போக்குவரத்துப் பாதைகள் வெள்ளத்தில் மூழ்கிப் போயிருந்தன. போக்குவரத்துத் தடைப்பட்டமையால் இவர்கள் அங்கு சிக்கியிருந்தனர். ■

# மடு முகாம் மக்களுக்கு உணவு அனுப்ப மறுப்பு

மடுப்பகுதியிலுள்ள மக்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்க சிறீலங்கா புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு மறுப்புத் தெரிவித்துள்ளது.

மடுப்பகுதியிலுள்ள திறந்தவெளி அகதி முகாம், இராணுவக் கட்டுப்பாட்டுக்கு அப்பால் இருப்பதால் அங்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைக்க முடியாது என்று சிறீலங்காவின் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஏற்கனவே கூறியுள்ளது. கடந்த ஆகஸ்ட் மாதத்தின் பின்னர் ஒரே ஒரு தடவை மட்டுமே அங்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்தப் பகுதியில் முப்பதினாயிரத்துக்கும் அதிகமான மக்கள் தங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. ■

# இராணுவம் அனுமதி மறுப்பு; நோயாளி மரணம்

வவுனியாவுக்கு அவசர சிகிச்சைக்காக கொண்டு செல்லவிருந்த நோயாளி சிறீலங்கா இராணுவத்தினரின் அனுமதி மறுப்பினால் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தண்ணீரூற்றைச் சேர்ந்த நோயாளியே உயிரிழந்தவராவர்.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கொண்டு சென்ற இந்த நோயாளிக்கு தாண்டிக்குளத்தில் வைத்து இராணுவம் அனுமதி வழங்க மறுத்தமையால், வவுனியாத் தடை முகாமிலேயே உயிரிழந்தார். ■

# இன்று சமாதானம் பற்றிப் பேசுவது தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம்

## ■ ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவிப்பு

"இன்றைய சூழலில் யாழ்ப்பாணம் செல்லும் நான் மீண்டும் சமாதானம் பற்றிப் பேசப் போவதில்லை. தற்போதைய நிலையில் சமாதானம் பற்றி நான் யாழ்ப்பாணத்தில் பேசினால், அது தமிழ் மக்களுக்கு நான் செய்யும் துரோகமாக அமைந்து விடும்" இவ்வாறு ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆயரின் யாழ்ப்பாண விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைக் கவனித்துவரும் யாழ். மதகுரு ஒருவருக்கே ஆங்கிலத் திருச்சபையின் ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் ஒருவாரம் வரை வன்னிப் பிராந்தியத்திலும் ஏழாம் திகதி முதல் பதின்நான்காம் திகதி வரை யாழ்ப்பாணத்திலும் ஆயர் கென்னத் பெர்னாண்டோ தங்கியிருப்பார்.

இவ்வாறு வடபகுதியில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் மீண்டும் சமாதான முயற்சிகளில் நீங்கள் ஈடுபடுவதற்கு முயற்சிப்பீர்களா? என்று கேட்கப்பட்ட போதே ஆயர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

# பீரங்கிப் படகு கொள்வனவில் 4 கோடி அதிகாரிகள் மட்டத்தில் மோசடி

கடற்படைக்கு மூன்று பீரங்கிப் படகுகள் வாங்குவது சம்பந்தமாக சிறீலங்கா பாதுகாப்பு அதிகாரிகள் வட்டாரத்தில் பெரும் தில்லுமுல்லுகள் இடம்பெற்றிருப்பதாக தெரியவருகின்றது.

'ரெண்டர்கள்' மூலம் மூன்று ஸ்தாபனங்கள் தங்கள் விலை, விபரங்களையும் படகுகளின் இதர விபரங்களையும் சமர்ப்பித்திருக்கின்ற போதிலும் 40 மில்லியன் ரூபா கூடுதலாகக் கோரிய இஸ்ரேலிய ஸ்தாபனத்திற்கு கொள்வனவு கட்டளை வழங்குவதாக உயர் அதிகாரிகள் விருப்பம் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது. கடற்படை இரண்டு இருபது மில்லி மீற்றர் பீரங்கிகளும், 12X7 மி.மீற்றர் கனரக துப்பாக்கிகளும் பொருத்தப்பட்ட ஆழமில்லாத தண்ணீரில் ஓடக் கூடிய அதிவேகப் படகுகளைக் கோரியிருந்தது.

கொரிய ஸ்தாபனம் ஒன்று 3.7 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பீரங்கிப் படகுகளின் விபரங்களையும், கொழும்பு டொக்யார்ட் நிறுவனம் 3.66 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பீரங்கிப் படகுகளின் விபரங்களையும் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்தது.

ஏனையவற்றை விட 40 மில்லியன் ரூபா கூடுதலான இஸ்ரேலிய பீரங்கிப் படகுகளை கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சு உடன்பட்டுள்ளது. ■

# சிறீலங்காவின் எதிர்காலம் அழிவுறுமா? ஆண்டு 10 பரீட்சையில் வினா.

## ■ கேள்வி தயாரித்தவர் கைது

பாடசாலை வகுப்பேற்றப் பரீட்சையில் அரசுக்கு ஆத்திரமூட்டும் வினாத்தாளைத் தயாரித்த ஆசிரியரும் ஆசிரிய ஆலோசகரும் அநுராதபுரப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமத்திய மாகாணக் கல்வித் திணைக்கள வகுப்பேற்றப் பரீட்சை 1993 சிங்கள மொழியும் இலக்கியமும் என்ற ஆண்டு 10 வினாத்தாளிலேயே சிறீலங்கா அரசுக்கு எதிரான வினா இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. வினா ஒன்று 'பி' என்ற இலக்கத்தைக் கொண்ட வினா வருமாறு:

வடக்கு யுத்தத்தினால் எரிந்து கொண்டிருக்கிறது. தெற்கிலும் இரத்தம் சிந்தும் சம்பவங்கள் நிறைய நடக்கின்றன. முழுநாடும் எதிர்காலத்தைப் பற்றிய ஒரு நிச்சயமற்ற தன்மைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொறுப்பிலுள்ளவர்கள் எதைப் பற்றியும் விழிப்பாக இல்லை. நாடு முழுவதும் வெளி நாடுகளுக்கு அடகு வைக்கப்பட்டுள்ளது. நாடே துண்டு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாரிய தொழில் நிறுவனங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதால் பொருளாதாரம் சீர்குலைந்துவிட்டது.

மேற்படி பந்தியை வாசித்து 'சிறீலங்காவின் எதிர்காலம் அழிவுறுமா?' என்ற தலைப்பில் பாடசாலை சஞ்சிகை ஒன்றுக்கு கட்டுரை எழுதும்படி வினா அமைக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர் தயாரித்த இந்த வினாவை, ஆசிரியர் ஆலோசகர் அனுமதித்த குற்றத்துக்காகவே அவரையும் பொலிசார் கைது செய்துள்ளனர். ■

## வெள்ள நிவாரணநிதி புனர்வாழ்வுக்கழக அவசர வேண்டுகோள்

தமிழீழத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகளால் துன்புறும் எம்மக்கள் மேலும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். வீடுவாசல் இழந்தும், நோய்களினால் பாதிக்கப்பட்டும், பயிரழிவுகள், கால்நடை அழிவுகள் என்பவற்றிற்கு ஆளாகியும் தவிக்கும் மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேலதிக உதவிகளை அளித்து வருகின்றது. இதனால் வழமையான புனர்வாழ்வு பணிகளுடன் மேலதிக சுமைகளையும் ஏற்கவேண்டிய இக்கட்டானநிலை நிலவுகிறது. எனவே எமது உடன்இரத்தங்களுக்கு உயிரளிக்கும் வாழ்வளிக்கும் பணியில் சர்வதேசத்திலும் வாழும் தமிழர்களை உடன் இணையும்படி தமிழர் புனர்வாழ்வுக்கழக சர்வதேசப் பணிமனை அவசர வேண்டுகோள் விடுக்கின்றது. நிதியுதவி, பொருளுதவி செய்ய விரும்புவோர் உங்கள் நாடுகளில் உள்ள புனர்வாழ்வுக்கழக கிளையுடன் உடன் தொடர்பு கொள்ளுங்கள். ■

# புத்தளத்தில் 30 தமிழர்கள் பொலிசாரால் கைது

புத்தளம் மாவட்டத்தில் முப்பது தமிழர்கள் சிறீலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் புத்தளம் மாவட்டத்தினுள் ஊடுருவி இருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிசார் கூறியுள்ளனர்.

புத்தளம், கற்பிட்டி, இலவன்குளம் முதல் மன்னார் வரையிலான இடங்களில் விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர் ஊடுருவி இருப்பதாகவும், இப்பகுதியில் உள்ள சிங்களவர் மற்றும் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவப் பாதுகாப்புக் குறித்த தகவல்களைத் திரட்ட இவர்கள் முயற்சித்ததாகவும் பொலிசார் கூறியுள்ளனர். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சுதந்திரத்தைத் தேடி



நானும் சுதாவும் ஆறாம் வகுப்பிலிருந்து ஒன்றாகவே, ஒரே வகுப்பிலேயே படித்தோம். இரண்டு பேரும் இணைபிரிவதேயில்லை. அவளுக்குக் காய்ச்சல் வந்தால் எனக்கும் காய்ச்சல் காயும். எனக்குத் தலையிடி வந்தால், அவளுக்கும் தலையிடிக்கும்.

எங்கே போவதென்றாலும் இரண்டு பேரும் ஒன்றாகத்தான் போவோம். போகும் வழியெல்லாம் அவள் பல கதைகளும் சொல்லிச் சிரித்துக் கொண்டே வருவாள். மிக மோசமான பகிடிகள்கூட விடுவாள். அப்படியான நேரங்களில் எல்லாம் நான் மௌனமாக நிற்பதுதான் வழக்கம். ஏனென்றால் அதுவரை காலமும் இப்படியான பகிடிகளை நான் கேள்விப்பட்டதும் இல்லை; இப்படியான பகிடிகள் விடும் பிள்ளைகளைக் கண்டதும் இல்லை; என் வீட்டில் கூட இப்படி யாரும் கதைப்பதை நான் கேட்டிருக்கவில்லை.

மௌனமாக நிற்கும் என்னைப் பார்த்து அவள்,

"நீ என்னடி பேசாமல் நிற்கிறாய்?" என்று கேட்பாள். எனக்கு இவளது கதைகளைக் கேட்க அதிசயமாகவும் இருக்கும்; கவலையாகவும் இருக்கும்.

'இவள் சரியான குளப்படியாக இருக்கிறாளே, என்னண்டுதான் நாளைக்கு நல்ல மாக்ஸ் எடுக்கப் போகிறாள்?'

என்று என் மனதுக்குள் அடிக்கடி கேள்விகள் எழும். ஒருநாள் நாங்கள் கல்வி கற்ற தனியார் கல்வி நிறுவனத்தில் ஒரு பரீட்சை நடாத்தப்பட்டது. அந்தப் பரீட்சையில் சுதாதான் ஆகக் கூடுதலான புள்ளிகளைப் பெற்றாள். நான் அவளைப் பற்றி தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன் என்பது எனக்கு அப்போதுதான் புரிந்தது. அவளுக்கு விளையாட்டும் விளையாட்டுத்தான்; படிப்பும் படிப்புத்தான்.

இவளது கலகலப்பான சுபாவத்தால் கவரப்பட்ட இளம் வாலிபர்கள் இவளுக்கு முன்னும் பின்னும் வருவார்கள். இவளைக் கேலி செய்து வம்புக்கு இழுப்பார்கள். நாங்கள் அவளை,

"என்னடி, உனக்கு முன்னுக்கும் பின்னுக்கும் ஒரே ஆட்களாக இருக்குது. ஏதோ, எல்லாம் நல்லபடியாக நடந்தால் சரிதான்"

என்று எங்கள் பங்குக்கு கேலி செய்வோம். அதற்கு அவள்,

"நானா வரச்சொன்னேன்? எனக்கு வேற வேலை இல்லையா? உனக்கு வேணுமெண்டால் அதில ஒரு ஆளைப்பாரன், அதில என்னடி வந்தது?".

என்று சொல்லிவிட்டு, நல்ல பிள்ளைபோல் இருந்துவிடுவாள். ஆனால் அந்த இளைஞர்கள் ஒவ்வொருவரின் செயலையும் பார்த்து ஒவ்வொரு மாதிரிக் கேலி செய்வாள். நான் இவளது குறும்பைப் பார்த்து பல தடவைகள் இரசித்ததுண்டு. பள்ளியில் படிக்கும்போது பல தடவைகள் தேவையில்லாமலேயே சிறு சிறு சண்டைகள் பிடிப்போம். ஆகக் கூடியது மூன்று நாட்கள் வரையில் கதைக்காமல் இருப்போம். அதன் பின்னர் கதைத்துவிடுவோம்.

* * * * *

ஒரு முறை தனியார் கல்வி நிறுவனத்தில் விஞ்ஞான ஆசிரியர், மூலகங்களைப் பற்றிப் படிப்பித்தபோது, எங்களுக்கு அது விளங்கவில்லை. இவள், எங்களுக்கு விளங்கக் கூடியமாதிரிச் சொல்லித் தருமாறு ஆசிரியரைக் கேட்டாள்.

சில மூலகங்களின் பெயர்களையும் சூத்திரங்களையும் நினைவில் வைத்திருப்பதற்காகச் சில நகைச்சுவையான வசனங்களைச் சொல்லித் தருவது ஆசிரியர்களது வழக்கம். இந்த மூலகங்களைப் பற்றி எங்களுக்கு விளக்கிவிட்டு, அதை நினைவில் வைத்திருப்பதற்காக ஆசிரியர் சொல்லித் தந்த வசனம் இதுதான்.

'சரோஜாதேவி குளிக்கும்போது யார் கண்டது? கமல்காசன் கண்டவர்'.

அவ்வளவுதான்! அன்றோடு நான் தொலைந்தேன். எனது பெயரும் சரோஜாதேவிதான். அவள் என்னை, ஆட்கள் நிற்கிறார்கள் என்றும் பாராது, கண்ட கண்ட இடங்களிலெல்லாம், கண்ட கண்ட நேரங்களிலெல்லாம்,

"சரோஜாதேவி குளிக்கேக்கை யார் கண்டது? கமல்காசன் கண்டது" என்று கேலி செய்வாள்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியாமல் இருக்கும். நாம் போராளிகள் ஆனபின்னர் தான், அவள் இவ்வாறு கேலி செய்வதை நிறுத்தினாள்.

* * * * *

பெரும் வயல் காணிகளும் தோட்ட நிலங்களும் தென்னந் தோட்டங்களும் நிறைந்த முல்லை -மணலாறு மாவட்டத்தில் அமைந்துள்ள 'மாமூலை' என்ற கிராமத்தில் செல்வரெத்தினம், பத்மாவதி என்ற விவசாயத் தம்பதிகளுக்குக் கடைக்குட்டி மகளாகப் பிறந்தவள்தான் வீரவேங்கை சுதா எனப்படுகின்ற சுதர்மினா. இவளுக்கு நான்கு அண்ணாமார்களும் ஒரு அக்காவும் உண்டு. இவரது அண்ணாமாரில் ஒருவர் 1985 ஆம் ஆண்டில் காணாமல் போய்விட்டார்.

ஒரு அண்ணா 1986 ஆம் ஆண்டு காலப் பகுதியில் திவாகர் என்ற பெயருடன் தன்னைப் போராளியாக்கிக் கொண்டார். இவருக்குப் பிறகு இன்னுமொரு அண்ணாவும் அலெக்ஸ் என்ற பெயருடன் தன்னைப் போராளியாக்கிக் கொண்டார். இவர் சில காலத்தின் பின் போராட்டத்தில் இருந்து விலகி, குடும்பத்துக்கு உழைப்பதற்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போய்விட்டார். அப்பொழுது ஈரானுக்கும் ஈராக்குக்கும் கடுமையான மோதல் நடந்து கொண்டிருந்தது. அங்குபோய், சில நாட்களுக்குப் பின் அவரது கடிதங்கள் வருவது நின்றுவிட்டது. நான் இயக்கத்துக்கு வரும்வரையில் அவரது கடிதம் எதுவும் வீட்டுக்கு வரவில்லை.

இன்னுமொரு அண்ணன் எங்கள் போராளிகளுக்கு உதவி செய்து கொண்டிருந்தார். 1990 ஆம் ஆண்டில் இவர் துரோகி ஒருவரால் காட்டிக் கொடுக்கப்பட்டு, தேச விரோதிகளால் கொல்லப்பட்டார். நடந்த விடயம் தெரியாத சுதாவின் தாய் இவர் வருவார் எனப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

மறுநாள் ஒரு உடல் கர்ப்பூரப்புல் வெளியில் கிடப்பதாகக் கேள்வியுற்ற சுதாவும், அம்மாவும், அப்பாவும் ஓடிப்போய்ப் பார்த்தார்கள். உடல் முழுவதும் வெட்டுக் காயங்களுடனும், உப்பியும் கிடந்த அந்த உடலின் காலில் இருந்த ஒரு வடுவைப் பார்த்தே, அது சுதாவின் அண்ணனின் உடல்தான் என இனம் காணப்பட்டது.

## அமுதநிலா

இந்த இழப்பு சுதாவின் அம்மாவுக்குப் பெரிய மனத் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. சுதாவுக்கும் அண்ணனின் மரணம் பெரிதாகத் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. முன்னரும் போராளிகளுக்கு பல உதவிகளைச் செய்து வந்தவள், இப்போது ஒரு வேகத்துடன் வேலை செய்யலானாள். அவள் இயக்கத்துக்கு வருவதற்கு அண்ணனின் மரணமும் ஒரு காரணமாக அமைந்துவிட்டது.

* * * * *

ஒரு நாள் முல்லைத்தீவில் நடந்த எம்மவரின் பிரச்சாரக் கூட்டமொன்றுக்கு நானும் சுதாவும் போயிருந்தோம். அங்கே சுதாவின் போராளி அண்ணா திவாகரைக் கண்டோம். அவரிடம் அவள்,

"அண்ணா, நானும் இவளும் (என்னைத் தான் அவள் என்று குறிப்பிட்டாள்) நந்தினியும் இயக்கத்துக்கு வரப்போறம். நீ கூட்டிக் கொண்டு போறியா?"

என்றாள். அதற்கு அவர்,

"நீ இப்ப அம்பது பேரைக் கூட்டிக் கொண்டு வா. நான் உடனேயே உன்னையும் உன்னோட வாறவையையும் கூட்டிக் கொண்டு போகிறேன்" என்றார்.

ஐம்பது பேரை உடனேயே எப்படித் திரட்ட முடியும்? அந்த நிமிடத்தில் ஐம்பது புதிய போராளிகளுக்காக எங்கே போக முடியும்? எனக்கும் அவளுக்கும் மனம் சோர்ந்துவிட்டது. கூட்டம் முடிந்ததும் பேசாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தோம்.

இது நடந்து சில நாட்களின் பின், எனக்கு இயக்கத்தில் இணைவதற்கு தொடர்பு கிடைத்துவிட்டது. காலையில் தனியார் கல்வி நிலையத்தில் வகுப்பு இருப்பதாக அம்மாவுக்குச் சொல்லிவிட்டு புறப்பட்டுவிட்டேன். போகும் வழியில் சுதாவைப் பார்ப்பதற்காக அவளின் வீட்டுக்குச் சென்றேன்.

எனக்கு முதலில் இயக்கத் தொடர்பு கிடைத்தால் அவளையும் கூட்டிக் கொண்டு போவதாகவும், அவளுக்கு முதலில் இயக்கத் தொடர்பு கிடைத்தால் என்னையும் கூட்டிக் கொண்டு போவதாகவும்தான் எமது நீண்ட காலத் திட்டம் அமைந்திருந்தது. அதனால் அவள், நான் தன்னை விட்டு விட்டு இயக்கத்திற்கு வருவேன் என்பதைக் கனவில்கூட நினைத்துப் பார்த்திருக்கவில்லை. ஆனால், நானோ மூன்று மகன்களை இழந்த தாயையும், அவர் சுதா மீது வைத்திருந்த அளவில்லா அன்பையும் எண்ணி, சுதாவை என்னுடன் இயக்கத்திற்கு அழைத்துப் போகும் எண்ணத்தைக் கைவிட்ட விடயம் அவளுக்குத் தெரியாது.

* * * * *

நான் பயிற்சி எடுத்த பின்னர் பயிற்சி முகாமிலேயே கடமையில் ஈடுபட்டிருந்தேன். ஏறத்தாழ நான் இயக்கத்திற்கு வந்து நாலைந்து மாதங்களின் பின், ஒரு நாள் பயிற்சி எடுப்பதற்காகப் புதியவர்கள் வந்திருப்பதாக என் தோழியொருத்தி சொன்னாள். நான் அவர்களைப் பார்ப்போம் என்று போனேன். அங்கே போன பின்னர்தான் சுதாவும் வந்திருந்தது தெரிந்தது.

ஆவலுடன் அவளிடம் கதைக்க முனைந்தேன். அவளோ என்னை முன்பின் அறியாதவள் போல் முகத்தை மறுபுறம் திருப்பிவிட்டாள்.

'கோபம் இறங்கட்டும். ஆறுதலாகக் கதைப்பம்!'

என்று எனக்குள் நினைத்துக் கொண்டு நான் திரும்பிவிட்டேன். இரண்டு நாட்களின் பின், நான் அவள் இருந்த இடத்திற்கு அருகாமையால் போய்க் கொண்டிருந்தபொழுது என்னைக் கூப்பிட்டாள்.

"நான் ஏன் உன்னோட கதைக்கேல்லையெண்டு சொல்லித்தான் தெரியவேணும் எண்டில்லை. நீ வந்த நேரம் என்னையும் கூட்டி வந்திருந்தால் இப்ப நானும் றெயினிங் எடுத்திருப்பன்"

என்றாள்.

**வீரவேங்கை சுதா**



சுதர்மினா செல்வரெத்தினம்
மாமூலை, முள்ளியவளை

பிறப்பு : 1975-3-15
வீரச்சாவு : 1990-11-22

மீண்டும் என் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

'வீட்டில் எப்படியெல்லாம் செல்லமாக வளர்ந்தவள். யாரும் ஏசினால் அதைத் தாங்கும் சக்தி இவளிடம் இல்லை. கோபம் வந்தால், கோபம் முறியும் மட்டும் முகத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு திரிவாள். சொகுசாக வாழ்ந்து பழகிய இவள், எப்படிப் பயிற்சியை நல்லபடி எடுத்து முடிக்கப் போகிறாள்? வீட்டில் ஒரு துரும்பைக் கூட கையால் எடுக்காதவளாச்சே?'.

மணலாறுக்காட்டில் நடாத்தப்பட்ட, விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் பத்தாவது பயிற்சி முகாமில் சுதா பயிற்சி எடுத்தாள். ஞாயிற்றுக் கிழமைகளில் ஓய்வாக இருக்கும்போது காட்டைப் பற்றி தன் தோழிகளிடம் வர்ணிப்பதுதான் அவளது பொழுதுபோக்கு.

வேலைகள் செய்யும்போது அந்த வேலைகளை விரைவாகவும் திறமையாகவும் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணமே அவள் மனதில் மேலோங்கி நிற்கும். அவளது கேலியும் கும்மாளமும் என்றைக்குமே வற்றாதவை. இவள் பயிற்சி முடிந்ததும் மணலாற்றுக் காட்டில் உள்ள வேறொரு முகாமுக்கு மாற்றப்பட்டு, ஏழு பேர் கொண்ட குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள். சில நாட்களிலேயே நானும் அந்த முகாமுக்கு மாற்றப்பட்டு விட்டேன். எங்கள் இருவரது குழுக்களும் அம் முகாமின் வெவ்வேறு எல்லைக் காவலரண்களில் நின்றிருந்தன. ஆனாலும் அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்களும் இருந்தன.

சில நாட்களின் பின் நாம் இந்த முகாமைக் கைவிட்டு, மீண்டும் பழைய முகாமுக்கே திரும்பினோம். அங்கே குழுக்கள் மீண்டும் பிரிக்கப்பட்டன. நானும் சுதாவும் ஒரே குழுவுக்கே மாற்றப்பட்டோம்.

சுதாவுக்கு தேநீர் குடிப்பதில் சரியான விருப்பம். அடிக்கடி அவளைச் சமையலறையில் காணலாம். தேநீர் குடிப்பதும் சீனியை அள்ளிச் சாப்பிடுவதுமாக தன் வயிற்றை நிரப்பிக் கொண்டிருப்பாள். அவளுக்கு எப்போதுமே ஒரு கோப்பை தேநீர் போதுமானதாக இருந்ததில்லை. ஒரு முறை எமக்கு வந்த தேநீரின் அளவு குறைவாக இருந்தது. எல்லோருக்கும் ஒரு கோப்பை தேநீர்தான் கிடைத்தது. சுதாவுக்குத்தான் ஒரு கோப்பை தேநீர் போதாதே. அவள் என்னிடம் எனது தேநீரில் அரைவாசியைத் தனக்குத் தரும்படி கேட்டாள். நான் அதற்குச் சம்மதித்தேன். ஆனால் மறந்துபோய் முழுவதையும் குடித்துவிட்டேன். அவ்வளவுதான்!

"என்னடி, நீ இப்படிச் செய்துவிட்டாய்?"

என்று என்னை ஏசிவிட்டு, கோபித்துக் கொண்டு போய்விட்டாள். ஏறத்தாழ ஒரு மாதம்வரையில் என்னுடன் கதைக்காமல் இருந்தாள்.

ஒரு நாள் மிகவும் சந்தோசமாகத் துள்ளிக் குதித்தபடி என்னிடம் ஓடிவந்தாள்.

"என்னடி, இப்படிச் சந்தோசத்தோடை ஓடி வாறாய்?" என்று நான் கேட்டேன். அதற்கு அவள்,

"ஒண்டுமில்லையடி"

என்று முதலில் சொன்னாலும், "இண்டைக்கு நான் சண்டைக்குப் போறன்" என்று உண்மையைச் சொல்லிவிட்டாள்.

'அப்ப நான்.....?'

மனதுக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன்.

சண்டைக்குப் போவதற்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒரு விதமான கலகலப்புடனும், அவசரத்துடனும், புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தனர்.

'என்னையும் கூப்பிடுவார்கள் தானே'

என்ற நம்பிக்கையுடன் அவர்களுக்கு உதவிகள் செய்து கொண்டிருந்தேன்.

"எடியேய், நாங்கள் போட்டு வாறம். கட்டாயமாய் அவன்ரை காம்பைப் பிடிச்சு, புலிக்கொடி ஏத்தாமல் வரமாட்டன். எங்கட உயிர் போனாலும் பரவாயில்லை. "

என்று சுதா என்னிடம் விடை பெற்றுச் சென்றாள்.

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 1993 - போராண்டும் தமிழீழமும்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களால் காவல் அரண்களையும் ரோந்து அணிகளையும் இழந்து ஆடிப்போன நிலையில் சென்ற போராண்டினை சிறீலங்கா இராணுவம் நிறைவு செய்தது. இவ் ஈடாட்ட நிலையில் பெருமளவு ஆயுதப் படையினர் தப்பியோடியிருந்தனர். சுமார் 1500 படையினர் கொல்லப்பட்டும் மேலும் 2000 படையினர் காயமுற்றும் இருந்தனர். அது மட்டுமன்றிக் கடந்த போராண்டு விடுதலைப் புலிகளுக்கு சுமார் 1300 ஆயுதங்களை சிறீலங்கா ஆயுதப் படைகளிடமிருந்து பெற்றுக் கொடுத்திருந்தது. 1992 போராண்டினை விட இவ்வாண்டு ஒரு வித்தியாசமான போர் நிலையை தமிழீழத்தில் ஏற்படுத்தியிருந்தது. போரின் பரிமாணங்கள் பெரிதும் பரிணாம வளர்ச்சியை எட்டியிருந்தது. -குறிப்பிடும்படியாக போரின் அரசியல் சூழல், வல்லரசான இந்தியாவின் அடாவடித்தனம் -தாக்குதல்கள், படையெடுப்பு, யாழ்ப்பாணம் மீதான இறுதித் தாக்குதல் அச்சுறுத்தல் என்பன தமிழீழம் 1993 போராண்டில் எதிர்கொண்டு தனது வெற்றியை நிலைநாட்டிக் கொண்டது.

இப்போராண்டின் முதல் மாதமான ஜனவரியில் இந்தியாவின் அடாவடித்தனமான சதி ஒன்றைத் தமிழீழம் எதிர்கொண்டது. விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான லெப். கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் திலீபன், லெப். கேணல் ஜொனி ஆகியோரை சதி வலையிட்டுச் சாவுகொண்ட இந்தியாவும் அதன் ஆதிக்கவாதிகளும் இன்னொரு மூத்த தளபதியான கேணல் கிட்டு அவர்கள் வந்த கப்பலை சர்வதேச கடற்பரப்பில் வழி மறித்து சதிவலை பின்னியது, இதன் ஆபத்தான விளைவாக கேணல் கிட்டு உட்பட 10 புலிவீரர்கள் வீரச்சாவு அடைய நேரிட்டது. இப்புலி வீரர்களின் இழப்பானது தமிழீழத்திற்கு ஈடுசெய்ய முடியாததாக அமைந்தது.

இதேசமயம் 1993 போராண்டு சமாதான முன்முயற்சிகளை எதிர்கொள்ளவில்லை என்றே கூறிவிட முடியும். மேநாள் குண்டு வெடிப்பிலே ஜனாதிபதி பிரேமதாஸ கொல்லப்படு முன்னர் அங்கிலிக்கன் ஆயரும் வேறு பல அரச சார்பற்ற சமாதான குழுக்களும் தமிழீழம் வந்து போயினர். இங்கு வந்து சென்ற சமாதானக் குழுக்களுக்கு கொழும்பு வரவேற்பளிக்கவில்லை. அது மட்டுமன்றி அவர்களது முயற்சிகளை உதாசீனம் செய்ததுமல்லாமல் அவர்களைப் புலிகளின் ஆதரவாளர்களாகச் சித்தரிக்கவும் முற்பட்டது. இதேசமயம் தென்னிலங்கை அரசியல்வாதிகளான



தொண்டமான், மங்களமுனசிங்க, M. H. முகமட் போன்றவர்களும் சமாதான முயற்சிகளை மேற்கொண்டு தமிழீழம் வரப்போவதாக அடிக்கடி அறிக்கை விட்டுக் கொண்டிருந்தனர். எனினும் இவர்களது வரவு குதிரைக் கொம்பாகவே இருக்கிறது.

இரண்டாம் ஈழப்போரின் பின்னர் 1991 ஆம் ஆண்டு முதல் சிறீலங்கா ஆயுதப்படைகள் யாழ்ப்பாணம் மீது மிகப் பெரியதொரு தாக்குதலை நடத்தப் போவதாக அடிக்கடி அச்சுறுத்தி வந்துள்ளன. தமிழ் மக்கள் மீது ஓர் 'உளவியல் போர்' யுத்தியாகவும் யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் பயன்படுத்தப்பட்டு வந்தது. அவ்வப்போது சிறீலங்காப் படைகள் எதிர்நோக்கிய பின்னடைவுகளால் இது ஒத்திவைக்கப்பட்டு வருகிறது. 1992 ஆகஸ்ட் 10 -ஆம் நாள் 'ஒப்ரேசன் பைனல் கௌன்ட் டவுன்' என்ற பெயரில் நடத்தப்பட இருந்த யாழ்ப்பாணம் மீதான தாக்குதல், அதற்கு இரு தினங்கள் முன்னதாக தாக்குதலுக்கு திட்டமிட்டுத் தலைமை தாங்கும் தளபதிகள் அராலித்துறைக் கண்ணிவெடி தாக்குதலால் கொல்லப்பட்டதையடுத்து கைவிடப்பட்டது. இவ்வாண்டின் ஆரம்பம் முதல் மீண்டும் இறுதித் தாக்குதல் பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்பட்டது.

1993 போராண்டில் அல்லது 1994 ஆரம்பத்தில் நடத்தப்பட இருப்பதாக அச்சுறுத்தப்பட்டு வந்த யாழ்ப்பாணச் சமர் மீண்டுமொரு தடவை ஒத்திவைக்கப்பட வேண்டிய நிலையை அடைந்துள்ளது. இராணுவம் மற்றும் கடற்படையின் முதுகெலும்பை புலிகள் பூநகரி -நாகதேவன் துறை கூட்டுத்தள தாக்குதலின் மூலம் முறித்துவிட்டுள்ளனர். இதனால் பெருமளவு இராணுவத்தினர் பற்றாக்குறையாக உள்ளனர். 90 ஆயிரமாக இருந்த இராணுவத்தினரின் தொகை இவ்வாண்டில் ஒரு இலட்சமாக்கப்பட்டது. புதிதாக 10 பற்றாலியன்கள் உருவாக்கப்பட்டன. எனினும் பெருமளவு உயிர், உடல்சேதம் யாழ்ப்பாணச் சமரை பிள்ளையாரின் திருமணம் போன்று ஒத்திவைக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது.

1993 போராண்டிலே சிறீலங்கா படைத்துறை மிகப்பெரிய படையெடுப்பு என ஒரு சில நடவடிக்கைகளையே எடுத்தது. படையெடுப்புகளுக்கு பெயர்போன தளபதிகளான லெப். ஜெனரல் கொப்பேக்கடுவவும், மேஜர் ஜெனரல் விஜய விமலரட்ணவும் கொல்லப்பட்ட பின்னர் சிறீலங்காப் படைத்துறையால் படையெடுப்புக்களை நடத்துவது கடினமாகியது. தன்னாலும் படையெடுப்பு நடத்த முடியும் என்று சொல்வதற்காக மட்டும் இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன ஒரு சில வரையறைக்குட்பட்ட இராணுவ நடவடிக்கைகளை நடத்தினார். மூன் லைற் (நிலா ஒளி), கறுப்பு நரி -4, ரணகீர்த்தி, ரணவிம, சக்பலய, சுழிசுழங், சுமண, முகுது சுழங், யாழ்தேவி, செம்பெயின் போன்ற குறியீட்டுப் பெயர்களில் இராணுவ நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. தமிழீழத்தின் பல பகுதிகளிலும் நடத்தப்பட்ட இப்படையெடுப்புக்களிலே யாழ்தேவி நடவடிக்கை தவிர மற்றெல்லாம் ஒப்பீட்டளவில் சிறியதாயிருந்ததைக் காணமுடிந்தது.

சிறீலங்கா படைத்துறைத் தலைமை தனது முழு வளங்களையும் திரட்டி யாழ். குடாநாட்டிற்கான ஒரே வழங்கல் பாதையான கிளாலியை கைப்பற்ற யாழ்தேவி இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டது. ஆனையிறவு, பூநகரி, கொம்படி -ஊரியான் பாதைகளையும் மூடிவிட்ட நிலையில் கிளாலிப் பாதையையும் கையகப்படுத்தி யாழ். குடாநாட்டையே தனது இராணுவ வேலியால் அடைத்துவிடத் தீர்மானித்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சுமார் பத்தாயிம் வரையிலான படையினர் பங்குகொண்ட இம்முன்னேற்ற முயற்சியின் இரண்டாவது நாளில் 'புலோப்பளை வரலாற்றுச் சமர்' இடம்பெற்றது. இவ் வரலாற்றுச் சமர் நடந்து கொண்டிருந்த போது படையினருக்கு உதவியாக தாக்குதலில் ஈடுபட்டிருந்த வான்படை விமானங்கள், தாங்கிகளை கைவிட்டு ஓடும் படையினரையும் செத்துவிழும் இராணுவத்தினரையுமே காண முடிந்தது. இச் சமரில் சுமார் 150 படையினர் கொல்லப்பட்டும் 250 இற்கும் அதிகமானோர் காயமுற்றதுமல்லாமல் 5 இற்கு மேலான கனரக வாகனங்களையும் இழக்க நேரிட்டது. யாழ்தேவி தொடர்ந்து காங்கேசன்துறை வரை செல்வதற்குப் பதிலாக கிளாலியுடன் தனது பயணத்தை முடிக்க நேரிட்டது. இச் சமர் சிறீலங்காப் படைகள் எதிர்கொண்ட பல கடுமையான தாக்குதல்களில் ஒன்றாகியது. இராணுவத் தலைமையகப் பதிவேட்டில் கறைபடிந்துபோன பக்கங்களால் பதியப்பட்டது.

**புதியவன்**

அடுத்ததாக இந்தப் போராண்டில் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சமர்களை எடுத்து நோக்குவோம். 1992 ஆரம்பத்தில் தமிழினத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் வகுத்த புதிய போர்முறைத் திட்டம் பரிணாம ரீதியாக வளர்ச்சி அடைந்தது. சிறப்பான வேவின் பின்னர் படையினர் எதிர்பாராத ரீதியில் எதிர்பாராத நேரத்தில் திடீரென மின்வேகத்தில் அதிரடித் தாக்குதல் நடத்திப் படையினரை அழித்து ஆயுதங்களை மீட்பதே இப்போர் முறைத் திட்டமாகும். ஆரம்பத்தில் சிறிய ரோந்து அணிகளும் தனிப்படுத்தப்பட்ட காவல் நிலைகளும் இத்தாக்குதலால் சீரழிக்கப்பட்டன. இது படிப்படியாக 100 பேர் வரையிலான ரோந்து அணிகளும் சிறிய இராணுவ முகாம்களுமாகவும் பின்னர் பல தொடர் காவலரண்களைக் கொண்ட இராணுவ வேலிகளை அழிப்பதுவரை வளர்ந்த நிலையில் 1992 போராண்டு கழிந்து போனது. படிப்படியாக பரிணாம வளர்ச்சி அடைந்த இப்போர்த் தந்திரோபாயம் இப் போராண்டிலே ஒரு பிரமாண்டமான இராணுவ -கடற்படைக் கூட்டுத்தளத்தை (MILITARY COMPLEX) அழிக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

வழமை போலவே இவ்வாண்டிலும் முகாம்களுக்கிடையே ரோந்து செல்லும் இராணுவ அணிகள் தாக்கி அழிக்கப்பட்டன. அத்துடன் தமிழீழ எல்லைப்புறத்திலிருந்த தம்மின்ன, செட்டிகுளம், ஜெயந்தியா, இலவங்குளம், ஊறல்பிட்டியளை, கட்டுவன் வில், மினி முகாம்களும் மற்றும் பம்புறுஸ்கவெவ, மணலாற்று மினி முகாம், இலுப்பைச்சோலை காவல் நிலையம் என்பனவும் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டன. சில நிமிடச் சமர்களில் இப்பாசறைகளிலிருந்த படையினர் அழிக்கப்பட்டு விரட்டப்பட்டு ஆயுத தளபாடங்கள் மீட்கப்பட்டன.

இவற்றுடன் இராணுவ மற்றும் ஆயுதப் படைகளுக்கு தலையிடி தரும் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. அதாவது இராணுவ ஆக்கிரமிப்பில் இருக்கும் தமது பூரண கட்டுப்பாட்டிலிருப்பதாகக் கூறப்படும் பிரதேசங்களில் நுழைந்து புலிகள் தாக்குதல் நடத்தியமை ஆகும். இவ்வகைத் தாக்குதல்களில்




வவுனியா ஆசிக்குளத்திலும் மன்னாரில் தீவிலும், பெரும் நிலப் பரப்பிலுமாக பதினொரு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. படையின் பூரண கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் நடத்தப்பட்ட இத் தாக்குதல்களால் பெருமளவு உயிர், தளபாட இழப்புக்களை ஆயுதப் படைகள் எதிர்கொண்டன. எங்கிருந்தோ வந்து தாக்கிவிட்டு எங்கோ தப்பிப்போய் விடுகிறார்கள் என்று ஆயுதப் படைத் தலைமையின் தலையை உடைக்கும் வகையில் இத்தாக்குதல்கள் அமைந்திருந்தன.

கிளாலிக் கடல் நீரேரி இப்போராண்டிலே நூற்றுக்கணக்கான தமிழர்களின் குருதியால் சிவந்தது. மக்களைத் தாக்க வரும் கடற்படைக்கும் கடற்புலிகளுக்குமிடையிலான போர் பற்றிய செய்தி வழமையானது. இந்நிலையில் ஆகஸ்ட் 26 -ஆம் நாள் மக்களைத் தாக்க வந்த சிங்களக் கடற்படை சிதறிமாண்டது. கடற்கரும்புலிகளான கப்டன் மதன், மேஜர் வரதன் என்போர் கடற்படையின் இரு நீருந்து விசைப்படகுகளை அழித்துச் சாதனை படைத்தனர். இது நடந்து நான்கு நாட்கள் கழிந்த நிலையில் பருத்தித்துறைக் கடலில் ரோந்து சென்ற கடற்படையின் 'சுப்பர் டோறா' கரும்புலித் தாக்குதலுக்குட்பட்டது. அத்துடன் இப்படகிலிருந்த 20 மி. மீ. பீரங்கிகள் இரண்டு கைப்பற்றப்பட்டன. இவ்விரு தாக்குதல்களும் கடற்புலிகளின் கனரக ஆயுதப் பிரிவை 50 கலிபர்கள் நான்காலும் 20 மி. மீ. பீரங்கிகள் இரண்டாலும் அதிகரிக்கச் செய்தது மட்டுமன்றி வடபகுதிக் கடற்பரப்பில் கடற்படையின் மேலாதிக்கத்தில் முறிவு ஏற்பட்டது. இவ்விரு தாக்குதல்களிலும் 25 கடற்படையினர் கொல்லப்பட்டனர். இத்தாக்குதல்களால் சுமார் 40 கோடி ரூபா பெறுமானமுள்ள கடற்படைத் தளபாடங்களை இழந்துவிட்டமை சிறீலங்கா கடற்படை முன்னர் எப்போதுமே சந்திக்காத பேரிழப்பாகும்.

1983 யூலை 23 ஆம் திகதி திருநெல்வேலித் தாக்குதலில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு இருதினங்களின் பின்னர் 25 -ஆம் திகதி தமிழருக்கெதிராக பெரும் இனக்கலகம் பேரினவாதிகளால் கட்டவிழ்த்து விடப்பட்டது. இந் நாளின் பத்தாவது ஆண்டை பூர்த்தி செய்யும் நாளான 1993 யூலை 25 ஆம் நாள் புலிகள் பெரும் தாக்குதல் நடத்தலாம் என்று இராணுவப் புலனாய்வுப் பிரிவு சகல படை முகாம்களுக்கும் எச்சரிக்கை விடுத்திருந்தது. ஆனால் அன்று அதிகாலையில் மணலாற்றிலுள்ள மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது 'இதயபூமி 1' தாக்குதல் பிரிவுகள் பாய்ந்தன, 30 நிமிட நேரச்சமரில் மிகப்பெரிய இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ந்தது. காவலரண்களை கைப்பற்றிய புலிகள் இன்று பலமான பாதுகாப்பான முகாமையும் தகர்ப்பார்கள் என்று சிறீலங்கா அரசுக்கும் படையினருக்கும் உணர்த்தினர். குறியீட்டுப் பெயரிட்டு நடத்தப்பட்ட இரண்டாவது இராணுவ நடவடிக்கையான இதயபூமி -1, புலிகளுக்கு சுமார் 5 கோடி ரூபாவிற்கு மேலான பெறுமதியுடைய ஆயுதங்களை அள்ளித்தந்தது. மண்கிண்டிமலைத் தோல்வியால் இராணுவ தலைமைப்பீடம் பெரும் சிக்கலில் மாட்டிக்கொண்டது. கூடவே அதிகாரிகளுக்கிடையில் பூசலும் வளர்ந்தது. தமிழரின் தாயக பூமியில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவும் பேரினவாதிகளின் முயற்சியில் மண் அள்ளிப் போடப்பட்டது. இராணுவ விசாரணைக்குழுவை நியமித்த விஜேதுங்க படையினரை 'பகலில் தூங்கி இரவில் விழித்திருக்குமாறு' தனது ஆலோசனையை வேறு வழங்கும் அளவிற்கு இத்தோல்வி இருந்தது.

புலிகள் நடத்திய அடுத்த தாக்குதல் சமர், உலகையே ஐந்து நாட்கள் தமிழீழத்தின் பக்கம்

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






இது ஒரு புதிய போர்ப்பரணி !
பிரபாகரனின் சகாப்தத்துடன் தொடங்கிய ஈழத்தமிழரின் வீரமரபை அடித்தளமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு போர்க்கால இலக்கியம் இது. ஆழமான புரிந்துணர்வை - அளவிட முடியாத அன்புறவை -வாட்டுகின்ற துன்பங்களிலும், பொங்குகின்ற இன்பங்களிலும் பங்கெடுக்கின்ற உயிருக்குயிரான நேசிப்பை -ஒருவரில் மற்றவர் நம்பிக்கை கொண்டு, ஒருவருக்காக மற்றவர் உயிர்கொடுத்துப் போராடும் புலிவீரர்களின் போராட்ட வாழ்வை, தான் தரிசித்த நிகழ்வுகளையும் பெற்ற அனுபவங்களையும், சிறந்த எழுத்தாற்றலுடன் ஓர் இலக்கியப் படைப்பாக வடித்திருக்கின்றான், தன்னை முழுமையாகவே தாயக விடுதலைக்காக அர்ப்பணித்து நின்ற ஒரு புலிவீரன் கப்டன் மலரவன் (லியோ).

அதேவேளை இப் புலிவீரனின் போராட்ட வரலாற்றையும், பல சாதனைகளையும், மறக்க முடியாத பல சம்பவங்களையும் கொண்டதாகவே இந்நூல் இருக்கின்றது. 'போர் உலா' என்ற இந்தப் பரணி, தமிழீழத்தின் போர்க்கால இலக்கியத்திற்குக் கிடைத்த ஒரு பொக்கிசமாக என்றைக்கும் விளங்கும்! . இதனை நாம் இங்கு தொடராகத் தருகிறோம்.

## அத்தியாயம் - 3 இன் தொடர்ச்சி

நாங்கள் அவதானமாக எம் அசைவுகளை வைத்து எதிரியின் அரண்களில் எம் கண்ணோட்டத்தைச் செலுத்தினோம்.

"பட பட பட!"

தலைக்கு மேலாய் 'உய்' என்று இரைப்புடன் ரவைகள் காற்றைக் கிழித்துப் பாய்ந்தன.

"படுமச்சான்! ஓ.பி காரன் கண்டிட்டான். அந்த புளியில இருந்துதான் அடிக்கிறான். சிலநேரம் மட்டும் ஏறி அடிச்சிட்டு இறங்கிடுவான்".

எமது ஆட்கள் முன்னால் இருந்து நாலைந்து ரவைகளைப் பாய்ச்ச எல்லாம் அமைதியானது.

"வாருங்கோ போவம். குனிந்து வாங்கோ".

ஜீவன் முன்னே ஓடிப்போக நாங்கள் தொடர்ந்தோம்.

'கும்'.

முதல் படுத்த இடத்தருகே எறிகணை ஒன்று வீழ்ந்து வெடித்தது.

"சப்ளைய கட் பண்ணிப் போட்டாங்கள்; அதுதான் கோபப்படுகிறார். ஒரு கிழமையாக ஃபிவ்ரி வைத்து அடிச்சு ஒரு கெலியையும் இறக்க விடேல்ல பேதியில அடிக்கிறான்". காவலரணில் நின்ற போராளி மெலிதாய் சிரித்தபடி கூறினான்.

ஒவ்வொரு காவலரணூடாக இலக்குகளை இனம் காணத் தொடங்கினோம். ஜீவன் ஒவ்வொரு எதிரியின் காவலரணையும் தெளிவாகக் காட்டி விளக்கினார்.

"கோயில் பொயின்ர கடந்துவாற தெரு முல்லைத்தீவு றோட் அதுதான் இதில ஏறுது. அந்த மூலையில தெரியிறது கடை. அதற்குப் பக்கமாய் இருக்கிறது தான் விகாரை. அங்காலதான் அவன்ர பழைய காம்ப்." அதற்கு முன்னால் மாங்குளம் தடைமுகாம் என்ற சீமெந்து சுவரில் கொஞ்சத்தை ரவை தின்றிருந்தது.

"உதில வைச்சுத்தான் மன்னங்குளத்தில வீட்டுக்குப் போன எங்கள (என்னையும், அப்புவையும்) பிடிச்சு வெருட்டினவங்கள்" அருகில் நின்ற போராளி கூறிச் சிரித்தான்.

ஓ! உன்னால் அன்று குட்டப்பட்ட குழந்தை, நீ காலால் மிதித்த ஆலங்கன்று, நீ ஏளனம் செய்த தமிழன், இன்று உன் முன் கையிலேயே துவக்குடன் நிற்கிறான்! உன்னையே வியக்க வைக்கும் விருட்சமாக நிற்கின்றான்! தலை நிமிர்ந்து தமிழன் என்கின்றான்! ஆக்கிரமிப்புவாதிகள் தான் போராளிகளை உருவாக்குபவர்கள் என்ற உண்மை உனக்கென்று புரியும்? நீ அடித்தவன், உன்னை அடைத்து வைத்திருக்கிறான். ஓநாய் வெள்ளாட்டைத் தின்ன வந்தால் அது புலியாகிப் பாய வேண்டியது, காலத்தின் கட்டளை!

ஜீவன் மேலும் விளக்கினார்.

"காம்பின்ர அந்தப் பக்கம் மாந்தோட்டம். அதுக்குள்ள சுத்தி ஏழெட்டு பொயின்ற் இருக்கு. சிலது டம்மி பொயின்ற். தெரியாத மாதிரி இடைக்கிடை ரவுன்ஸ் அடிப்பாங்கள். அதுக்கு மேலால லக்சபானா பக்கம் தெரியிறதுதான் மலைப் பொயின்ற். சரியான உயரத்தில இருக்கிறதால அந்த வெளியெல்லாம் கவர் பண்ணுவான். ஃபிவ்ரி அல்லாட்டி எல். 3 இருக்குமென்று நினைக்கிறன்."

"இராணுவ முகாம் மிகவும் பலமாகத்தான் அமைக்கப்பட்டிருந்தது. சுற்றுப்புறங்கள் பெரும்பாலும் வெளியாக இருப்பதனால், எமது தரை நகர்வுகளின் போது பெருமளவு உயிர் விலைகொடுக்கப்படல் அவசியம் என, எதிரி தீர்மானித்திருந்தான் போலத் தெரிந்தது.

நாம் பிரதான வீதியை துணுக்காய் சந்திக்கு சற்று முன்னாக பெரிதாகத் துண்டாடியிருந்தோம். அதேபோல் அவனும் பிரதான முகாம் முன்பாக துண்டாடியிருந்தான் போல் தெரிந்தது. சிலவேளை அது விநியோகப் பாதையாக அல்லது போலியாக கூட இருக்கலாம். இராணுவத்தை நேரடியாகத் தெரியும் இடங்களில் படங்குகளைக் கட்டி மறைத்திருந்தோம். சந்தியில் நின்ற புளியமரத்தினூடாக அவதானித்துக் கொண்டிருந்தோம்.

"தொடர்ந்து பார்க்காதையுங்கோ சினைப்பண்ணிப்போடுவான்." - ஜீவன் கூறினார்.

"இந்தக் கரையில தெரியிறது தான் சேச். அது சிஸ்ரற்ற மடமாம். அதுகளெல்லாம் வீடுகள். அவ்விடத்தில் இருக்கிற பொயின்ருகள்தான் மெயின் காம்பை இந்தப் பக்கத்தாலே பாதுகாக்குது. கெலி இறக்கக் கூட வசதியானதற்கு காரணம் இதுகள்தான். 90 சண்டைக்குப் பிறகுதான் இவற்றை பிடிச்சவன்."

"கிட்டவாத் தெரியுது. ஆர். பி.- ஜியால அடிச்சு பிரிக்கேலாதோ?"

"பார்க்க இப்படித்தான் தெரியும். ஆனால் நல்ல பலமான பொயின்ருகள். எக்கச்சக்கமாய் மண்மூட்டைகள் அடுக்கி வைத்திருக்கிறான். சுவருக்கு பின்னால் எல்லாம் மண்மூட்டைகள்தான். கோயில் பொயின்ற் இன்னும் இறுக்கம்."

**மதவழிபாட்டுத் தலங்கள் இப்போ எம்முன் பெரும் அரக்கரைப்போல் போர்க்கோலம் பூண்டு நின்றன.** ஒரு அராஜக யுத்தத்திற்கு துணை போவதாய் மௌனமாய் நின்றன. "ஒரு அடக்குமுறையாளனுக்கு துணை போவதைவிட அழிந்து போவது மேல்." பெயர் தெரியாத தத்துவஞானி என்முன் தோன்றிச் சொன்னார். இவை இரண்டையும் என்ன உயிர் கொடுத்தும் பிடிக்கவேணும். இவை அகப்பட்டாப் பிறகு ஆமியை சுகமாய் சமாளிக்கலாம். கெலி இறங்கிறதை நினைச்சும் பார்க்க ஏலாது. முந்தி இந்தக் காம்ப் 200 யார் நீளமும், 100 யார் அகலமும்தான். இப்ப 1500 யார் நீளமும், 1000 யார் அகலமும் கொண்டதாய் இருக்கிறது. இதைவிட வெளிக்குள்ளே மைன்சை விதைத்து வைத்திருக்கிறான்.

நால்வரும் சிரித்தபடி புகையிரத வீதிக்கரைக் காவலரணை நோக்கி நடந்தோம்.

"கவனம் உந்த ரெயில் கேற்றடியில போகேக்க அடிக்கிறவன். அந்த சாக்கு கிழிந்து போச்சு கவனம். பென்ட் பண்ணி வாங்கோ."

சொல்லி வைத்தாற்போல படபடவென இயந்திரத் துப்பாக்கி ஒன்று கக்கத் தொடங்கியது. 'ஆ' அதற்கு பிறகு சத்தமே இல்லை. விரைவாக ஓடினோம். ஸ்... ஸ்... என ரவைகள் தலைகளை குறிவைத்துப் பாய்ந்தன.

"அப்பாடா!" டேவிட் சிரிக்க, நாங்கள் இணைந்து கொண்டோம். சிரித்தபடி சலாம் காலைப் பிடித்தான்.

"என்னடாப்பா காயமே?"
"சீ! சும்மா சிராய்ச்சுக் கொண்டு போட்டுது."

முழங்காலிற்கு கீழாக சதை கொஞ்சம் காணாமல் போய் இருந்தது.

"மச்சான் அந்த பீல்ட் கொம்பிரசை எடு."

ஜீவன் அழகாகக் கட்டிவிட்டார். அப்போதுதான் பார்த்தேன் எனது காற்செருப்பைக் காணவில்லை. புகையிரதவீதிக் கரை ஓரமாக ஒன்று அறுந்து கிடக்க, மற்றையது விலகிக் கிடந்தது. மனதில் செருப்புக்கு இறுதி விடைகொடுத்தேன்.

"அலேட்டாகப் பாருங்கோ. பிறகு நாங்கள் நித்திரை கொள்ள விடமாட்டான்கள்." காவலரண் பொறுப்பாளன் சிரிப்புடன் கூறினான்.

"அந்தா தெரியிற மெயின் றோட்டுக்கு எதிரா எங்கட பக்கம் இருக்கிற கட்டடம் ஆஸ்பத்திரி. இங்கால கிடக்கிறது ஆஸ்பத்திரி குவாட்டஸ் என்று நினைக்கிறன். பக்கத்தில இருக்கிறது வங்கி. அங்கால பொலிஸ் நிலையம். அடுத்தது பாற்சபை. அதற்கு அங்கால இருக்கிற நாலைஞ்சு பெரிய கட்டடமும் நெல் சேமிக்கிற சபைக்கட்டடம். உதுகள் எல்லாத்திலையும் இருக்கிறான். அவ்வளவு பெரிய பொயின்றுகள் இல்லை.

ஆனால் நிறைய டம்மிப் பொயின்றுகள் வைச்சிறுக்கிறான்கள். இடைக்கிடை மரங்களில ஏறி சினைப்பண்ணுவான். இப்ப எங்களுக்கு அடிச்சவன் அந்த பொயின்ற்காரன். நெல் சபைக்கு அங்காலதான் பொலிஸ்ரேசன் இருக்கு. இங்க நின்று பார்த்தால் வடிவா தெரியாது. நாளைக்கு சுற்றிக்கொண்டு வந்து கனகராஜன்குளப் பக்கத்தால் பார்ப்பம்."

"உந்த வீடுகளிலையும் ஆமியா?"

"ஓ உதெல்லாம் அவன்தான்"

"அது ஆமியோ. ஆ... ஓ... ஓ... அவர்தான் பற்றைக்குள் மசுங்கிறார். ஒன்றுக்கு இருக்கிறார் போல!"

திரும்பிய ஜீவன் "மச்சான் என்ன ரைபிள் இருக்கு? கொண்டுவா. ஒருவரை விழுத்திறன்."

ஜீ. 3யை கொண்டுவர வாங்கிக் கொண்டு பக்சைற்றை சீரமைத்துக் கொண்டார். நானும் சைற்றாலே போடட்டோ, என்றேன். தலையசைத்து இலக்குப் பார்த்தார். ஒன்று, இரண்டு சலாம் சொல்ல நாம் தயாரானோம். **முன்னே டுமீல்! இரு வெடிச் சத்தமும் ஒன்றாய் ஒலிக்க ரைபிள்களை உள்ளேடுத்தோம். பச்சைச் சட்டைக்காரன் அலறிக்கொண்டு கீழே விழுந்தான்.**

"தூக்க வருவினம், குடுப்பம்." மீண்டும் வாசலில் பரலை சாய்த்தோம். இருவர் தூக்க ஓடிவந்தனர். பின் சட்டென்று நின்று ஏதோ சொன்னபின் வேகமாய் வந்தனர். தூக்குற நேரம் இந்த பொயின்ர எல். எம். ஜி காரன் புக்கையாக்கப் போறான். மற்றப் பொயின்றுக்க வாங்கோ என்று விரைந்தேன். நாலாவது காவலரணுக்கு அருகில் வந்துவிட்டார்கள். 30, 25, 20, 15 யார்கள் குறுகிக்கொண்டு வந்தன. பட பட பட... நாங்கள் இயங்கமுன் இராணுவத்தின் மூன்று நாலு எல். எம். ஜி. கள் முதல் பொயின்றை சல்லடையாய்த் துளைக்கத் தொடங்க, ஆர்வமாய் தூக்கினர். அப்போது ஜீ.- 3ம், எமது ரீ. 81ம் சில கணம் நெருப்புக் கக்கின. துப்பாக்கியையும், தலையையும் கீழேடுத்து விரைந்து வெளியே ஓடினோம். இன்னும் சில ஆயுதங்கள் சேர ஒரே கொண்டாட்டம்!

எமது காவலரண் மண்மூட்டைகளை ரவைகள் சோதிக்கத் தொடங்கின. டும்... டும்... டும்... அடுத்தடுத்ததாய் கேட்க பொசிசன் பங்கருக்குள் அமிழ்ந்து கொண்டோம். கும்... கும்... கும்... மூன்றும் அருகருகாய் வீழ்ந்து வெடித்தன. காவலரண் பகுதி ஒரே புகை மண்டலம். புகை மெல்ல நீங்க காவலரண்கள் ஒன்றிரண்டு மண்மூட்டைகளை இழுத்து உறுதியாய் நின்றன. சில பைகளில் மண்கொட்டியது. மூன்று பேரும் அப்படியே கிடக்கினம். சிரித்தபடி, பொழுது கருகுகையில் மெதுவாய் நகரத் தொடங்குகிறோம்.

"இனி, காலமை பார்ப்பம்; றோட்டால போவம். இருட்டினா அடிக்கமாட்டன்".

காட்டு மயில் ஒன்று தூரத்தே அகவியது. நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மின்னத் தொடங்கின. மாங்குளம் புகையிரத நிலையத்தினுள் நுழைந்தோம். எங்கும் பயணச் சீட்டுக்கள் பரவிக் கிடந்தன. மாரிகால மழையில் நனைந்து உப்பிப் போய்க் கிடந்த வெள்ளைச் சுவர்களில் சிறிது சிறிதாய் பொத்தல்கள் இடப்பட்டிருந்தன. கூரையூடாய் வானத்தின் நிர்வாணம் தெளிவாய்த் தெரிந்தது. பெரிய தீராந்தி மரங்கள் முறிந்து அந்தரத்தில் அரைகுறையாய் தொங்கிக் கிடந்தன.

"போன கிழமை இதுக்க எறிகணை ஒன்று விழுந்தது. உதுக்கிளாலை பார்த்தா சேச் கொன்வென்ற் தெரியும் பகலில சினைப் பண்ணுவான் இங்க பார்."

யன்னல் ஊடாக சுவரில் நிறைய பொத்தல்கள். யன்னல் கம்பிகள் சிலவும் வெட்டுண்டு கிடந்தன. இந்த ஒவ்வொரு ரவையும் இந்த மண்ணை நேசிக்கும், தம்மையே காணிக்கையாக்கும் -போராளியைத் தேடி செலுத்தப்பட்டவைதான். அதே செப்பு ரவைகளைத்தான் நாமும் செலுத்துகின்றோம்; ஆனால் ஆக்கிரமிப்பாளனை -எம் மண்ணை அபகரிக்கும் அந்நியனை வேட்டு வைக்க.

"மச்சான் உதுக்கை ஏதோ மணக்குது."

கதவைத் தள்ளினான் சலாம். சீ, நாயொன்று எறிகணை பீஸ் பிடிச்சு செத்துக் கிடக்குது. மணம் தாளமாட்டாது எட்டிப் பார்த்தேன். அது முன்னர் மண்ணிற நிறத்தில் சடைமயிருடன் காதுகளை செங்குத்தாய் நிமிர்த்தி, கொத்தான வாலுடன், ஒரு குடும்பத்தின் அன்பான சேவகனாய், குழந்தைகளின் தோழனாக இருந்திருக்கும். அம்மாவை காவலுடன் புலவிலிருந்து அழைத்து வந்திருக்கும். ஏன், குழந்தைகளை பாடசாலை வரை கூட்டிப் போய் கூட்டி வந்திருக்கும். இன்று அந்நியனின் குறிதேடலில் அகப்பட்டு அநாதையாய், உப்பிய வயிறுடன் நீட்டி நிமிர்ந்து கிடக்கிறது. மறுகணம், தலையை வெளியே இழுத்துக் கதவைச் சாத்தி விட்டு வெறுமனதுடன் வெளியே வந்தேன். ■

## அத்தியாயம் - 4

"அட என்ன இன்றைக்கு காம்புக்க ஏதோ எரிக்கிறான்கள். சாக முதல் பொங்கலை கிங்கல பொங்கித்தின்னப் போயினமோ?" ஜீவன் கூற எட்டிப் பார்த்தோம்.

"வாங்கோ, முன்னுக்குப் போய்ப் பார்ப்பம். ஆமியை தொடுகின்ற தூரம் வரை ஊர்ந்து செல்வோம். சென்றியில் சிகரெட் பிடித்தபடி எங்கோ பார்த்து புகை விடுவார்கள், கடமைவீரர்கள்."

"சரசரக்காதே, சத்தம் கேட்டுட்டா சல்லடையாக்கிவிடுவார்கள்."

மெல்ல ஊர்ந்து ஒரு நாயுருவிப் பற்றைக்குப் பின் மண்ணாய்க் கிடந்தோம். ஒன்றுக்கு ஒன்று குறுக்காய் இரு உடல்கள் வெந்து கருகி அக்கினிக்குள் அஸ்தமமாகிக் கொண்டிருந்தன. சுமார் பத்தடி தூரம் தள்ளி ஒரு சிங்கள வெறியன், தோளில் ஏ. கே. எல். எம். ஜி யை சிலிங்கில் தூக்கியபடி, சிகரெட் ஒன்றை இழுத்து விட்டான். (முகாம் அமைப்புகள் பற்றிக் கூறக் கூடியவையல்ல) காலில் நீண்ட பூட்ஸ் அணிந்து கண் சிவக்க நின்றிருந்தான், பின்னடியாய் நடந்து சென்று திரும்பினான்.

எங்களைக் கண்டுவிட்டானோ? ஒருகணம் சிலிர்த்தது. சாவதற்காய் வருந்தவில்லை சாவிற்கு முன் சாதிக்க வேண்டியவை ஏராளம். அதனால்தான். மண்மூடையில் சாய்ந்தான். எமக்கு அப்பால் புகையிரத தண்டவாளத்துப்புறமான பற்றை ஒன்று அசைந்தது. மெதுவாய்ச் சரசரத்தது, ஒரு கணம் கூர்மையானேன். பின் ஏ. கே. எல். எம். ஜியை கழற்றி மண்மூடையில் சாய்த்தான். மறுகணம், ஆ... ஆ... ஆ... எனக்கத்தியபடி டட்.... டட்.... டட்.... ஒரு

தொடர்ச்சி 12ம் பக்கம் ....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சூரியகந்த மலைத்தொடர் புதை குழியில் இருந்து வெளிப்படும் உண்மைகள்

சூரியகந்த மலைப் பகுதி இப்போது தென்னிலங்கையின் பரபரப்புக்களின் மையமாகப் போய்விட்டது. சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தின் கொலன்ன தேர்தல் தொகுதியில் இருக்கும் சூரியகந்த மலைப்பகுதி சாதாரணமான சனநடமாட்டமற்ற காட்டுப் பகுதி. கடல் மட்டத்திலிருந்து சுமார் 4400 அடிக்கும் உயரமான இப்பகுதியில் சிறீலங்கா ரூபவாகினி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஒளிபரப்பு அஞ்சல் நிலையம் (டவர்) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற தென் மாவட்டங்களில் ரூபவாகினித் தொலைக்காட்சி தெளிவாகத் தெரியவேண்டும் என்பதற்காக, எண்பதுகளின் நடுப்பகுதியில் அமைக்கப்பட்ட இக்கோபுரத்தின் பாதுகாப்பிற்காக ஒரு பொலிஸ் காவல் மையமும் அமைக்கப்பட்டிருந்தது. எண்பதுகளின் இறுதியில் தென்னிலங்கையில் ஜே. வி. பி. யினரின் கிளர்ச்சி வலுப்பெற்றபோது ஏற்பட்ட அச்சுறுத்தலால் பொலிசாரின் காவல் மையத்துக்குப் பதிலாக நிரந்தர இராணுவ முகாம் தோன்றியது. இதுதான் சூரியகந்த பகுதியில் இராணுவ முகாம் தோன்றிய கதை.

ஆனால் சன சந்தடியற்ற இப்பகுதி காலகெதியில் தென் மாகாணத்தில் இருந்தும், மத்திய மாகாணத்தில் இருந்தும் இராணுவ வாகனங்களில் வரும் சிவில் உடையாளர்களால் அல்லது இலக்கத் தகடற்ற வாகனங்களில் வரும் சீருடையாளர்களால் கடத்தப்படும் சாதாரண பொதுமக்களின் சித்திரவதைக் கூடமாகியது. இங்கே எழுந்த கூக்குரல்கள் புதைகுழியில் அடக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. அப்பாவிகளின் ஓலங்கள் கேட்பாரற்ற நிலையில் சந்தடியற்ற வகையில் அடக்கப்பட்டுள்ளன -என்பவற்றை அண்மையில் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகள் கதை கதையாகக் கூறத் தொடங்கியுள்ளன.

அண்மையில் மேல் மாகாண சபையின் முதல்வரும், சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தரும், எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புதல்வியுமான திருமதி சந்திரிக்கா விஜயகுமாரதுங்க சூரியகந்தப் பகுதிக்கு அழைத்து வரப்பட்டார். காணாமல் போன புதல்வர்களின் பெற்றோர் சங்க செயலாளரும் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான சமரவீரகவும் நுவரேலிய மாவட்ட சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். பி. திசாநாயக்காவும் அங்கு சமூகமளித்திருந்தனர். பல்லாயிரக்கணக்கான மக்களும், பெரும் அளவிலான மாணவ மாணவியரும் அங்கு குழுமினர். உள்ளூர், மற்றும் வெளிநாட்டு செய்தியாளர்களும், சமூக நல அமைப்பின் பிரதிநிதிகளும், வெளிநாட்டு - உள்நாட்டு மனிதநேய அமைப்புக்களைச் சேர்ந்தோரும் சூரியகந்த காட்டுப் பகுதிக்கு திடீர் விஜயம் மேற்கொண்டனர். சூரியகந்தக் காட்டுப் பகுதியில் ஒரு இடம் தோண்டப்பட்டது. நான்கு அடி ஆழம் தோண்டப்படுவதற்கு முன்பாகவே மண்டை ஓடுகளும், மனித எலும்புக்கூடுகளும், மனித சடலங்களின் எச்சங்களும், உடுதுணிகளின் மிச்சமீதிகளும், பயன்படுத்தப்பட்ட துப்பாக்கி ரவைகளும், சப்பாத்துக்களும், செருப்புக்களும், இத்துப்போன பாடசாலைச் சீருடைகளும் வெளிக்கிளம்பத் தொடங்கின.

கடந்த சுமார் நான்கு மாதங்களுக்கு முன்பே 'ராவய' என்ற சிங்கள இதழ் வெளியிட்டிருந்த செய்திகள் உண்மையானவைதான் என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இந்த செய்தியை வெளியிட்டபோதே இது தொடர்பாக உடனடியாக விசாரணை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவுக்கும், சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கும் காணாமல் போன புதல்வர்களின் பெற்றோர் வேண்டுகோள் விடுத்திருந்தனர். விசமத்தனமான செய்திகளை வெளியிட்டு அரசாங்கத்தின் மீது அபாண்டமான பழி சுமத்துவதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பாராளுமன்றத்திலேயே எடுத்துரைக்க, அரசாங்கம் இதனைத் துச்சம் என மதித்துத் தட்டிக்கழித்துவிட்டது.

ஆனால், எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மங்கள சமரவீர வேண்டுகோள் விடுத்ததைத் தொடர்ந்து ராவய மேலும் பல செய்திகளைச் சேகரித்து அவருக்கு வழங்கியது. திரட்டப்பட்ட தடயங்கள் கட்சியின் முக்கியஸ்தர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு திரைமறைவில் ஆராயப்பட்டது. அரசாங்க எதிர்ப்பு நடவடிக்கை என்ற வகையில் காணாமல் போன புதல்வர்களின் பெற்றோர் சங்கம் முன்பு நடத்திய அடையாள உண்ணாவிரதம், ஊர்வலம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி ஒத்துழைப்பு நல்கி வந்தது. ஆனால், "எமது பிள்ளைகள் பற்றிய தகவலே முக்கியம்; அரசியல் இலாபம் அல்ல" என்ற வகையில் இச்சங்கத்தினர் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

காணாமல் போன புதல்வர்கள் யார்?

தென் இலங்கையில் ஜே. வி. பியினரின் இரண்டாவது கிளர்ச்சி உச்சம் பெற்றிருந்த எண்பதுகளின் இறுதிப்பகுதியில் இராணுவ வாகனங்களில் வரும் சிவிலுடையாளர்களால் அல்லது இலக்கத் தகடற்ற வாகனங்களில் வரும் சீருடையாளர்களால் பலரும் கடத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் பலருக்கும் என்ன நடந்தது என்பது பற்றி உள்ளூர் பொலிசாருக்கோ, உள்ளூர் அரசாங்க நிர்வாகிகளுக்கோ தெரியாமல் இருந்தது. இந்தச் சம்பவங்களின் தொடர்ச்சியில் ஒரு அங்கமாக எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த பாடசாலை ஒன்றின் உயர்வகுப்பு மாணவர்கள் பாடசாலையில் வைத்து இராணுவ வாகனத்தில் வந்த சிவிலுடை தரித்தோரால் கடத்திச் செல்லப்பட்டனர். பாடசாலைச் சீருடையுடன் பாடசாலைக்கு வந்த இந்த மாணவர்கள் 31 பேரும் கடத்தப்பட்டு காணாமல் போனதைத் தொடர்ந்து காணாமல் போன புதல்வர்களின் பெற்றோர்கள் கலவரமடையத் தொடங்கினர். பாடசாலை அதிபருக்கும், உயர் வகுப்பு மாணவர்களுக்குமிடையிலான தனிப்பட்ட முரண்பாடே இக்கடத்தலுக்கு காரணமாக இருக்குமென தெரிவிக்கப்பட்டது. பெரும் பீதியுடன் பரபரப்பும் பதற்றமும் அடைத்த பெற்றோர் தமது பிள்ளைகளை மீட்டுத்தரும்படி மாவட்ட நீதிமன்றம் முதல் உயர் நீதிமன்றம் வரை பல்வேறு இடங்களுக்கும் அலைந்தனர். என்ன நடந்தது? எங்கே உள்ளனர்? என்ற தகவல்களையாவது பெற்றுத் தரும்படி மனித நேய அமைப்புக்களிடமும் இப்பெற்றோர் முறையிட்டனர். மனித உரிமை விசாரணை ஆணைக்குழு தனது விசாரணையில் இராணுவத்தைச் சேர்ந்த எட்டுப்பேரை நோக்கி சுட்டுவிரல் நீட்டிவிட்டுத் தனது கடமையை முடித்து கொண்டுவிட்டது.



சூரியகந்த மலைத்தொடரில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழி மேல் நிற்கும் சிறீலங்கா இராணுவத்தினர்.

சூரியகந்த புதைகுழியில் சுமார் முந்நூறுக்கு மேற்பட்டவர்கள் சடலமாகப் புதைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. நாலு அடி தோண்டப்படுவதற்கு முன்பே இருபது மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருப்பதாகவும் சுமார் நாற்பது அடிவரை இப்புதை குழி நீளம் உடையதாக இருக்கலாம் எனவும் கூறப்படுகிறது.

## நிமலராஜன்

புதைகுழிகள் தோண்டப்படுவதையும் தடயங்கள் வெளியே எடுக்கப்படுவதையும் கண்டுகொண்ட பொலிசார் ஆயுதபாணிகளாகவும் கலவரம் அடக்கும் குடைகளோடும் ஸ்தலத்துக்கு விரைந்தனர். பொலிசாரின் இத்திடீர் வருகையால் மக்கள் மத்தியில் சலசலப்பு ஏற்பட்டபோதிலும் அசம்பாவிதம் எதுவும் நேர்ந்துவிடவில்லை.

இந்த சூரியகந்த மலைப் பகுதியை தமது உறுப்பினர்கள் தொடர்ந்தும் பாதுகாக்கப் போவதாகவும், புதைகுழி தோண்டும் பணி தொடரப்படுமெனவும் காணாமல் போன புதல்வர்களின் பெற்றோர் தெரிவித்துள்ள அதேவேளை, நீதிமன்றம் மூலம் அரசாங்கம் இதற்கு தடைவிதித்துள்ளது.

காணாமல் போன புதல்வர்களின் விடயத்தில் கொழும்பிலுள்ள ஐரோப்பிய நாடுகளின் தூதுவர்கள் பலரும் விசேட அக்கறை கொண்டிருப்பதும் மனித உரிமைகள் அமுல் நடத்தப்படுவது குறித்து ஐரோப்பிய நாடுகள் அழுத்தம் கொடுப்பதும் கொழும்புக்கு உவப்பானதாக இல்லை. எனவே அரசாங்கம் புதைகுழியில் இருந்து மீட்கப்படும் எலும்புக்கூடு தொடர்பான விடயங்கள் குறித்து வெளிப்படையாக நீண்ட மௌனம் சாதிக்கும் அதேவேளை மறைமுகமாக கொலை மிரட்டல்களையும் விடுத்து வருகின்றது. இதன் மூலம் அரசாங்கம் மீண்டும் எலும்புக்கூடுகளையும் புதைகுழிகளையுமே சந்திக்க விரும்புவது தெரிவதாக பொதுமக்கள் விசனிக்கத் தொடங்கியுள்ளனர். கொழும்பிலிருந்து வெளிவரும் முக்கிய நாளிதழ்களின் மாகாணப் பதிப்புகள் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் மற்றும் அது தொடர்பான செய்திகள் என்பவற்றை முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்க வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அப்பத்திரிகை நிறுவனங்களுக்கு நேரில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை இந்த ஆண்டு சிறீலங்காவின் தேர்தல் ஆண்டு. அரசியல்வாதிகள் மக்கள் ஆதரவு தேடி நாயாக அலையும் காலம். எனவே தேர்தல் பிரச்சாரத்தின் போது காணாமல் போனவர்களின் விவகாரத்தை சுதந்திரக் கட்சி பூதாகரமாக்கி தனக்கு அரசியல் இலாபம் தேட முற்படும் என்பது வெளிப்படை. அத்துடன் சுதந்திரக் கட்சியின் சார்பில் புதைகுழிதோண்டும் விடயத்தில் அக்கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோவிற்கு பதிலாக திருமதி சந்திரிக்காவே முன்னணி நிற்பது அக்கட்சியின் எதிர்கால தலைமைத்துவம் குறித்து கோடிகாட்டும் ஒரு நிகழ்வாகவும் அரசியல் அவதானிகளால் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இது காலவரையில் சிறீலங்காவின் தேர்தல்களின் போது உணவு, வேலைவாய்ப்பு, கல்வி, வாழ்க்கைச் செலவு உயர்வு போன்ற விவகாரங்களே முன்னிலையில் இருந்து வந்துள்ளது. அரிசி விலை அதிகரிப்பும், ஆடைவகையின் விலையேற்றமும் ஆட்சி அதிகாரத்தை கைமாற்றிய நிலையே இதுகாலவரையிலான சிறீலங்காவின் வரலாறாக உள்ளது. ஆனால் இனிவரும் தேர்தல்களின் போது புதைகுழியில் புதைக்கப்பட்ட சடலங்களும், மீட்கப்படும் எலும்புக்கூடுகளும், வடக்கு கிழக்கு யுத்தமும், மனித உரிமை மீறல்களுமே முக்கியத்துவம் பெறக்கூடும் என்பதையே எம்பிலிப்பிட்டியவில் கடத்தப்பட்டு சூரியகந்த காட்டுப்பகுதியின் புதைகுழியில் மீட்கப்பட்டவர்களின் கதைகள் எடுத்துக் காட்டுகின்றன. இதேவேளை எண்பதுகளின் இறுதிப் பகுதியில் தென்னிலங்கையில் மட்டும் சுமார் 60,000 இற்கும் அதிகமானவர்கள் காணாமல் போயிருப்பதும், இவர்களின் ஆவிகள் கூட ஐ. தே. கட்சியை அச்சுறுத்தும் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படத்தக்கதே. ■

# ஜனாதிபதி டி. பி. நீராட 'பீதுருதாலகால' நீர்

சிறீலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜயதுங்க குளிப்பதற்கான நீரை பீதுருதாலகால நீர் வீழ்ச்சிப் பகுதியில் இருந்து பௌசர் மூலம் கொழும்புக்குக் கொண்டு வருவது தொடர்பாக விரிவாக ஆராயப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் பியமதலாவ பகுதியில் வரும் நீர்வீழ்ச்சியில் இவர் குளித்து வந்தார் என்றும், சிறீலங்காவின் ஜனாதிபதியாக வந்த பின்னர்கூட அப்பகுதிக்கு சென்று குளித்து வருகின்றார் என்றும் இவர் அங்கு செல்வதற்கு உலங்குவானூர்தி பாவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவர் இங்கு செல்வதற்கு பாதுகாப்பு முன்னேற்பாடுகள் செய்யவும் இவரின் பாதுகாப்புக்கு சுமார் 25 இற்கு மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் அனுப்பப்பட வேண்டியிருப்பதால் ஏற்படும் செலவினத்தைவிட பௌசர் மூலம் கொண்டுவரும் செலவினம் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. பாதுகாப்பு செலவினத்தை மையமாகக் கொண்டே இந்த நடவடிக்கை தொடர்பாக ஆராயப்படுகின்றதாக மேலும் தெரியவருகின்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறீலங்கா ஆயுதப்படை ே

## ( சம்பவங்கள

## தமிழீழம்

### ஜனவரி

**01 :** 'தமிழோசை' வீடியோப் படம் வெளியீடு.

**02 :** கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் படகுகள் மீது சிறீலங்காக் கடற்படையினர் தாக்குதல்; 28க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சுட்டும் வெட்டியும் படுகொலை; பலர் காயம்.

**03 :** தேசியத் தலைவர் பிரபாகரன் 'தமிழோசை' வீடியோப் படக் கலைஞர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவம்.
வவுனியா நாவற்குளத்தில் படையினர் மீது புலிகள் தாக்குதல்; 2 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு.

**04 :** கோப்பாயில் சதிநாசகாரர்களால் பஜரோ மீது கைக்குண்டு வீச்சு.

**06 :** சித்தன்கேணியில் 'சுப்பர் சொனிக்' தாக்குதல்; 10 பொதுமக்கள் பலி; 20 பேர் காயம்.

**07 :** ஆங்கிலத் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ யாழ். வருகை.

**10 :** தேசியத் தலைவர் பிரபாகரனை ஆங்கிலத் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ, வண. அம்பலவாணர், வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் சந்தித்துப் பேச்சு.
மட்டக்களப்பு மாவட்டம் கொஸ்கலையில் இருந்த சிறீலங்கா இராணுவ முகாம் மீது தாக்குதல்; ஆறு படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; 12 புலிகள் வீரச்சாவு.

**11 :** யுத்தக் கைதிகளாகப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரு சிங்களப் பொலிசார் நல்லெண்ண அடிப்படையில் புலிகளால் விடுவிப்பு.
சிறீலங்கா அரசின் பல்வேறு அடக்குமுறைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் பேரணி.

**12 :** சிறீலங்கா அரசின் அடக்குமுறைகளைக் கண்டித்து கிளிநொச்சியில் பேரணி.
மட்டுவிலில் சுப்பர் சொனிக் தாக்குதல்; அதிர்ச்சியினால் பெண் மரணம்.

**13 :** தேசியத் தலைவர் பிரபாகரனால் வீரச்செயல்கள் புரிந்த போராளிகளுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவம்.
தளபதி கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள் பயணம் செய்த எம். வி. அகத் எனும் படகு சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்தியக் கடற்படையால் கடத்திச் செல்லப்பட்டது.
மணலாற்றில் புலிகள் நடத்திய அதிரடியில் நான்கு இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; ஒரு போராளி வீரச்சாவு.
வவுனியா ஆசிக்குளத்தில் புலிகளின் தாக்குதலுக்கு ஏழு பொலிசார் பலி; ஆயுதங்கள் மீட்பு.

**16 :** சமாதானத் திட்டமொன்றுடன் படகிலே தமிழீழம் நோக்கி வந்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள் இந்திய அரசின் நயவஞ்சகச் செயலினால் சென்னைக்கு அருகே தாம் பயணம் செய்த கப்பலைத் தகர்த்து வீரச்சாவு.

**17 :** தளபதி கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளினதும் மரணத்துக்கு காரணமாக இருந்த இந்திய அரசைக் கண்டித்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோரின் பல கொடும்பாவிகள், இந்திய தேசியக் கொடி என்பன மக்களால் எரிப்பு; மூன்று நாட்கள் துக்க தினம் அனுட்டிப்பு.

**18 :** புல்மோட்டையில் புலிகள் அதிரடி; அதிகாரிகள் உட்பட 14 படையினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; 8 போராளிகள் வீரச்சாவு.
முல்லைத் தீவில் மூன்று இராணுவக் காவலரண்கள் புலிகளால் தகர்ப்பு; ஐந்து படையினர் பலி; மூவர் காயம்; ஆயுதங்கள் மீட்பு.

**20 :** தளபதி கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளின் நடுகல் நாட்டும் நிகழ்வில் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு இப்பத்துப் போராளிகளுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி; இராணுவ அணிவகுப்பு; பேரணி; அஞ்சலிக் கூட்டம்.
பொலநறுவை மாவட்டம் அலம்வெவ கிராமத்தில் இராணுவக் காவலரண் மீது புலிகள் தாக்குதல்; இராணுவப் பொருட்கள் மீட்பு.

**24 :** திருமலை - மட்டு எல்லையில் புலிகள் தாக்குதல்; 14 இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; 3 போராளிகள் வீரச்சாவு.

**25 :** செட்டிக்குளத்தில் இராணுவத் தொடர் காவலரண்கள் மீது தாக்குதல்; 4 இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; 4 போராளிகள் வீரச்சாவு.
திருமலை - மூதூர் படகு 110 பயணிகளுடன் மூழ்கியது. 7 படையினர் உட்பட 80 பேர் பலி.




**26 :** பாலமுனையில் புலிகள் தாக்குதல்; எட்டு இராணுவத்தினர் பலி.

**27 :** கேணல் கிட்டு உட்பட 10 போராளிகளினதும் மரணத்துக்கு காரணமாக இருந்த இந்திய அரசைக் கண்டித்து கலை, இலக்கிய படைப்பாளர், பத்திரிகையாளர் ஊர்வலம்; அஞ்சலிக்கூட்டம்.

**28 :** கிளாலிக் கடலில் ஷெல் தாக்குதல்; ஐந்து பயணிகள் பலி; படகு எரிந்து நாசம்.

**31 :** திருமலையில் ஊர்காவல் படையினர் மீது புலிகள் தாக்குதல்; இருவர் பலி; ஆயுதங்கள் மீட்பு.
வவுனியா மாவட்டத்தில் கறுப்பு நரி -4 இராணுவ நடவடிக்கை ஆரம்பம்.

### பெப்ரவரி

**02 :** மாதகல் கடற்கரை வீதியில் சிறீலங்கா இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல்; 10 இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; 6 புலிகள் வீரச்சாவு.
ஓமந்தையில் விமானத் தாக்குதல்; மூன்று பொதுமக்கள் பலி; 6 பேர் படுகாயம்.

**07 :** கிளாலிக் கடற்பரப்பில் படகுகள் மீது தாக்குதல்; இரண்டு படகுகள் எரிந்து நாசம்.
எட்டுப் பொதுமக்களின் சடலங்கள் பூநகரியில் கரையொதுங்கின.

**11 :** கிளாலிக் கடற்பரப்பில் புலிகள் -கடற்படையினர் மோதல்; கடற்படைப் படகு எரிந்தது.

**12 :** கிளிநொச்சியில் பாடசாலை மீது சுப்பர் சொனிக் குண்டு வீச்சு; மாணவர் உட்பட 12 பேர் காயம்.

**13 :** தேசியத் தலைவர் பிரபாகரன், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் முதல் தடவையாக நடாத்தப்பட்ட தமிழீழக் கல்வித் தேர்வில் தேசிய, மாவட்ட, கோட்ட மட்டத்தில் சிறப்புத் தகைமை பெற்றவர்களுக்கு பரிசும், பாராட்டும் ஆசிச் செய்தியும்.
தளபதி கேணல் கிட்டு உட்பட 10 போராளிகள், பயணிகள் பயணம் செய்த கப்பலை சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்தியா கடத்திச் சென்றதை விசாரிக்க சர்வதேச விசாரணைக்குழு அமைக்குமாறு புலிகள் ஐ. நா. -விடம் கோரிக்கை.
பூநகரிப் பாதை விவகாரம்; அகதிகளுக்கான ஐ. நா. உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் -புலிகள் சந்திப்பு.

**16 :** தளபதி கேணல் கிட்டுவிற்கு வீர அஞ்சலி செலுத்தி தலைவர் பிரபாகரன் செய்தி.
கிளாலிக் கடலில் உலங்கு வானூர்தித் தாக்குதலுக்கு 6 படகுகள் எரிந்து நாசம். இருவர் பலி.

**17 :** 'வனசன' இராணுவ நடவடிக்கை மணலாற்றில் ஆரம்பம்.

**22 :** பொருளாதாரத் தடையைக் கண்டித்து யாழ் செயலகம் முன் மக்கள் மறியல்; பேரணி; யாழ் குடாநாட்டின் பல பாகங்களிலும் பேரணி.

**23 :** பொலநறுவை மாவட்டம் மதுறு ஓயாவில் இராணுவ மினிமுகாம் தகர்ப்பு; 9 இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; இரண்டு போராளிகள் வீரச்சாவு.
மாதகல் கரையோரம் 'ரணவிம' (யுத்த களம்) இராணுவ நடவடிக்கை; இழப்புக்களுடன் இராணுவம் பின்வாங்கியது; எறிகணை வீச்சுக்கு ஆறு பொதுமக்கள் படுகாயம்.

**24 :** மன்னார் மாவட்டம் நானாட்டானில் ஏழு இராணுவக் காவலரண்கள் தகர்ப்பு; பல இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; 11 போராளிகள் வீரச்சாவு.
கிளாலிக் கடற்பரப்பில் புலிகளின் கண்ணிவெடியில் கடற்படை ரோந்துப் படகு சிதறியது; 4 கடற்படையினர் பலி; மூவர் காயம்.

**28 :** தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் பேட்டி இலண்டன் பி. பி. சி. யில் ஒலிபரப்பு.
மட்டக்களப்பு திகினிவெட்டையில் 6 தமிழர்கள் சுட்டுக் கொலை.
மன்னார் கள்ளியடி கிராமம் மீது விமானக்குண்டு வீச்சு; ஐவர் பலி; 10 பேர் காயம்.

### மார்ச்

**03 :** கிளாலிக் கடற்பரப்பில் புலிகளின் தாக்குதலுக்கு கடற்படை படகு எரிந்தது; ஓர் உயர் அதிகாரி பலி.
காக்கைத் தீவு கரையோரப் பகுதியில் விமானக் குண்டு வீச்சு; இளம் பெண் பலி; மற்றொருவர் காயம்.

**05 :** தேசியத் தலைவர் பிரபாகரன், மன்னார் மாவட்டத்தில் தமிழீழக் கல்விப் பொதுத் தேர்வில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவருக்கு பரிசும் பாராட்டும்.

**07 :** தேசியத் தலைவர் பிரபாகரன், போர் நடவடிக்கையில் தீரச் செயல் புரிந்த போராளிகளுக்கு பரிசும் கௌரவிப்பும்.
பூநகரிப் பாதை விவகாரம்; புலிகள் -ஐ. நா. அதிகாரிகள் பேச்சு.
வவுனியா தென் மேற்கில் 'சத்த பகர' இராணுவ நடவடிக்கை; வவுனியா வட கிழக்குத் திசையில் 'புல்மூன்' இராணுவ நடவடிக்கை.

**08 :** அனைத்துலக மகளிர் தினம்; தலைவர் பிரபாகரன் செய்தி; எழுச்சி ஊர்வலம்.

**11 :** மட்டக்களப்பு காடுகளில் பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பம்.

**15 :** மன்னார் தீவில் அதிரடி; 3 பொலிசார் பலி.

**20 :** கற்பூரப் பொதிக்குள் சக்தி வாய்ந்த வெடிமருந்து; புலனாய்வுத் துறையினரால் கண்டுபிடிப்பு.

**24 :** கிளாலிக் கரையோரம் நோக்கி கடற்படைப் படகுகள் பீரங்கித் தாக்குதல்; யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவன் பலி; கலைப்பீட மாணவர் இருவர் படுகாயம்.

**26 :** முல்லைத்தீவில் விமானத் தாக்குதல்; 13 பொதுமக்கள் காயம்.
திருமலையில் ரோந்து சென்ற படையினர் மீது தாக்குதல்; இரண்டு சிப்பாய்கள் பலி;
வடக்கில் படை அதிகாரியும், சிப்பாயும் கண்ணிவெடியில் சிக்கி பலி.

**27 :** மணலாற்றில் இராணுவக் காவலரண் மீது தாக்குதல்; 5 இராணுவத்தினர் பலி; ஆயுதங்கள் மீட்பு; ஒரு போராளி வீரச்சாவு.
மன்னார் மருத மடுவில் 'செல்'லுடன் விளையாடிய 4 மாணவர் பலி; 11 பேர் காயம்.

**30 :** செட்டிக்குளம் காவலரண்கள் தகர்ப்பு; 3 இராணுவத்தினர் பலி; 5 பேர் காயம்; ஆயுதங்கள் மீட்பு; ஒரு போராளி வீரச்சாவு.
மன்னாரில் 'கிறாப்கோ' இராணுவ நடவடிக்கை ஆரம்பம்.

**31 :** கிளாலிப் படுகொலைகளைக் கண்டித்து பல்கலைக்கழக மாணவர் ஆர்ப்பாட்டப் பேரணி.

### ஏப்பிரல்

**01 :** நொச்சிமோட்டையில் 'புளொட்' குழுவினர் மீது தாக்குதல்; 6 பேர் பலி; ஆயுதங்கள் மீட்பு.

**03 :** 'செல்'லைப் பரிசோதித்தவர் பலி; பாலமோட்டையில் சம்பவம்.

**04** கட்டுவன் பகுதியில் 'சத்பல' இராணுவ நடவடிக்கை.
தாண்டான்மலையில் புலிகள் தாக்குதல்; 2 படையினர் பலி.

**05 :** மூன்று இராணுவ வலயங்களாக கிழக்கு மாகாணம் பிரிப்பு.
மன்னார் பாலத்தில் வைத்துப் படையினர் மீது தாக்குதல்; 3 படையினர் பலி; ஜீப் கடலில் பாய்ந்தது.

www.tamilarangam.net

Network

January 1994 Published by the International Federation of Tamils

"We launched our struggle for self determination and political independence because of the systematic oppression of our people by the Sri Lankan state..."
- Velupillai Pirabakaran, Leader of the Liberation Tigers of Tamil Eelam

# Sri Lankan supersonic jets bomb temples, hospitals, homes and offices in Tamil homeland -

# If this is not State terrorism what is?

The military complex built by the Sri Lanka government at Pooneryn and Nagathevanthurai to economically strangle the Jaffna Peninsula by blocking all communications between the peninsula and the mainland was over run by the LTTE in the early hours of the morning of 11 November.

In retaliation, the Sri Lanka airforce bombed purely civilian targets miles away from the scene of battle. Supersonic jets and other bomber planes attacked the Jaffna Secretariat buildings which house the Kacheri and other offices. Churches, temples and hospitals were also targeted.

Hot Spring, the Weekly published in Jaffna commented on 21 November: **"The continued attacks on selected targets where civilians converge evidence the intent of the government to let loose a reign of terror in violation of all norms of the laws of armed conflict."**

### Secretariat bombed on 12 November

On the morning of 12 November at about 8.30 a.m. Sri Lanka supersonic planes bombed the Jaffna Secretariat premises. The first bomb hit the Kacheri and splinters caused injury to Mr.K.Manickavasagar, the Government Agent who was at his desk attending to his duties. As the shrapnel hit Mr.Manickavasagar he ran out of his room and down the stairs to reach the lower floor. While he was still on the stairs, a second bomb hit his office and it came tumbling down. Mr.Manickavasagar told pressmen that it was fortunate that he ran out of his office because had he delayed, he would have been killed by the second bomb which brought his office down. Mr.Manickavasagar was admitted to hospital for treatment. One person was killed and over 25 injured in the attack on the Secretariat. Some of the injured were staff attached to the Jaffna Hospital whilst the others were members of the public who had gone to the Kacheri.

### Catholic Church bombed on 13 November

On the following day, 13 November , Sri Lankan supersonic bombers attacked St.James Church at Gurunagar at about 7.30 a.m. St.James is one of the largest and oldest Roman Catholic churches in Jaffna. The church was completely destroyed. A nursery school nearby, two shops and ten houses in the neighbourhood were also destroyed. Ten persons were killed and over 30 injured. Of the dead three belonged to the same family. The bodies of the dead were torn and charred. The blown up parts of all the bodies were collected and buried together.

### Jaffna Hospital attacked

On the same day at about 2.30 p.m. Sri Lankan supersonic jets bombed the safety zone around the Jaffna Hospital. The bombs were dropped within 50 yards of the main entrance to the Hospital. This area is under ICRC control. Doors, windows and tiles of the Hospital were broken and fell in pieces. The outer wall of the OPD came tumbling down. Glass shutters of some vehicles within the hospital were shattered. Two security guards of the hospital, a Red Cross volunteer worker, and an infant in the hands of a woman who rushed into the hospital for safety were injured.

### Nanthavil Amman Temple attacked on 13 November

On the evening of the same day, the Sri Lankan supersonic bombers targeted the Nanthavil Amman Temple at Kokuvil but the bombs fell on a land on the rear side of the temple. Damage to the temple was averted but six houses in the neighbourhood were damaged - one of which was completely destroyed. 8 persons were injured.

### Vairavar Temple bombed on 14 November

On the evening of 14 November, the Sri Lanka airforce attacked the Vairavar Temple at Varany. The temple was completely destroyed. Seven persons were injured. A number of houses were also damaged.

### Killinochchi Hospital targeted on 15 November

Sri Lankan bombers tarhetted the Killinochchi Hospital on November 15 at about 11.15 a.m. The hospital came in for a direct hit. The Colombo based Virakesari reported on 21 November:

**"As a supersonic bomber flew over our hospital, those inside fearing that bombs may fall be-**

*continued on page 3*

"Daily life in Jaffna is conditioned by the distant drone of aircraft engines and the run to the bunkers behind almost every house. ..Over 1,000 civilians have been killed in the three years bombing of Jaffna..Another 1,000 children died needlessly in 1992 because Jaffna hospitals lack basic drugs and medical equipment to save them... The Sri Lankan airforce lack the technology and advanced intelligence to pinpoint legitimate targets..There were no warnings, no air-dropped leaflets announcing operations. Why should there be? After all, no one is watching. There will be no international protest or outcry. ." *says British Refugee Council publication, Sri Lanka Monitor, July 1993*

## Bishop D.J.Ambalavanar, Bishop Thomas Saundranayagam and Nallai Thiru Sampandar Atheenam protest :

"A close statistical study of the air raids carried out by the Sri Lankan airforce in the North will show that the victims of the raids have almost always been innocent helpless civilians... When this is the case how could any one avoid concluding that this is organised State terrorism.?"

In a joint statement made on 17 November 1993, Bishop D.J. Ambalavanar, Bishop Thomas Saundranayagam and Nallai Thiru Sampandar Atheenam declared: "We religious leaders from the North, belonging to the Hindu, Christian and Catholic religions... strongly protest against the actions of the Sri Lankan Air Force which seems guided by the sole motive of revenge and striking terror among the Tamil people."

**The statement added: "Following on the recent Pooneryn operations, the Air Force has used its supersonic bombers to bomb the Jaffna Secretariat killing and injuring several. The Government Agent of Jaffna, Mr.K.Manickavasagar being one of those injured. It has bombed a place of worship, the St.James Catholic Church in Main Street, Jaffna destroying that large and venerated house of God and killing and injuring several innocent citizens. It has dropped its bombs within the protected zone around the Jaffna General Hospital damaging the hospital and striking panic among the patients and the public. We have reports that the hospitals in Killinochchi and Mulaitivu have also been bombed. The market block in Chavakachcheri has also been bombed and destroyed.**

**All these buildings used exclusively for sacred worship and public services are such large and prominent structures that no Air Force can pretend innocence about the targets being struck....**

These events are not just sporadic occurrences but have been repeated so often in the past that we cannot but conclude it is part of state policy against the Tamils. A close statistical study of the air raids carried out by the Sri Lankan airforce in the North will show that the victims of the raids have almost always been innocent helpless civilians... When this is the case how could any one avoid concluding that this is organised State terrorism.?

**We wonder whether massacring innocent civilians can bring any honour or credit to an Air Force. We would therefore appeal to the Government to control its Air Force and not permit it to be an instrument of State Terrorism**

**Our desire is for Peace and a Just Peace."**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# Candidly Speaking

**Nadesan Satyendra**

## Sri Lanka's Jeff and Mutt Act

**It appears that the Sri Lanka government has embraced the tactics of Jeff and Mutt in its continuing efforts to avoid direct talks with the Liberation Tigers.**

Prime Minister Ranil Wickrem–asinghe plays the soft spoken reasoning Jeff role.

The state controlled Sri Lanka Sunday Observer reported on January 16 in its front page, that Prime Minister Ranil Wickremasinghe had extended an open invitation to the LTTE and its leader, Velupillai Pirabakaran to make representations to the Select Committee on Constitutional Reforms.

''The Select Committee will obtain public representation at the widest possible level and the LTTE can make their own representations to it'' he said.

At the same time, Sri Lanka President D.B.Wijetunga cast in the role of the tough talking Mutt continued to reiterate that there is no ethnic problem but only a 'terrorist' problem.

Reinforcing the tough Mutt approach, the Sri Lankan airforce systematically bombed hospitals, churches, temples and other civilian targets in the Tamil homeland.

Three religious leaders in the North, Bishop D.J.Ambalavanar, Bishop Thomas Saundranayagam and Nallai Thiru Sampandar Atheenam protested on 17 November 1993:

**''A close statistical study of the air raids carried out by the Sri Lankan airforce in the North will show that the victims of the raids have almost always been innocent helpless civilians. When this is the case how could any one avoid concluding that this is organised State terrorism.?''**

Roman Catholic Bishop Thomas Saundranayagam told Sri Lanka President Wijetunga:

**''Please instruct your forces to abide by international law and respect civilian population centres and sacred places of worship.''**

Sri Lanka's new Army Commander, Lt.General Gerry de Silva weighed in with his own aggressive contribution. He declared in the Sinhala owned Sri Lanka Sunday Times on 16 January: ''We have made our plans and discussed them with the Ministry of Defence... The thrust of our approach, I can say, is two fold. **The short term strategy is immediate offensive action...** Certain (long term) strategies are (also) being worked out. Ofcourse this needs a lot of material, arms, ammunition, vehicles.''

It will not be surprising therefore if Prime Minister Wickrem–asinghe's 'invitation' to the LTTE to join the general public in making representations to the Parliamentary Select Committee for Constitutional Reform will be seen by many as a disingenuous propaganda ploy.

It appears that whilst the Sri Lanka government prepares for a military onslaught on Tamil Eelam, it is also anxious to show the international community on which it is dependent for 'materials, arms, ammunition and vehicles'', that the Government is not intransigent. The pressing bottom line is that the Sri Lanka Government needs to replenish the Rs.750 million losses incurred in the recent Janakapura, Killali, Devro and Pooneryn debacles. But some Western Aid Donors may have begun to question the wisdom of pumping in more arms to secure stability in the island. Again, the Sri Lanka Army's recent track record may not have engendered much confidence in its ability to secure the so called 'military solution'.

At the same time, it appears that President D.B.Wijetunga's tough Mutt act, is intended to secure victory for the UNP at the forthcoming polls by out doing the other Sinhala political parties in the Sinhala Buddhist chauvinism stakes.

The point made by the late Sathasivam Krishnakumar, the charismatic head of the International Secretariat of the LTTE in July 1991 bears repetition yet again:

**''Whilst Sri Lanka talks peace it continues with its military efforts. If we look at the past we can** see why. Sinhala Buddhist chauvinism has been institutionalised in Sri Lanka and today it has become more powerful than the politicians themselves. **Indeed even if some Sinhala politicians seek to settle the conflict, Sinhala Buddhist chauvinism will seek to prevent such a settlement...** This Sinhala chauvinism which was nurtured by Sinhala politicians for their electoral advantage, has grown into a Frankenstein monster which now has the power to destroy and make Sinhala politicians. This we understand very well.''

For three long years, the Sri Lanka government put forward the Parliamentary Select Committee on Ethnic Affairs as the forum for the resolution of the conflict. Before that it was the All Party Conference. Now it is the Parliamentary Select Committee on Constitutional Reforms.

The true intent of Prime Minister Wickremasinghe's 'invitation' was revealed by the place where he made it - to a Sinhala audience at a public meeting in Marambe, Akuressa in the deep Sinhala South! And presumably Prime Minister Wickremasinghe wanted to be taken seriously.

He said it was a canard spread by the LTTE that the ''government is not interested in a political solution after Mr.D.B.Wijetunga took over as President.'' Prime Minister Wickremasinghe even tried to pass off the 'invitation' to the LTTE to join the general public to make representation to the Select Committee as 'discussions' with the Government. He said: ''Several opportunities were given for the LTTE to come for discussions with the Government. But the LTTE has failed to come forward.'' The Sri Lanka Sunday Observer went one better and headlined the news story: ''Ranil invites Prabha for talks''!

Though the political compulsions which led the Sri Lanka Sunday Observer to mislead its readers may not be without significance the fact remains that Prime Minister Wickremasinghe was being economical with truth when he declared that 'several opportunities were given for the LTTE to come for discussions with the Government.'

The truth is that the Sri Lanka government has, at every turn, refused to sit and talk with the LTTE on equal terms. The truth is that the Sri Lanka government has used and continues to use the Parliamentary Select Committee mechanism as a way of avoiding direct talks with the LTTE.

The trouble, however, with the tactics of Jeff and Mutt is that, though directed to serve the same end, they are mutually contradictory.

If there is no ethnic problem, what is the so called Select Committee on Constitutional Reforms about and why invite the LTTE to make representations to it? On the other hand, if the Government cannot or will not enter into direct talks with the LTTE because it categorises the lawful armed resistance of the Tamil people led by the LTTE as 'terrorism', why does it invites the very same LTTE to make representations to the Select Committee? Is it that, that which is so called 'terrorism' to Sri Lanka's President, is not 'terrorism' to Sri Lanka's Prime Minister?

The Sri Lanka government is naive if it believes that the 'tactics' of Jeff and Mutt will not be seen for what they are: tactics meant to avoid direct talks with the LTTE and at the same time, further Sri Lanka's continuing genocidal onslaught on the Tamil people.

The words of Velupillai Pirabakaran on Maha Veerar Thinam on 27 November 1993 will focus Tamil minds and hearts on the task ahead: **''I do not believe that there will be a radical change in the hardened attitude of Sinhala chauvinism. Without such a radical change there is no hope for a peaceful resolution of the problem. Because of the rigid and hardline attitude of Sinhala chauvinism, the creation of an independent state is the only path open to the Tamil people. We have no alternative other than to proceed along that path.''**

---

## Network

The demand for Tamil Eelam is a national question. It is, accordingly, an international question as well.

On the one hand, Sinhala chauvinism cannot succeed in its attempt to subjugate the people of Tamil Eelam without aid and support from influential sections of the international community, both in the Indian region and outside. On the other hand, in the end, Tamil Eelam itself will need to secure broad based international recognition.

To address the international frame within which the Tamil national struggle must perforce take shape, is therefore, not a matter of self indulgent luxury but a matter of immediate, direct and practical significance.

The new balances that are being struck in the emerging multi–polar world are not without relevance to the struggle of the people of Tamil Eelam. It is said states have permanent interests but do not have permanent friends. This may be more so in the case of nations struggling to become states.

If the 1950s and the 1960s were the decades of the anti colonial liberation movements, the 1990s is proving to be the decade of the post colonial national liberation movements. Self-determination is not a dirty word. The political force that it generates will, in the end, prevail over the power exerted by many existing state structures.

**Network** exists to help, support and network the world wide efforts being made to secure international recognition of the Tamil right to self determination.

Correspondence Address:

The International Federation of Tamils, 17, Birchview Close, Yateley, Camberley, Surrey GU17 7DL

---

## Sri Lanka's Killing Fields Exposed

**Whilst the Sri Lankan airforce continues its terrorist attacks on civilian population centres in the Tamil homeland, Sri Lanka's killing fields in the South were exposed to world attention in early January 1994.** Molly Moore and John Ward Anderson reported in the Washington Post on 11 January 1994: **''The discovery of the mass grave site (in Suriyakanda) came as human rights groups and international organisations have voiced concerns about new crackdowns on minority ethnic groups (Tamils).. renewing old fears of widespread human rights abuses...''**

The news report added: ''High on a cloud shrouded mountain top in southern Sri Lanka, authorities last week discovered two mass graves filled with skulls and bones of dozens of broken bodies that many local residents believe may be evidence of one of the most brutal government crackdowns in the island's history... The grave was uncovered after a tip from an unidentified informant who said as many as 300 bodies are buried along the mountain summit just yards from two heavily guarded state owned communications and television towers (in Suriyakanda)... Mothers, fathers and siblings sobbed and wailed as the grave diggers lifted skulls with dirty rags still tied across mouths and eye sockets, the blue shorts of a school boy according to witnesses who helped recover the first bones found on 3 January... Tens of thousands of young men were abducted and presumably killed between 1987 and 1990 including the 48 young men from the nearby town of Embilipitiya...''

**''In the past few weeks, human rights organisations have criticized the government for indiscriminate detention of members of the Tamil ethnic group living in the capital, Colombo; for imposing emergency laws on the news media that ban publication or broadcast of anything critical of the President; and for taking a new hard line stance against separatist guerillas engaged in civil war in the northern and eastern sections of the country where the militant Liberation Tigers of Tamil Eelam want to establish a homeland.''**

''It has been the accepted wisdom for over a year that the human rights situation in Sri Lanka has been on the mend. But recent developments bring out the deceptive nature of this position'' a Sri Lankan Human Rights Group reported recently.''

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# If this is not State terrorism what is?

*continued from front page*

**came very agitated. There was pandemonium. Many of the patients lay down under their beds in fear. Some went outside and laid themselves face downwards on the verandah and on the ground. I remained inside my office in the ward. Everywhere large swirls of dust and debris were deposited. I felt as if my uniform and belt was being ripped out by somebody in a twinkling of an eye. After that I did not know what happened."**

அந்தக் கொடியவர்களுக்குத்தான் எவ்வளவு மனத்துணிவு...? சிறிதும் இரக்கமில்லாமல் பெற்றவர்கள் முன்னால் அடித்து... இழுத்துச் செல்ல... எப்படி...?

அன்று நடந்த அனர்த்தங்கள் ஏதோ நேற்று நடந்து முடிந்தவை போல என் நினைவில் விகாரமாய் நின்று நெருடிக் கொண்டிருந்தன.

ஊரையே குலுக்கி எடுத்தபடியிருந்த வேட்டுக்கள்...!

வானத்தில் வட்டமிட்ட விமானங்களின் பேரிரைச்சல்...!

கடலிருந்து வந்த எறிகணைகளின் அதிர்வுச் சிதறல்கள்...!

இன்னும், அதிரவைத்த குண்டுகள்...! இரைச்சல்கள்...! மரண ஓலங்கள்...!

தொடர்ந்து, இராணுவம் வந்துவிட்டதாகக் காற்றுவாக்கில் வந்த செய்தி...!

மக்களுடன் மக்களாக கோயிலில் தஞ்சம்...!

கோயிலை ஆக்கிரமித்தவர்கள் செய்த அடாவடித்தனங்கள்...

இறுதியில், அவனையும், அவனையொத்தவர்களையும் இழுத்துச் சென்றது...

அந்தக் கொடூர நிகழ்வுகள் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்து நிற்க, இயலாமை மெல்ல மெல்ல உருவெடுத்து பிணமாய் அழுத்துகிறது. மனதில் ஆர்ப்பரித்த நினைவுகள் அடங்காமையினால், எழுந்து காவேரியின் அறையை நோக்கி நடக்கிறேன். அவள் எதையோ ஆழ்ந்து படித்துக் கொண்டிருப்பது தெரிகின்றது.

எனது வருகையை சற்றும் எதிர்பார்த்திராதவள் போல எழுந்து நின்றாள்.

'சுதந்திரப் பறவை' என்ற புத்தகத்தின் மேல் தன் பார்வையை பதித்தவளாக,

”என்ன அப்பா...?” என்றாள்.

”வாற மாதம் சோதினையெல்லே வருகுது. நீ படிக்கிறதாகவும் தெரியேல்லை...”

தொடர்ச்சி 13ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போர் உலா...

லிங் முடியும்வரை அவன் றிகரை விடவில்லை! சே இதுவா இரா ணுவம்? கட்டுப்பாடற்ற கட்டாக் காலிக் கும்பல்கள்! மெதுவாய் திரும்பி ஊரத் தொடங்கினோம்.

அந்த ஒ. பி. சென்றி இவ்விதம் வீதியை நோக்கி சில ரவை களை அனுப்பி, தான் இருப் பதை உறுதி செய்துகொண்டான்.

மெதுவாய் வீதியோரமாய் நடக்க ஆரம்பித்தோம். பிணவாடை இன்னமும் சுவாசத்தை விட்டுப் போகவில்லை. கட்டுப்பாடற்ற இராணுவம் வெளியே புறப்பட் டால் 1 றம் ர்வுண்சை சனத்தில் புதைத்திருப்பான் இதை எண் ணியபடி நடந்தேன். காலில் தைத்த முட்கள் குத்திக் குத்தி வலித்தது; இதயத்திலும்தான். நேரம் காலை 9.00 மணி. இப்போ வெளிக்கிட்டாத்தான் மத்தியானத்துக்கிடையில் போய்ச்சேரலாம்.

"காம்பில்லாட்டி ஐந்து நிமிசத் தில போற தூரம்."

ஸ்ரெயினரை தோளில் மாட்டிய படி முன்னே நடந்தார் ஜீவன்.

"உங்கட மற்றாக்கள் எங்க?"

"அவைகள் அங்கால போட்டி னம்."

சைகையைப் புரிந்துகொண்டார். எத்தனை உருப்படி? விரல்சைப் பில் தெரிந்துகொண்டார். அப்ப நாங்கள் கெதியா மற்ற ஒழுங்கு களை செய்யவேணும். ஜீவன் தூரத் தெரிந்த முகாமை கூர்ந்து பார்த்துச் சொன்னார்.

"வேளைக்கு முடிச்சு உரும றைப்பு பண்ணிட்டா பிரச்சினை இல்லை. நேற்றைய மாதிரி அடிவாங்காமல் இதுக்குள் ளாலை போவம்."

தூரத்தே இராணுவக் காவலரண் கள் குட்டிப் பிரமிட்டுகளாய்த் தோன்றின. ஏரியல் கம்பீரமாய் நின்றது. சூரியனின் வெப்பக் கதி ரில் இலேசாய் மின்னியது. 'இரு இரு வாறன்' -கறுவியபடி நடந் தேன்.

பிரதான வீதியை விட்டிறங்கி பாலத்தின் மேலாக ஒரு வீட்டு வாசலுக்குப் போய், பிரிந்து கிடந்த அந்த வீட்டைப் பார்த்த படி, மூலைவேலியைத் தாண்டி ஒற்றையடி வயல் பாதையூடாய் நடக்கத் தொடங்கினோம். இடுப்பளவு உயர ஜாம் மரக்கன் றுகளின் பசிய இலைகள் எங் களை மறைத்தன. அங்கிருந்து 'பிவ்ரியால' அடிப்பானோ? இல்லை, எறிகணை போடு வான்! வரம்புகளூடாய் தாவித் தாவி துணுக்காய் வீதியில் ஏறி னோம்.

"உங்க பாருங்கோ, உதில எரிச் சுக் கிடக்கல்லே?"

"ஓ, ஓமோம்! இப்ப இரண்டு மூன்று மாதத்துக்கு முதல்ல ஆமியை கெலியால இறக்கி பெரிய அடிபாடு நடந்தது. அதில செத்த ஆமியைத்தான் இந்த இடத்தில் எரித்தது."

"எப்படி தெரியாமல் இறக்கின வன்?"

"எங்களுக்குத் தெரியும், காம்புக் குள் விடாட்டி எங்காவது பின் னாலை இறக்கி மூவெடுப்பான் என்று இருந்தம். அப்ப ஒரு நாள் விடிய நாலு கெலி வந்து, நாங்கள் எதிர்பார்த்த பக்கத்தில நாலைந்து தரம் சுற்றிப்போட்டு, உதுக்கையிருக்கிற கற்குளத் துக்கு முன்னால இறக்கிவிட் டான். அவ்விடத்தில எங்கடயள் கொஞ்சந்தான் நின்றவங்கள். இவன் பட பட என்று இறங்கிட் டான். காடு கீடெல்லாம் ஒரே அடி அடிச்சான் கெலி. கிட்டத் தட்ட 150 பேர். உடனே உடைக் கத் தொடங்கிட்டான். பிறகு நின்ற ஸ்ரான்பை குறூப்பையும் போட்டு அடிச்சது.

அவன் உள்ளுக்குள்ள போட் டான். அதில செத்த எட்டு ஆமிக்காரன் பொடியும் உதில தான் எரிச்சது. அதற்குப் பிற குதான் அவங்கள் பொம்மரா லையும் அடிச்சு மிச்ச இடமெல் லாம் பிடிச்சவங்கள்".

"நாங்கள் வைத்திருந்ததையோ?"

"ஓமோம். காம்பின்ர சூழல் அமைப்பும் ஆட்பலமும் இல் லாததால, பொலிஸ்ரேசன், கண் ஆஸ்பத்திரி, மடம், சேச், கோயில், வங்கி, போஸ்ற் ஒபிஸ், பாற்சபை, நெல் சேமிக் கிற இடம் இதெல்லாம்தான்".

எமது பலம் குன்றிய வேளையில் பின்வாங்குவது ஒரு சிறந்த ராஜதந்திரம் என சேகுவேரா கூட கூறியுள்ளார். நாம் அவ் வாறு செய்யாதிருப்பின் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கும். துணுக்காய் வீதி வளைவூடாய் நடந்து, கற்குளத்தின் குளக்கட் டில் வரிசையாய் ஏறினோம். தூர இன்னும் அன்ரனா (ஏரியல்) பார்த்தபடி இருந்தது. ஓரளவு விஸ்தீரணமான குளம் அது. தாமரைகளோ, அல்லிகளோ பூத்திருக்கவில்லை. சில இடங் களில் குளத்தில் திட்டுத்திட் டாய் உயர்ந்த மரங்கள் காய்ந்து சருகுகளை உதிர்த்து தனியனாய் நின்றன. சருகுகள் குளக்கரை யில் ஒதுங்கிக் கிடந்தன. நீர்க் காக்கைகள் ஒன்றிரண்டு மரங்க ளில் குந்தியிருந்து அங்குமிங்கு மாய்ப் பார்த்த வண்ணம் இருந் தன.

குளத்தின் துரிசு இறுகிக் கிடந் தது. மரக்கட்டையொன்றிலிருந்த ஏதோ ஒன்று நீரில் குதித்து மறைந்தது.



விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கத்தின் யாழ், மாவட்டப் பொறுப்பாளராக இருந்த போது கப்டன் மலரவன்.

"உந்தா முதலை குதிச்சுப் போகுது" என்று, அதன் சொர சொரப்பான முதுகைச் சுட்டிக் காட்டினார்.

"முதலையில்லாதது குளமே?" என்று சிரித்தபடி நடந்தோம். கலிங்கு குட்டையில் ஏராளம் குஞ்சுமீன்கள் அங்குமிங்குமாய் நீந்தித் திரிந்தன. வெண்ணிறக் கொக்கு சிறகை அகலவிரித்து பறந்து வந்து, குட்டை அருகே வசதியாய் அமர்ந்து கொண்டது.

வெயிலில் வாடிய மீன்கள் அந்த நிழலில் கூட்டமாய் ஒதுங்கின.

"என்ர அப்பா! எவ்வளவு வயல் எல்லாம் சும்மா கிடக்குது".

"சனமொன்றும் வந்து செய்யிற தில்லை. எல்லாம் பயப்பிடுது கள்".

"மூன்று மைல் நடந்திருப்பமே?" ஜீவன் சிரித்தார். "ஒரு இரண்டு மைல் இருக்கும்".
அடுத்த குளக்கட்டு குத்தென நின்றது ஏறினோம். கண்ணெ திரே பரந்து கிடந்தது, சாமியார் குளம். சின்னஞ்சின்னனாய் ஏராளம் பூக்கள் நீரின் மட்டத் தில் பூத்துச் சொரிந்தன. பெரிய விருட்சங்கள் சாய்ந்து நல்ல நிழலாக நின்றன. கொஞ்ச நேரம் நின்றிட்டுப் போவம். இங் கும் மரங்கள் அழுகி அழுகி நின் றன. நல்ல நல்ல விருட்சங்கள் நீருக்காய் ஏமாந்து இன்று நீரே விழுங்கி விட்டது. இலை, வேர், காய் எல்லாவற்றையும் உறிஞ்சிவிட்டது. இனி சில காலத்தில் தண்டும் உக்கிவி ழும். பின், அடியே தெரியாமல் நீர் சிரித்துக் கும்மாளமடிக்கும். அழிந்த மரங்களை ஒரு நிமிடம் பரிதாபமாய்ப் பார்த்தேன்.

கல்லு முள்ளில் பதித்த கால் களை பசும் புல்லில் வைக்கும் போது சுகமாய் இருந்தது. ஏன் அழுகிறாய்? இன்னும் கொஞ்சக் காலம்தான். அலுத்துக் கொண் டது, காலைப் பார்த்த மனம். காட்டு ஆமணக்குகளை விலக் கிக் கொண்டு நடந்தோம். தூரத்தே இடிந்த, எரிந்த குடி சைகள் தெரிந்தன. அவற்றைப் பார்த்து ஆறுதலடையவில்லை. வந்துவிட்டோம் என ஆறுதல டைந்தோம். காட்டு ஆமணக் குகளை விலத்தி ஒற்றையடிப் பாதையூடாய் நடக்க ஆரம்பித் தோம். அது பிரதான வீதியின் பொலிஸ் நிலையத்திற்குப் பின் னாலுள்ள காட்டுப் பகுதியைக் கடந்த குடியிருப்புகள். அம் மக் கள் பெருநிலங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகளாக இருந் திருக்கலாம்.

அவை பெரும்பாலும் மண்ணால் சுவர் எழுப்பப்பட்டு அமைக்கப் பட்டும், ஒரு சில செங்கற்க ளாலும் அமைக்கப்பட்டிருந்தன. ஏறத்தாழ முழுவதும் எறிகணை விழுந்து சிதைந்து போய்க் காணப்பட்டன. கிணற்றடியைத் தாண்டி வீட்டுக்கான நடைபா தையில் இறங்கி நடந்தோம். இருமருங்கும் செவ்வரத்தை மரங்கள் காய்ந்து பின் புதுத்த ளிர்களைப் பரப்பியிருந்தன. அவற்றில் பூக்கள் பூத்துக் குலுங் கின. பலா ஒன்று முறிந்து போய்க் கிடந்தது. குடிசையின் ஒருபுறச் சுவர் முற்றாக விழுந் திருந்தது. கூரையும் இறங்கிப் போயிருந்தது. குடிலில் சிறுபிள் ளைகள் இருந்திருக்க வேண் டும். பல புத்தகங்கள் சிதறி அங்குமிங்குமாய்க் கிடந்தன. ஒரு பிள்ளையார் படம் கண் ணாடி நொருங்கி, கிழிந்து போய்க் கிடந்தது.

குடிலைக் கடந்து முன்புறமாக எமது காவலரணிற்குச் சென் றோம். ஒருபுறத்தில் ரைக்ரர் சிலிப்பர் கட்டையுடன் நிற்க, போராளிகள் கட்டைகளை ஒவ் வொன்றாய்ச் சுமந்தும் போயி னர். எனக்கு இன்னமும் அந்த நிமிடங்கள் மறக்க முடியாததாக உள்ளன. காலை உணவை 10.-45 இற்கும் உண்ணாத போரா ளிகள் -மிக இளம் பராயத்தினர் -மிகக் கஸ்டப்பட்டு வேலை செய்தபடி நின்றார்கள். இரண்டு இளம் போராளிகள் (12, 13 வய திருக்கும்) பாரமான சிலிப்பர் கட் டைகளை வேகமாகச் சுமந்து கொண்டேயிருந்தனர். பசிக்க ளையில் அவர்களது கால்கள் தள்ளாடிப் பின்னடைவது நன் றாய்த் தெரிந்தது. கைகள் சிலிப் பர்கட்டையை உயர்த்திப்பிடிக்க ஜீவமரணப் போராட்டத்தை நடத்தின. முகத்தில் பசிக்களை படிந்து கிடந்தாலும் அதனையும் வென்று ஒருவகை மகிழ்ச்சி, உறுதி, எதிர்பார்ப்பு இருந்தது.

இடைநடுவே சிலிப்பர் கட்டை யைப் போட்டுவிட்டு ஆளையாள் பார்த்தார்கள்.

"இது என்னடாப்பா பிணக்கனம்! கையை முறிச்சுப் போடும் போல". ஒருவன் அருகே இருந்த பாலை வேரில் குந்தி, முழங்காலில் ஏற்பட்ட சிராய்ப்புக் காயத்தை அழுத்திவிட்டான். அவன் பெயர் கண்ணன் என பிறகு தெரிந்துகொண்டேன்.

"பிரசாத் தலையை சுத்துது, கொஞ்சம் தண்ணி எடுத்துக் கொண்டா குடிப்பம்".

வயிற்றை நீரால் நிரப்பி சிரிப்பை முகத்தில் ஏற்றிக் கொண்டான். கோல்சரைச் சற்று தாழ்த்திவிட் டான்.

"இன்றைக்கு எப்படியாவது பொயின்ற் வேலை முடிக்க வேணும். இல்லாட்டி கரைச் சல். கெதியா வா, எல்லாத் தையும் இறக்கிவிட்டு ரைக்ரரை அனுப்புவம். பிறகு கெலி வந்தா அடிப்பான் நீரை அருந்திய பாலன் இப்போ கண்ணனுடன் சிலிப்பர் கட்டையைத் தாங்கியவ ண்ணம் என்னைக் கடந்து போனான். சற்று முன் பசித்த எனக்கு, இப்போ சத்தியமாய் பசிக்கவில்லை. பசி இருந்த இடமே தெரியவில்லை. சத்த மின்றி மெதுவாய் ஊர்ந்து, சாக் குத் தொப்பியுடன் மெதுவாக முகாமைக் கண்களால் ஆராயத் தொடங்கினோம். "இது நோட் டட் இல்லாத பொயின்ற் கவன மாய்ப் பாருங்கோ. கண்டானென் றால் பிறகு வேலை செய்யிறது கஸ்ரம்". நீரை எம்மிடம் தந்த படி பாலன்தான் கூறினான். "பிரச்சினையில்லையடாப்பா" என்றார் ஜீவன்.

"உதிலை தெரிகிறதுதான் பொலிஸ்ரேசன். முன்னால நாலைந்து வீடுகள் உதுக்க நிறைய டம்மிப் பொயின்ற் இருக்கு அதிலை சிலிப்பர் கட்டை பொயின்ரை தென்னோ லையால் மறைத்து அடைத்தி ருக்கிறான். அந்த தண்ணி ராங் கிலையும் பொயின்ற் இருக்குது. இந்த மூலைக் கட்டிடத்துக்குள் தான் கூடப்பேர் இருக்கிறான் கள்".

"ரோட்டுக்கு அங்கால தெரியிறது என்ன?"

"அதுதான் கடைசிபொயின்ற். றோட்டுக்கு பக்கமா அடிச்சிருக் கிறான். இரவில் அண்ணை, உந்த கட்டிடத்துக்குள் பாட்டு எல்லாம் பைலாப் போட்டு பாடுறவன்கள். துப்பரவா அலேட் இல்ல" என, காவலரண ணச் சேர்ந்த பாலன் கூறினான். ஒரு சிலிப்பர் கட்டையை இறக்கி வைத்தபின் தூசைத் தட்டியபடி, "றைற் இங்கால இடமெல்லாம் சரி. மிச்சவே லையள் பார்த்தாச் சரி. அங் கால போய் றோட் பொயின்றுக்கு போட்டுப் போவம்" என்றான்.

சிறிய குடிசைகளைக் கடந்து செல்ல பெரிய வீடு ஒன்று காணப்பட்டது. புகையிரதப் பாதையைக் கடந்து வீதியோர மாக இருந்த வீடு. அப்போது தான் கவனித்தேன், அதில் பெண் போராளிகள் இருப்பதை. "ஆர் கேள்சோ இந்தப் பொயின் ரில இருக்கினம்?"

"ஓ, இப்ப ஒரு கிழமைதான் மாற்றியது".

"உதாலபோய் அடிவாங்கப் போறியள்". பெண் போராளி கூற, எட்டிப் பார்த்தோம் வெளியூடாக. மலைப்பொயின்ற் சிறு குன்றின் மேல் பலமாக குந் தியிருந்தது. றோட்டு பொயின் றுக்கு இதால போகலாம். அவ் வழியால் விரைந்தோம். அவ்வீ திக் காவலரண் மிக முக்கிய மான காவலரண். இராணுவம் முன்னேறுவதாயின் வாகனங்க ளுடன் இவ்வழியேதான் வரு வான். விமானம்கூட இதற்குத் தான் அதிகமாகக் குறிபார்க்கும். வீதியின் குறுக்கே மிகப் பலமான எமது காவலரண் அது. எந்தத் தாக்குதலையும் சந்திக்கத் தயா ராக பெண்புலிகள் உறுதியாய் நின்றனர்; ஆர். பி. ஜி., 30 கலி பர்களுடன் நம்பிக்கையுடன் நின் றார்கள்.

அவ்வழியாய் காவலரண்களைப் பார்த்துவிட்டு, மதியம் 1.45 மணி அளவில், பிரதான முகாம் நோக்கி வந்த பாதையால் திரும் பினோம். "இன்றைக்கு பின்னே ரம் சேரமான், சத்தியராஜ் அவையின்ர பொயின்ற்களைப் பார்ப்பன். அந்தப் பக்கத்தால கிட்டத்தான்" என ஜீவன் கூறி னார். காலை உணவை மதிய உணவாய் உண்டபின்னர், சுமார் 3.25 அளவில், கோயில் காவ லரண்களை அவதானித்துவரக் கிளம்பினோம். அகலம் குறைந்த ஒழுங்கையினூடாக நடந்தோம். இருமருங்கும் தோட் டங்களும் வயல்களும் பரவிக்கி டந்தன. வயல்கள் வெறும் தரி சாய் புற்கள் மண்டிக் கிடந்தன. தோட்டத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் துளிர்க்கும் பூசிணிக்கொடிகளும், தானிய வகைகளும், அடிகெட்டுப்போன வாழைகளும், இவற்றை மூடிப் புற்களும் நிரம்பிக் கிடந்தன.

ஏராளமான மாந்தோட்டங்கள் இருந்தன. விதம்விதமாய் மாங் காய்கள் தொங்க, வளவுக்குள் இறங்கி மாங்காயைப் பறித்துச் சப்பியவண்ணம் நடந்தோம். மழைக்காலச் சூரியன் சுரீர் என்று மயிரணுக்களைத் தாக்கி யது.

(தொடரும்...)

www.tamilarangam.net



# ஆப்கானில் அவதிப்படும் அமெரிக்க சி.ஐ.ஏ.

உலகின் உடனடி கவனத்திலிருந்து மெல்ல மெல்ல மறைந்து போகும் பல்வேறு சர்வதேச சிக்கல்களில் இன்று ஆப்கான் சிக்கலும் ஒன்றாகி விட்டது. 1989 ஆம் ஆண்டு இங்கிருந்து ருஸ்யப் படைகள் வெளியேறியதும் ஆப்கானிஸ்தானை தம் வசமாக்கிய போராளிகள் தமக்குள் ஓயாமல் மோதியதும், பின் ஒருவாறாக பல்வேறு அழுத்தங்கள் காரணமாக அங்கொரு அரசு அமைக்கப்பட்டதும் உலகின் கவனம் கலைவதற்கு தக்க காரணங்களாகிவிட்டன. ஆனால் யார் எதனை மறந்தாலும் ஆப்கான் போராளிகள் தமது பகைமையை மறக்க தயாரில்லாத நிலையில் இன்றளவும் மோதல்கள் தொடர்கின்றன. முன்னர் பல்லாண்டு காலமாக இப்பகுதிகளிலே மிக மும்முரமாக செயல்பட்ட அமெரிக்க சி. ஐ. ஏ. உளவு நிறுவனம் இப்போது இம்மோதல்கள் பற்றி கவலைப்படுவதில்லை. ஆனால் இப்போது முன்னரை விட முக்கிய கவலையொன்று சி. ஐ. ஏக்கு ஏற்பட்டுவிட்டது.

ஆப்கானில் முன்னர் இருந்த ருஸ்யச் சார்பு அரசாங்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு வேண்டிய ஆயுத, பண வசதிகள் மட்டுமன்றி பாகிஸ்தான் எல்லைப் புறங்களில் பயிற்சி வசதிகளையும் மிகப் பாரியளவில் ஏற்படுத்திக் கொடுத்தது அமெரிக்க சி. ஐ. ஏ. இப்போது அதன் விளைவுகளையும் சி. - ஐ. ஏ. மட்டுமன்றி முழு அமெரிக்காவுமே சந்திக்க நேரிட்டு விட்டது. அப்போது 'ருஸ்ய கம்யூனிச பூதம்' என உருவகப்படுத்தப்பட்ட சோவியத்திற்கு எதிராக கடும் பிரச்சாரம் செய்வதற்கு இஸ்லாமிய மதத் தலைவர்கள் பயன்படுத்தப்பட்டனர். இவர்கட்கு அமெரிக்காவில் தங்கியிருக்க வேண்டிய சட்டபூர்வ வசதிகள் யாவும் அப்போது சி. ஐ. - ஏயால் செய்து கொடுக்கப்பட்டது. இத்தகைய சூழலைப் பயன்படுத்திய பல ஆப்கான் போராளிகள் பாகிஸ்தான், அல்லது சூடான் வழியாக அமெரிக்காவை இலகுவில் சென்றடைந்தனர்; இது பழைய கதை. அப்போது இவ் வழிமுறை சி. ஐ. ஏக்கு மிக தேவைப்பட்டது, நன்மையும் அளித்தது. ஆனால் இப்போது எல்லாமே தலைகீழாக ஏறுக்கு மாறாக மாறிவிட்டது. சி. ஐ. - ஏக்கு பெருத்த தலைவலியை மட்டுமல்ல அவமானத்தையும் தேடித் தந்துவிட்டது அதன் ஆப்கான் தொடர்பு.

சில காலத்திற்கு முன் பெப்ரவரி 26 ஆம் திகதி நியூயோர்க் சர்வதேச வர்த்தக மையத்திலேற்பட்ட பாரிய குண்டு வெடிப்பின் பின்னணி. இன்று சி. ஐ. ஏயை முற்றாக அம்பலப்படுத்திவிட்டது. குண்டு வெடிப்பிற்கு காரணமானவர்கள் என குற்றம் சாட்டப்பட்டு இப்போது வழக்குத் தொடரப்பட்டுள்ள பலரும் இஸ்லாமிய அடிப்படை வாதிகள் என்பதும் இவர்களில் பலர் முன்னைய ஆப்கான் போராளிகள் என்பதும், இவர்கள் அமெரிக்க மண்ணிலே முன்னர் சி. ஐ. ஏயின் உதவியோடு ஊடுருவினர் என்பதும் வெளிப்படையாகி விட்டன. அது மட்டுமன்றி இத்தகையோரின் சந்திப்பு மையமாக நியூயோர்க் நகரத்தில் இருந்த பள்ளிவாசலின் தலைமைக் குருவான பார்வையற்ற சேக் ஓமர் அப்துல் ரகுமான், எகிப்திய அரசுக்கு எதிராக தீவிரமாகப் போராடி வரும் இஸ்லாமியக் குழுவின் ஆன்மீகத் தலைவர் என்பதும் 1981 ஆம் ஆண்டு எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத் கொலையோடு தொடர்பு படுத்தப்பட்டவர் என்பது இப்போது வெளியாகிய தகவல்கள் ஆகும்.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தொழுகையின் போதும் எகிப்திய ஜனாதிபதி முபாரக்கிற்கு மரணம் நேர வேண்டும் என தொழுபவர் இவர். இவரின் போக்கால் கடும் சீற்றம் கொண்ட முபாரக் இவரை 'சி. ஐ. ஏ. ஏஜண்ட்' எனக் கூறியதும் பின் அமெரிக்க அழுத்தத்தால் அவ்வாறு தான் கூறவில்லையென மறுத்ததும் இங்கே குறிப்பிடப்பட வேண்டியவை. ரகுமான் இப்போது சதி செய்தார் எனக் கைதாகி அமெரிக்கச் சிறையில் இருக்கிறார். இவருக்கு வேண்டிய வசதிகளை செய்து, அமெரிக்காவிற்குள் வருவதற்கு அனுமதித்த, அமெரிக்க உயர் அதிகாரிகள் யாவரும் சி. ஐ. ஏ. ஊழியர்கள் என்பது இப்போது அம்பலமாகி விட்டது.



விமான எதிர்ப்பு ஏவுகணையுடன் குறிபார்த்து நிற்கும் ஆப்கான் போராளிகள்

எனவே 'வினை விதைத்தவன் வினையை அறுக்க' வேண்டிய நிலை. அமெரிக்க மண்ணிலே மேலும் பல குண்டு வெடிப்புகள், ஆட்கடத்தல்கள், கொலை என பல சதித் திட்டங்களைத் தீட்ட ரகுமான் முயன்றார் என அமெரிக்க அரசு இப்போது கூற நேர்ந்து விட்டது.

இது மட்டுமன்றி இன்னொரு பாரிய சிக்கலுக்கும் சி. ஐ. ஏ. முகம் கொடுக்க நேரிட்டு விட்டது. முன்னர் ஒரு கட்டத்தில் ருஸ்ய வான்படைக் குண்டு வீச்சுக்களால் ஆப்கான்போராளிகள் பாதிக்கப்பட்ட போது நிலைமை மோசமடையாமல் தடுப்பதற்காக சி. ஐ. ஏ. ஒரு வேலை செய்தது. அது 1000 இற்கும் மேற்பட்ட (Stinger) ஸ்ரிங்கர் விமான எதிர்ப்பு ஏவுகணைகளை ஆப்கான் குழுக்கட்கு விநியோகித்தது. மிக துல்லியமாக இலக்கினை தாக்கக் கூடிய, மிக இலகுவாக குறைந்தளவு பயிற்சியோடு பயன்படுத்தக் கூடிய இவ் ஏவுகணைகள் அப்போது ருஸ்யாவுக்கு பலத்த பின்னடைவுகளை ஏற்படுத்தின. 1989 ஆம் ஆண்டு வரை ஏறத்தாள 187 ருஸ்ய வானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறப்படுகிறது -இப்போது எழுந்துள்ள புதிய சிக்கல்கள் என்னவென்றால் ஏறத்தாழ அரைவாசி ஸ்ரிங்கர் ஏவுகணைகள் போராளிகள் வசம் தற்போது இருப்பதுதான். இவ்வாறாக 450 ஏவுகணைகள் இருக்கலாம் என மதிப்பிடப்படுகின்றது. இது அமெரிக்காவுக்கு மட்டுமன்றி தென்னாசியப் பகுதியில் அடக்குமுறை அரசுகட்கும் பெருத்த தலைவலியாகி விட்டது. இந்தியா, பர்மா, சிறீலங்கா போன்றவை தமக்கு எதிராக போராடும் போராளி அமைப்புகட்கு இவ் ஏவுகணைகள் கிடைக்கக் கூடிய அபாயத்தை எண்ணி தவிப்பதாகத் தெரிகிறது என 'ஏசியாவீக்' கூறுகிறது. அது மட்டுமன்றி உலக விமானப் போக்குவரத்து நிறுவனங்களும் இவை பற்றிப் பெரிதும் கவலைப்படுகின்றன. ஏனைய இஸ்லாமிய மத அடிப்படைவாதிகட்கு இவை கிடைக்கக் கூடாதென்பது சி. - ஐ. ஏயின் இன்றைய சிக்கலாகும். முன்னாள் பாகிஸ்தான் உளவு நிறுவனத் தலைவரோ "இந்தியாவின் தாக்குதல் விமானங்கள் யாவற்றையும் இவ் ஏவுகணைகள் கொண்டு முற்றாக அழித்துவிட முடியம்" என்கிறார்.

எனவே இப்போது இவ் ஏவுகணைகளை எப்படியும் திருப்பி பெற வேண்டும். கூடிய விலையை கொடுத்தாவது இவற்றை மறுபடியும் ஆப்கான் குழுக்களிடமிருந்து கொள்வனவு செய்ய அமெரிக்க அரசு முடிவு செய்துவிட்டது. எனவே இப்போது பாகிஸ்தான் எல்லையில் உள்ள ஆயுத வியாபாரச் சந்தைக்குள் புதிய வாடிக்கையாளராக சி. ஐ. ஏ. நுழைந்துள்ளது. அதேசமயம் சி. ஐ. ஏ. யே இதன் முன்னாள் ஆயுத விநியோகஸ்தர் என்பது நகைப்புக்கு இடமாகிற தகவல். இப்போது சந்தையில் 'ஸ்ரிங்கர் ஏவுகணையின் விலைகள் ஏறி விட்டன. இவை மட்டுமன்றி முன்னர் வழங்கப்பட்ட மிலான் ரக தாங்கி எதிர்ப்பு ஏகணைகளை திரும்ப வாங்க சி. ஐ. ஏ. முயற்சிக்கின்றது. போராளிக் குழுக்களிலே பெரியதும் குர்புதின் கெக்மாட்டியார் தலைமை தாங்கும் கிஸ்பி இஸ்லாம் குழுவே கூடுதலாக ஸ்ரிங்கரை வைத்திருக்கிறது. ஆனால் ஒன்றைத்தன்னும் விற்க முடியாதென்பது இவர்கள் நிலைப்பாடு.

இவ்வாறாக 'கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய' கதையாக ஆப்கானோடு தொடர்புபட்டவர்கள் திகைக்க நேரிட்டுள்ளது. வல்லாண்மையுள்ள நாடுகள் தமது சுயநலத்திற்கு கருவிகளாக பயன்படுத்த விரும்புபவர்கள் - இறுதியில் அவர்கட்கே பலத்த அடியை கொடுப்போராக ஆபத்தை விளைவிப்போராக மாறுவது இன்று வழமையான வரலாற்று நியதியாகிவிட்டது. ■

**நன்றி: ஈழநாதம்**

---

## ஆத்மாக்கள்.....

அசிரத்தையாக முகத்தைத் திருப்பினாள்.

"..."

"கொண்ணன்ரை நிலைமைதான் அப்பிடிப் போச்சுது. நீ எண்டாலும் எங்களுக்கு..."

"..."

"கொம்மாவும் நோயாளியாப் போனா. அவவுக்கு ஆறுதலாய் நீ..."

"அப்பா, இப்ப ஆருக்கு ஆர் ஆறுதல் சொல்லுறது. அண்ணாவை அவங்கள் கொண்டு போனதாலை தான் அம்மா இப்படி... அண்ணாவின்ரை கவலை எனக்கில்லையோ?"

"..."

"இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவு காணவேணும். இப்பதான் எனக்கும் உண்மைகள் தெரியுது".

"என்ன...?"

"இந்த அவலங்களெல்லாம் எங்களுக்கு மட்டுமே அப்பா...? ஆமி வந்து போனதாலை ஒவ்வொரு குடும்பத்திலையும் தானை இழப்பு...! இண்டைக்கு இந்த மண்ணிலை வாழுறவை எதையாவது பறிகொடுத்து விட்டுத்தான் வாழுகினம். குறைஞ்சது நிம்மதியைத் தன்னும் இழக்காமலில்லை..."

அவளது பதில் மின்வெட்டாக வந்து பல உண்மைகளை எனக்கு உணர்த்துகிறது.

"அப்ப... இதுகளுக்கெல்லாம் முடிவு என்ன...? நீ உன்ரை பிடிவாதத்தை விடமாட்டாய்... அப்படித்தானை...?"

"..."

அவள் போக்கில் உடன்படாத தந்தையாய் மீண்டும் கேட்கிறேன்.

"நாங்கள் எக்கேடு கெட்டாலும் உனக்குக் கவலையில்லை யெண்டு சொல்லு..."

"அண்ணாவை நாங்கள் பறிகொடுத்ததுக்கு நீங்களும் தான் காரணம்".

அவள் குரல் உணர்ச்சி வேகத்தில் விசும்பலாக வெளி வந்தது. நான் அதிர்ந்து போகிறேன்.

"அவர் இயக்கத்துக்குப் போக ஒரு முறைக்கு இரண்டு முறையெல்லே நீங்கள் போய்க் கூட்டி வந்தனீங்கள்... அப்பிடிப் போயிருந்தால்... வீணாக அவங்கட கையிலை அகப்பட வேண்டி வந்திராது...!"

அவளது வார்த்தைகள் வன்மமாக வெளிப்பட்டன.

நீண்ட மௌனத்தின் பின் எதுவும் பேச இயலாதவனாய் எனது படுக்கைக்குச் செல்கிறேன்.

பக்கத்தில் மனைவியும் படுக்கையைவிட்டு எழுந்திருந்தபடி தனது வழமையான பல்லவியை ஆரம்பிக்கிறாள்.

மகன் இந்நேரம் என்ன செய்து கொண்டிருப்பான் என்ற தவிப்பு அவளுக்கு நித்தியமாய்ப் போய்விட்டது.

"இப்பவெல்லாம் எவ்வளவு குளிர்... என்ரை பிள்ளைக்கு போர்வை இருக்குதோ...? நித்திரை வருகிதோ...?" என்ற விசாரணையில் தொடங்கி...

"அவனுக்கு மாத்திக்கட்ட உடுப்புகள் இருக்குதோ...?" என்றெல்லாம் என்னிடம் ஆதங்கப்பட்டுக் கொள்கிறாள்.

முன்பு அவன் உறக்கத்திலிருந்த வேளைகளில் எத்தனை தடவைகள் எழுந்து போய் போர்வையைச் சரி செய்திருக்கிறாள்.

இப்போதெல்லாம் மகனை அடிக்கடி கனவில் காண்கிறதாய் கூறிக்கொள்கிறாள். இடையே இரத்தமும், ரணமும்... என்று பயங்கரக் கனவுகண்டு ஓவென்று கதறியழுவதும் வழக்கமாகி விட்டது.

இன்றும் அப்படித்தான் ஏதோ நிகழ்ந்திருக்க வேண்டும். எழுந்திருந்து...

"என்ரை பிள்ளை அம்மாவெண்டு கதறக் கதற... அவங்கள் அடிச்ச அடி... என்ரை கண்ணுக்கு முன்னாலையே அந்த அடி அடிச்சவங்கள்... இப்ப எப்பிடி...?"

- என்று அவள், தரையில் தலையை மோதியபடி தேம்பித் தேம்பி அழுகிறாள்.

அறையில் படுத்திருந்த காவேரிக்கும் மனம் பொறுக்கவில்லை. அண்ணன் மேலுள்ள பிரியத்தால் தாய்படும் அவஸ்தை அவள் நெஞ்சத்தையும் உலுக்கியிருக்க வேண்டும். தாயின் அழுகையைக் கேட்டு வெளியே வந்தாள். அவள் கண்களும் பனித்திருந்தன.

அவளை வருத்தும் ஈடுசெய்ய முடியாத பிரிவுத்துயர் என் நெஞ்சையும் அலைக்கழிக்கிறது. வேதனையைப் போக்க என்ன செய்வதென்று தெரியாமல் அங்கலாய்ப்புறுகிறேன். மகனை எப்படியும் அவர்களிடமிருந்து மீட்க வேண்டுமென்ற உறுதி என்னுள் இறுகிக் கொண்டிருந்தது.

விளக்கின் மங்கல் ஒளியில் அவள் முகம் வாடிக் கிடப்பது தெரிகின்றது. அவளது விசும்பல் ஒலியும் படிப்படியாக அமைதி கண்டது.

அவள் தூங்கிப் போய்விடவே, காலையில் எழுந்ததும் அவளுக்கு மீண்டும் நம்பிக்கையளிப்பதான தேறுதலை அளிக்க வேண்டும். அது எவ்வாறென மனம் பலவிதமாய் அலைபாய்ந்த வண்ணம் இருந்தது.

அதிகாலையில் எங்கிருந்தோ வந்து விழுந்த 'செல்'லின் பயங்கர ஒலியினால் அதிர்ந்து எழுகின்றேன். அவளும் திடீரென விழித்துக்கொண்டு...

"ஐயோ...! என்ரை பிள்ளையைக் கொல்லுகிறாங்கள்... கொல்லுகிறாங்கள்... என்ரை பிள்ளையை... என்ரை பிள்ளையை..... " எனப் பெருங் குரலெடுத்து அலறுகிறாள்.

பதட்டப்பட்டவளாய், கலைந்த சேலையை அள்ளிப் பிடித்த வண்ணம் வெளியே ஓடுவதற்கு முற்படுகின்றாள்.

மகள் படுக்கையைவிட்டு எழுந்து, பதறித் துடித்தபடி வந்து தாயை அணைக்கின்றாள். அவள் எழுப்பிய ஓலம் என்னையும் திடுக்கிட வைக்கின்றது. அப்போது அவளது முகத்தை உற்றுப் பார்க்கின்றேன்.

முகத்தில் ஆவேசம் கிளர்ந்து கொண்டிருந்தது. விழிகள் இரண்டும் பீதியால் வெளியே பிதுங்கிக் கிடக்கின்றன. வார்த்தைகள் வழமைக்கு மாறாக சுயத்தை இழந்து வெளிப்படுகின்றன.

அவளில் பிள்ளையைத் தேடும் உறுதிப்பாடு தெரிகின்றது. ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆயுதமுனையில் கையொப்பம்! இப்படித்தான் தேர்தல் நடக்கிறது

வவுனியா, மட்டக்களப்பு, திருமலை பகுதிகளில் சிறீலங்கா அரசாங்கம் நடாத்தவிருக்கும் உள்ளூராட்சி தேர்தல் என்ற கேலிக்கூத்திலும் சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவ வெறித்தன்மை அம்பலமாகி வருகின்றது.

மட்டக்களப்பு பிரதேசத்தில் சிறீலங்கா அரசாங்கத்துக்கு சொந்தமான வாகனங்களில் வந்திறங்குபவர்கள் அங்குள்ள தமிழர்களுக்கிடையே செல்வாக்குள்ளவர்கள் எனத் தாம் கருதுபவர்களை, ஆயுத முனையில் வாகனங்களில் ஏற்றிச்சென்று வேட்புமனுவில் கையொப்பம் இடவைத்துள்ளதாக அப்பகுதிக்கான சிறீலங்கா பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி விஜயதுங்காவுக்கு புகார் செய்துள்ளனர்.

இதற்கு பதிலளித்த சிறீலங்கா ஜனாதிபதியின் செயலாளர் கே. எச். ஜே. விஜயதாசா "புலிகளை திருப்திப்படுத்துவதற்காக இப்படியான கற்பனைக் கதைகளை இவர்கள் கூறுகிறார்கள்" எனக் கூறி உண்மையை மறைக்க முயன்றுள்ளார்.

சிறீலங்கா அரசாங்கம், தான் ஆக்கிரமித்துள்ள தமிழீழப் பிரதேசத்தில் உள்ளூராட்சி தேர்தல் என்ற பெயரில் என்ன திருவிளையாடல்களை செய்கின்றது என்பதற்கு, அவர்களது அடிவருடிகளே சான்று பகருவதை சிறீலங்கா அரசாங்கத்தால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

### போர்த் தளபதிகளின் தேர்தல் பணி

முப்படைகளின் குவிப்பிடமாகக் காணப்படும் தேர்தல் பிரதேசங்களில் நாற்பதுக்கும் அதிகமான பொலிஸ் சுப்ரீன்டன்கள் முற்றுகையிட்டுள்ளனர். சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமில்டன் வணசிங்கா, சிறீலங்கா பொலிஸ் மா அதிபர் பிராங் டி சில்வா ஆகியோர் நேரில் சென்று யுத்த முனையை, இயக்குவது போல் தேர்தல் ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். இராணுவ முகாம்களுக்குள்ளேயே வாக்குச் சாவடிகளை அமைத்துவிட்டு, அங்கு வந்து வாக்களித்துச் செல்லும்படி மக்களைப் பணித்துள்ளனர்.

இவ்வாறாக ஆயுத பலாத்காரம், இராணுவ முற்றுகை என்பவற்றுக்கு மத்தியில் இப்பிரதேசத்தில் உள்ள சிங்கள வாக்குகளையும் நேர்மையற்ற வாக்குகளையும் கொண்டு தேர்தல் முடிவை அறிவிக்க, சிறீலங்கா அரசாங்கம் இயலுமானவரை சகல ஏற்பாடுகளையும் செய்து கொண்டு வருகின்றது.

### மேலும் ஒரு பேரினவாதக் கட்சி

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை -இந்திய ஒப்பந்தத்திற்கு கைச்சாத்திட சிறீலங்காவிற்கு வந்த போது, துப்பாக்கியால் அவரை தாக்கிய சிறீலங்காக் கடற்படையினன் விஜயமுனி, 'மாத்ருபூமி' என்று ஒரு அரசியல் கட்சியை உருவாக்கி தேர்தலில் போட்டியிடுகிறார். சிங்கள பௌத்த பேரினவாதம் விரிவுபடுவதற்கு இப்புதிய கட்சியின் தோற்றம் சான்றாக உள்ளது. ■



கேணல் கிட்டு அவர்களதும் சக ஒன்பது போராளிகளதும் ஓராண்டு நினைவு நாளையொட்டி இத்தாலி தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்ட அடையாள உண்ணாவிரதத்தின் போது, மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட கேணல் கிட்டு அவர்களது திருவுருவப் படங்கள்.



## 1993 போராண்டு......

திருப்பியது. இது விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் சரி உலகில் வேறெந்த விடுதலைப் போராட்டத்திலும் சரி இடம்பெற்றிராத ஒப்பற்ற வரலாற்றுச் சமர். புலிகள் நடத்திய சமர்களுக்கெல்லாம் தாய்ச் சமராக அமைந்தது. இந்தச் சமர் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இதுவரை பெற்றுத்தராத பல வெற்றிகளை எமக்கு ஈட்டித் தந்தது. ஆரம்பத்தில் அதாவது 15 வருடங்களுக்கு முன்னர் ஒரு சில துப்பாக்கிகளைக் கொண்டு போராடிய கரந்தடி அமைப்பை இன்று நவீன படைப் பிரிவுகளாக கவசப் படைப் பிரிவுகளையும் பீரங்கிப் படைப் பிரிவுகளையும் கடற்படைப் பிரிவுகளையும் கொண்டதாக மாற்றியமைத்த சமர் இது.

ஆரம்பத்தில் ஒரு முகாமை தாக்கி அழித்த புலிகள் இன்று ஐந்து இராணுவ முகாம்களையும் ஒரு கடற்படைத் தளத்தையும் கொண்ட கூட்டுத்தளத்தை அழிக்கும் வல்லமையுள்ளவர்களாக மாறியிருக்கிறார்கள். இச்சமர் சிறீலங்கா படையக் கட்டமைப்பில் நேரடி மற்றும் மறைமுக எதிர்வுகளையும் தாக்கங்களையும் ஏற்படுத்தியுள்ளது. சுமார் ஆயிரம் படையினரை இழந்தும் 650 படையினர் காயப்பட்டும் உள்ளனர். இது இவர்களுக்கு நேரடித் தாக்கமாக அமைந்தது. மறைமுகத் தாக்கம் இராணுவத் தளபதியை பதவி விலகச் செய்துள்ளதோடு மேலும் பல உயரதிகாரிகளை விசாரணைக்குட்படுத்தும் நிலையாக அமைந்துள்ளது.

இச்சமரின் பின்னர் தமிழீழத்திற்கு எதிர்ப்புத் தெரிவுக்கும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், "புலிகள் தமிழீழத்தைப் பெற தகுதி உடையவர்கள்" என்று கூறியுள்ளார். இவர் மட்டுமன்றிப் பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா "பிரபாகரன் தனது படையணியுடன் நாளை கொழும்பு வந்தாலும் ஆச்சரியமல்ல" என்று தமது படைகளின் ஆற்றாமையையும் புலிகளின் ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இப்போராண்டின் முடிவில் கடற்புலிகள் விடுதலைப் போரின் முக்கிய ஒரு சக்தியாக வளர்ச்சி பெற்றிருந்தனர். வடதமிழீழக் கரையோரப் பகுதிகளில் சிறீலங்காக் கடற்படையின் சுதந்திரமான நடமாட்டம் கட்டுப்படுத்தப்படும் நிலை ஒன்றை எய்தியதோடு, வடக்கிலுள்ள கடற்படைத்தளங்களின் பாதுகாப்புக் குறித்தும் பெரும் கேள்வியைக் கடற்புலிகள் ஏற்படுத்தினர். இவற்றில் கடற்கரும்புலிகளின் சாதனை மகத்தானது. இப்போராண்டில் நான்கு கரும்புலித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. ஆறு கரும்புலிகள் இதில் பங்கு கொண்டனர். இவற்றின் ஒட்டுமொத்தச் சாதனையாக யாழ். கடல் நீரேரி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. இம்மகத்தான சாதனை தமிழீழ விடுதலைப் போரில் புதிய பரிணாமம் ஒன்றையே தோற்றுவித்தது.

இவ்வாண்டுப் போர்முனைகளில் விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியும் மகத்தான சாதனைகளைப் புரிந்திருந்தது, இவ்வாண்டின் பெரும் சமர்கள் என நினைவு கூரப்படும் மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பு, புலோப்பளைச் சமர், பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பு ஆகிய முக்கிய சமர்கள் யாவற்றிலும் மகளிர் படையணி திறம்படச் செயற்பட்டது. கனரக ஆயுதங்கள் சகிதம் போரிடும் வலிமையைப் பெற்றுவிட்ட இம்மகளிர் படையணியினர் பூநகரி கூட்டுப்படைத்தளம் தகர்ப்பில் தரையிலும், கடலிலும் போரிட்டு உலகிற்கு தமது வலிமையை வெளிக்காட்டியிருந்தனர்.

இவ்வாறாக முடிவுற்ற போராண்டு தமிழீழத்தை ஒரு புதிய நிலைக்கு எடுத்துச் சென்றுள்ளது. மன்னாரின் பெரும் பகுதிகள் இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் சுமார் 1550 படையினரை சிறீலங்கா இராணுவம் இழந்தது மட்டுமன்றி 2000 இற்கு மேற்பட்டோர் காயப்பட்டுமுள்ளனர். புலிகளின் படையணிகளோ டாங்கிகள், கனரக கவசவாகனங்கள், நீண்டதூர பீரங்கிகள், அதிவேகப் படகுகள் கொண்ட வலிமையுள்ள படைப் பிரிவுகளாக வளர்ச்சி அடைந்துள்ளன.

பல வெற்றிகளைப் பெற்றுத் தந்த 1993 போராண்டு விடைபெற்றுவிட்டது. 1994 போராண்டில் புதிய வெற்றிகளைப் பெற்று தமிழீழத்தை நோக்கி நகர்வோமாக. ■

**நன்றி: ஈழநாதம்**

## யுத்தத்திற்கான ....

கும். இதன் வெளிப்பாடே சிறீலங்காப் பிரதமரினதும், ஜனாதிபதியினதும் சமீபகால நடவடிக்கைகள் ஆகும்.

### குறுகிய காலத் தீர்வு!

"அரசியல்வாதிகளுடன் கலந்தாலோசித்த பின்னரே நீண்ட கால இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள முடியும். நீண்ட கால இராணுவ நடவடிக்கைக்கு கூடுதலான ஆயுதங்கள், வெடிமருந்துகள், வாகனங்கள் என்பன தேவை. இராணுவத்தினரின் பயிற்சிக்காலத்தை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். அதற்கான புதிய திட்டங்கள் பூநகரியில் எமக்குக் கிடைத்த தோல்வியை அடுத்து ஆராயப்பட்டு வருகின்றது. துரித தீர்வையே மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். குறுகிய கால இராணுவ நடவடிக்கையை நாம் உடனடியாக மேற்கொள்ளலாம்". என சிறீலங்கா இராணுவத் தளபதி ஜெரி டி சில்வா அறிவித்துள்ளார். இவர் கடந்த வாரத்தில் யுத்த முனைகளுக்குச் சென்று, யுத்த முனைகளில் பொறுப்பாக உள்ள இராணுவ அதிகாரிகளை சந்தித்து பேசிய பின்னரே, குறுகிய கால யுத்தம் என்ற பெயரில் பாரிய தாக்குதல் ஒன்றை உடன் நடாத்தத் திட்டமிட்டு வருவதாகத் தெரிகின்றது. ■

## சுதந்திரத்தைத் ......

1990 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தின் இருபத்திரண்டாம் நாள். மாங்குளத்திலுள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் தங்ககம் எம்மவர்களால் சுற்றிவளைப்புக்கு உள்ளாக்கப்பட்டது. அந்தச் சுற்றிவளைப்பில் சுதாவும் பங்கெடுத்தாள். மாங்குளம் நோக்கிய பயணத்தின்போது, சுதா தனது அண்ணன் திவாகரும் வந்துகொண்டிருந்ததை வழியில்தான் அறிந்தாள். சுதா தாக்குதற் குழுவில் இருந்தாள். அண்ணன் திவாகர் மருத்துவக் குழுவில் இருந்தார். மாங்குளத்துக்கு எல்லோரும் வந்து சேர்ந்தபின்னர், இராணுவத்தினரின் தங்ககத்தை முற்றுகையிடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தபோது, அண்ணன் திவாகர் தன் தங்கையை ஒரு முறை கண்டார்.

'சண்டை முடிந்தபின்னர் கதைக்கலாந்தானே' என்று எண்ணிக் கொண்டு தன் வேலைகளைத் தொடர்ந்தார்.

இராணுவத் தங்ககம் எம்மவர்களால் முற்றாகத் தகர்க்கப்பட்டுவிட்டது. மோதலின்போது காயமடைந்த போராளிகள், எமது மருத்துவக் குழுவினரால் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டு இருந்தனர். வீரச்சாவடைந்த போராளிகளின் உடல்கள் வேறொரு புறத்தில் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. வீரச்சாவடைந்தவர்கள் ஒவ்வொருவரையும் யார் என்று அறிவதற்காக அவர்கள் முகங்களை திவாகர் பார்த்துக் கொண்டு வந்தார். ஒரு உடலுக் கருகில் திவாகரின் கால்கள் அசையாது தரித்து நின்றுவிட்டன. அது ...... சுதாவின் உடல்..... கண்கள் இருண்டு அந்த இடமே ஒரு முறை சுற்றுவதுபோல் இருந்தது திவாகருக்கு. ஆனாலும் சமாளித்துக் கொண்டார்.

தங்கையின் மரணத்தால் அண்ணனின் மனம் தளரவில்லை. அவர் ஒரு போராளியாக...... காயமடைந்து வருகிற எல்லாப் போராளிகளுக்குமே அண்ணாவாக..... , எமது இயக்கத்தின் மருத்துவப் பிரிவில் தனது கடமையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறார்.

சுதாவின் இழப்பு என்னையும் பலமாகப் பாதித்தது. ஆனால் ஆறாத காயத்தை ஏற்படுத்தவில்லை மாறாக, தளராத துணிவோடு போராடுகின்ற உத்வேகத்தினை என்னுள், சக தோழிகளுக்குள் ஏற்படுத்திவிட்டது. ■

## வடக்கையும் ......

### சிறீலங்கா ஜனாதிபதியும் உறுதி

சிறீலங்கா அரசாங்கத்தினர் ஒற்றையாட்சி அரசியலமைப்பை தமிழர்கள் மேல் திணிப்பதையே தீர்வாகக் கூறுகிறார்கள். அதற்குத் துணைபோகும்படி விடுக்கும் அழைப்பையே பேச்சுவார்த்தைக்கான அழைப்பு எனவும் வர்ணிக்கின்றார்கள்.

கொக்களை ஏற்றுமதி வலயத்தில்பேசிய சிறீலங்கா ஜனாதிபதி, "இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டிற்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல்களை உறுதியான ஒரு அரசாங்கத்தின் மூலமே தடுத்து நிறுத்த முடியும். வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் உறுதி பூண்டுள்ளது. உட்பூசல்களும் உறுதியற்ற தன்மையும் கொண்ட அரசாங்கமொன்றால் எதிர்ப்புக்களை ஒருபோதும் சமாளிக்க முடியாது" எனக் கூறியுள்ளார். இப் பேச்சில் பிரதேச ஒருமைப்பாட்டை அதாவது ஒற்றையாட்சியை, தான் பேணப் போவதையும் அதற்கேற்ற வகையில் வடக்கு - கிழக்கில் இராணுவ ஒடுக்குமுறைகளைச் செய்யப்போவதையும் இதற்கு உறுதியான அரசியல் பலம் தேவையென்பதால், தமக்கு வாக்களிக்கும் படியும் அவர் கேட்டுள்ளார். எனவே சிறீலங்காப் பிரதமரும், ஜனாதிபதியும் தமது திணிப்பை தீர்வு எனக்காட்ட முயல்வது தெட்டத் தெளிவாகின்றது.

### கரிகாலன் கண்டனம்

"தேர்தல் வேளையில் மக்களின் வாக்கு ஆதரவை தேடும் நோக்கில் சிறீலங்காப் பிரதமர் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துள்ளார். சிறீலங்கா அரசாங்கத்தின் தந்திரோபாயங்களை புலிகள் நன்கு அறிவர். எனவே சிறீலங்கா அரசாங்கத்தால் எம்மை ஏமாற்ற முடியாது. பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்பதில் உண்மையில் அரசாங்கத்திற்கு அக்கறை இருக்குமானால் தமது நிலைப்பாட்டை இதய சுத்தியுடன் நேர்மையான வழியில் எமக்கு அறிவிக்க வேண்டும். இந்த அழைப்பு வெறும் தேர்தல் பிரச்சாரத் தந்திரமாகும்" என விடுதலைப்புலிகளின் துணை அரசியல் பொறுப்பாளர் திரு. கரிகாலன் யாழ்ப்பாணத்தில் கண்டனம் தெரிவித்துள்ளார். ■

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# தீர்வுக்கு வழி என்ன ?

கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை பெளத்த சிங்கள இனவாதம் மேற்கொண்டுள்ளது.

மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள இத்தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி, முஸ்லீம் காங்கிரஸ் கட்சி போன்ற கட்சிகளும் சுயேச்சை அணியாகச் சில தமிழ்க் குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிடுவதற்கு, சில தமிழர்கள் தமது விருப்பத்திற்கு மாறாக, துப்பாக்கி முனையில் வேட்பாளர் பத்திரத்தில் பலவந்தமாக கையொப்பமிடப் பணிக்கப்பட்டனர் என்ற செய்தியும் வெளியாகியுள்ளது.

எப்பாடுபட்டாலும் இவ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடாத்தி விடுவதென சிங்கள பெளத்த இனவாதம் துடியாய் துடிக்கின்றது. இத் தேர்தல்களை நடாத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை பின்னடைவுக்கு உள்ளாக்கலாம் என அது எண்ணுகிறது.

ஆனால், வரலாற்றினைப் பார்க்க மறந்த வரலாற்றுக் குருடர்களாகவே, இத் தேர்தல் மூலம் போராட்டத்தினைப் பின்னடைவுக்குள்ளாக்கலாம் என்று எண்ணுபவர்களை நோக்க வேண்டியுள்ளது.

1983 ஆம் ஆண்டில் கறுப்பு யூலை இனஅழிப்பின் பின் போராட்டம் வீறுகொண்டு எழுந்தபின்னர், இலங்கை -இந்திய ஒப்பந்தத்தின் ஊடாகவே தமிழீழ மண்ணில் போலித் தேர்தல் நாடகம் முதலில் நடைபெற்றது. இலங்கை -இந்திய ஒப்பந்தத்திற்கு அமைவாக உருவாக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல்களில் இந்திய விருப்பப்படி ஆட்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அக்காலப் பகுதியில் ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியனவும் நடந்தன. வடக்கு -கிழக்கு இணைந்த (தற்காலிகமாக) மாகாண சபைக்கு முதல்வர் உட்பட மந்திரிகள் தெரிவுசெய்யப்பட்டனர். வட -கிழக்கிலிருந்து பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். 'இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அற்புதமான தீர்வு காணப்பட்டுவிட்டது; கொழும்பு -யாழ்ப்பாணம் யாழ்தேவி ஓடுது; இனியென்ன இனப்பிரச்சினை?' என்று குதூகலப்பட்டோரும் இருந்தனர். இவை அனைத்தும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட இந்தியப் படையினர் தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து நிற்கும் போது நடைபெற்றன.

இதோடு வரலாறு நின்று விட்டதா? வரலாற்றுச் சக்கரம் நகரவே செய்தது. அதுவும் மிக வேகமாக நகர்ந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கெதிரான தடைகளைத் தாண்டி வேகமாய் நகர்ந்தது; நகருகின்றது; இனியும் நகரும்.

விடுதலைப் போராட்டத்தினைத் தலைமை தாங்கி முன்னெடுத்துச் செல்கின்ற அமைப்பு அரைகுறைத் தீர்வுகளையோ அல்லது நோக்கங்களையோ ஏற்றுக் கொள்ளாதவரை, இத்தகைய தேர்தல்கள் போராட்டத்தின் இலக்கினை திசை திருப்பிவிடப் போவதில்லை. போராட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கு, தேவையேற்படின் ஒரு தந்திரோபாயமாகத் தேர்தல்களை அணுகுவது என்பது வேறு; இவற்றை ஏற்றுக் கொள்வது என்பது வேறு. அதிஸ்டவசமாக சிங்கள பெளத்த பேரினவாதத்தினதும், இந்திய ஆளும் வர்க்கத்தினதும் சூழ்ச்சிக்கும் ஆசை காட்டலுக்கும் விலைபோகாத தலைமை எமக்குக் கிடைத்துள்ளது. இந்த வகையில், இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எமது போராட்ட இலக்கினைப் பாதிக்கப் போவதில்லை.

இருந்தும், ஏன் நாம் இந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் மீது கவனம் செலுத்த வேண்டியுள்ளது? எனும் கேள்வியும் எழத்தான் செய்யும். இந்தத் தேர்தல்களை நடாத்துவதன் மூலம் கிழக்கினையும், வவுனியாவினையும் பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதான ஒரு மாயையினை உருவாக்க அரசு விரும்புகிறது. இந்த மாயையும் 94 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆதரவினைத் தக்கவைத்துக் கொள்ள உதவும் என்ற எண்ணமும் ஆட்சியாளருக்கு உண்டு. 94 இலும் 95 இலும் நடைபெறவுள்ள ஜனாதிபதி, பாராளுமன்றத் தேர்தல்களையும், வடக்கு -கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வசன வாக்கெடுப்பினையும் நடாத்துவதற்கான ஒத்திகையாகவும் இத்தேர்தல் கருதப்படுகிறது. வட -கிழக்கின் சில பகுதிகளில் 'ஜனநாயக நடைமுறையினை' அமுல்படுத்தக்கூடிய தகைமை தனக்கு உண்டு என சர்வதேச நாடுகளுக்கு வெளிப்படுத்தும் எண்ணமும் அரசுக்கு உண்டு. இதனால் எதுவித பிரச்சினைகளும் அற்ற நிலையில் இத்தேர்தல்களை நடாத்திவிட சிறீலங்கா அரசு விரும்புகிறது.

இதனால், இத்தேர்தல் நடைமுறை நெருக்கடிக்குள்ளாவதனைத் தடுப்பதற்கு அரசு பகீரதப்பிரயத்தனம் செய்கிறது. இதனையும் மீறி இத்தேர்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் இடம்பெறின் அது அரசுக்கு மிகுந்த நெருக்கடியினைக் கொடுக்கும். இந்த உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு எதிரான நடவடிக்கைகள் ஒரு வகையில் சிங்கள பெளத்த இனவாதத்தின் மீதான அடியாகத்தான் விழும். இந்த அடி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்க்கக் கூடியதாகத்தான் அமையும்.

இதனால் இத்தேர்தல், போராட்டத்தின் இலக்கினைத் திசை திருப்பிவிடக்கூடிய ஒன்றாக அல்லது போராட்டத்தின் வீச்சினைப் பாதிக்கக்கூடிய ஒன்றாக இல்லாவிடினும், எதுவித பிரச்சினைகளுமின்றி இத்தேர்தல் நடைபெறுவது எமக்கு சாதகமில்லை. அதேவேளை இத்தேர்தலை நடாத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கெதிரான நடவடிக்கைகளைத் தாம் ஆரம்பித்துள்ளதாக நினைப்போர் வரலாற்றை ஒரு தடவை திரும்பிப் பார்த்துக்கொள்ளல் நல்லது.

இத் தேர்தல்களை நடாத்துவதற்கான ஆயத்தங்கள் ஒருபுறம் இருக்க, இராணுவத்தை மீள ஒருங்கமைத்து பாரிய தாக்குதலினை நடாத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பாக புதிய இராணுவத் தளபதி கவனம் செலுத்தத் தொடங்கி உள்ளார். இராணுவத் தளபதிகளிடையே நீண்ட காலமாக இருந்துவரும் முரண்பாடுகளை புதிய தளபதி வெற்றி கொள்வார் என்ற எதிர்பார்ப்பும் இனவாதிகள் மத்தியில் எழுந்துள்ளது. முன்னாள் இராணுவத் தளபதியான சிசில் வைத்தியரட்னவுக்கு இருந்திருக்காத பாதுகாப்பு உயர் மட்டத்தினர் ஆதரவு, புதிய தளபதிக்கு இருப்பதாக கொழும்புப் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இராணுவ ரீதியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை நசுக்கிவிட வேண்டும் என்ற பகற்கனவில் இருந்து இனவாத சக்திகள் இன்னும் விடுபடுவதாக இல்லை.

அதேவேளை, சிறீலங்கா அரசு மீண்டும் அரசியல் தீர்வு குறித்துப் பேசிக்கொண்டு, இராணுவத் தீர்வுக்கான நடவடிக்கைகளைத் தொடரும் அணுகுமுறையினைப் பரீட்சிக்க விரும்புவது போலத் தென்படுகிறது. அண்மையில், பேச்சுவார்த்தைக்கு வருமாறு விடுதலைப் புலிகளுக்கு சிறீலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பு இதனை வெளிப்படுத்துகிறது. இவ் அழைப்பின்போது, புலிகள் தமது கோரிக்கைகள் என்ன என்பதனை வெளிப்படுத்த வேண்டும் என்றும் சிறீலங்காப் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இது புலிகள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதற்காகவே விடுக்கப்பட்ட பேச்சுவார்த்தை அழைப்பாகும். எந்த வகையான நிபந்தனைகளுடனான பேச்சு வார்த்தைக்கும் புலிகள் முன்வரமாட்டார்கள் என்பதை சிறீலங்காப் பிரதமர் உணராமலில்லை. மேலும், தமிழீழ மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக சமஸ்டி முறையினை சிறீலங்கா அரசு முன்வைப்பின், அதனைப் பரிசீலிக்க தயாராக இருப்பதாக ஏற்கனவே விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். அதன் பின்னரும் பந்து விடுதலைப் புலிகளிடம் இல்லை என்பது சிறீலங்காப் பிரதமருக்கு புரியாமல் இருந்திருக்காது. எனினும் விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்ள முடியாத அழைப்பை விடுவதன் மூலம், விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கு தயாராக இல்லை எனும் பிரச்சாரத்தினை ஆரம்பிப்பதற்கான முயற்சியே இவ் அழைப்பாகும். இராணுவத் தீர்வு முயற்சிக்கு நியாயம் காட்டும் நடவடிக்கையில் சிறீலங்கா பிரதமர் இறங்கியுள்ளார் என்பதனை மிக இலகுவாகப் புரிந்துகொள்ள முடிகின்றது.

இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணவிரும்பின் மிக இலகுவான வழி உண்டு. எம்மை எமது வழியில் போகவிடுவதுதான் அவ் வழி. ஒன்றாக வாழவிருப்பமற்ற மக்கள் கூட்டத்தினை இழுத்துக்கட்டி வைத்திருப்பதில் யாருக்கு என்ன இலாபம்? இலங்கைத் தீவு இரண்டு நாடுகள் ஆவதில் யாருக்கு என்ன நட்டம்? நட்டக்கணக்கு பார்ப்பவர்களுக்கு ஒரு வார்த்தை; இழுத்துக் கட்டிப்போட முயற்சிப்பதனால் ஏற்படும் நட்டத்தினைப் போல பிரிவதனால் பாரிய நட்டம் ஏதும் வரப்போவதில்லை. இது மிக எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய ஒரு கணக்கு. புரிய வேண்டியவர்களுக்கு இது புரியுமோ ? ■

# யுத்தம் எல்லை கடந்து விரிவடைகிறது

சிறீலங்கா அரசாங்கம் கொள்ளுப்பிட்டிச் சந்தியின் தெற்கு பகுதியிலிருந்து கொழும்புத் துறைமுகத்தின் தென் பகுதி வரை ஒன்றரை மைல் அகல கரையோரக் கடல் பகுதியை தடைவலயமாக அறிவித்துள்ளது.

இது யுத்தம் எல்லை கடந்து விரிவடைவதற்கு சான்றாக உள்ளதெனவும், இவ்யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வராவிட்டால் வடக்கு -கிழக்கு மாகாணங்கள் மட்டுமல்ல இலங்கைத் தீவு முழுதிலுமே மக்கள் யுத்த அழிவுகளுக்கும் பீதிக்கும் ஆளாகி வாழவேண்டி இருக்குமெனவும் கொழும்பு அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ■

## சிறீலங்கா ஆயு....

**மே 22:** பிரேமாவின் மெய்ப் பாதுகாப்புக் குழு கலைப்பு.

**மே 23:** ஜெனரல் சேபால ஆட்டிக்கல பாதுகாப்பு ஆலோசகராக நியமனம்.

**மே 26:** டென்சில் கொப்பேகடுவ மரண விசாரணை ஆரம்பம்.

**யூலை 09:** முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல, ஐ. தே. க. அரசு மீது கூறியிருந்த குற்றச்சாட்டுக்கள் வாபஸ்.

**யூலை 21:** சிறீலங்கா அரசின் அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் அரச ஊழியர் மறியல்.

**யூலை 28:** வெலிக்கடையில் தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம்.

**ஆகஸ்ட் 02:** பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலில் குண்டுவெடிப்பு; 6 தமிழர் பலி; 35 பேர் படுகாயம்.

**ஆகஸ்ட் 03:** சிறீலங்காவின் அரசியலமைப்பைத் திருத்தி அமைப்பது குறித்து ஆராய தெரிவுக்குழு நியமிக்க பாராளுமன்றம் அங்கீகாரம்.

**ஆகஸ்ட் 08:** இனப்பிரச்சினை ஐ. நா. மத்தியஸ்தம்; சிறீலங்கா நிராகரிப்பு.

**செப். 06:** கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் கலைப்பு; பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு அமைப்பு; பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும், பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராகவும் ஜெனரல் கமில்டன் வனசிங்க நியமனம்; ஏயர் வைஸ் மார்சல் வோல்டர் பர்னாண்டோ ராஜினாமா.

**செப். 10:** கொழும்புத் துறைமுகத்திற்குப் பிரான்ஸ் போர்க் கப்பல்.

**செப். 15:** கடற்படை உயர்பீடத்திற்கு புதியவர்கள் நியமனம்; இராணுவத்தில் பிரிகேடியர்களாக 11 பேருக்கு பதவி உயர்வு.

**நவம். 05:** பல்கலைக்கழக அனுமதி முறையை ஆராய 8 பேர் கொண்ட குழு நியமனம்.

**நவம். 10:** வரவு செலவுத் திட்டம்.

**நவம். 11:** ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினராக அநுரா பதவி ஏற்பு.

**நவம். 19:** பூநகரித் தளம் வீழ்ச்சியை விசாரிக்க இராணுவ விசாரணைக் குழு.

**நவம். 22:** கிளிநொச்சி - யாழ்ப்பாணம் இணைப்பதிகாரியாக பிரிகேடியர் அசோக ஜெயவர்த்தனா பதவி ஏற்பு.

**நவம். 27:** வடக்கு நடவடிக்கை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா நியமனம்.

**நவம். 30:** வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநராக லயனல் பர்னாண்டோ.

**டிசெ. 04:** இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்ன பதவி விலகல் சமர்ப்பிப்பு.

**டிசெ. 17:** உயர்கல்வி அமைச்சராக அநுரா பதவி ஏற்பு.

**டிசெ. 20:** மத்திய மாகாண சபையின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் கடத்தல்; தொண்டமான் செல்லச்சாமி முரண்பாடு.

**டிசெ. 21:** மத்திய மாகாண முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம்; அவை முதல்வரால் நிராகரிப்பு.

**டிசெ. 31:** இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்ன பதவி விலகல். ■





எமது சகல கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில், பெண்போராளிகளின் பங்கு பற்றி எழுதப்பட்ட, Women Fighters Of Liberation Tigers என்ற நூலினை விடுதலைப்புலிகளின் சகல வெளிநாட்டுக் கிளைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இடிந்த துயர் வாழ்வினிலே**
**எம் கண்ணீர்ச் சோரியிலே**
**விடிந்த தொரு நாள் புதிதாய்**
**விண்மீனில் ஒளி கண்டோம்**

சிறீலங்கா வான்படையின் 'புக்காரா' குண்டுவீச்சு விமானத்தினால் 13. 11. 1993 இல் அழிக்கப்பட்ட, 132 ஆண்டுகள் பழமை வாய்ந்த யாழ். குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் சிதைவடைந்த தோற்றத்தினை, எம்தேசத்து மக்களும், சர்வதேச மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்ட, நத்தார், புதுவருட வாழ்த்து மடலின் (1993 மார்கழி) அட்டைப் படம் மேலே இடம் பெற்றுள்ளது.



132 ஆண்டுகள் பழமை வாய்ந்த யாழ்ப்பாணம், குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் சிதைந்த தோற்றம்.
(அழிப்பு 13. 11. 1993)


U.T.O
211 Katherine Road
London E6 1BU, UK
T/F 081-470 8593

L.T.T.E
Postbox 47, 7600 Struer
Denmark. Tel/Fax
97-841231

W.T.C.C
HOF JECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 081-831797

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 34
90139 Palermo, Italy
T/F091-611 3179

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel 435 81142 F435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo - 1, Norway
Tel 022-191260 F-190114

T.C.C
Groot Hertoginnelaan 106
2517 BL Den Haag, Nederland
Tel 070-346 1963 F-384 0683

T.C.C
Glomminge Grand-29
16362 Spanga, Sweden
Tel 08-7612943


Printed by Observer Group Newspapers.